ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

ஸ்ரீபரமபதஸோபாநம்.

A. ஸ்ரீநிவாஸராகவன், M.A.,
புதுக்கோட்டை.

1938.

லை அணா ஆறு.

PL22:47
N38
121208

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

ஸ்ரீபரமபதஸோபாநம்.

A. ஸ்ரீநிவாஸராகவன், M.A.,
புதுக்கோட்டை.

1938.

விலை அணா ஆறு.

விஷயஸூசிகை.

பதிப்புரை	....	iii
முகவுரை	....	v
நித்யவிபூதி வைபவம்	....	xvii
ஸ்ரீபரமபதஸோபாநம்		
தனியன்கள்	....	2
1. விவேகபர்வம்	....	3
2. நிர்வேதபர்வம்		7
3. விரக்திபர்வம்	....	14
4. பீதிபர்வம்	....	29
5. ப்ரஸாதனபர்வம்	....	35
6. உத்க்ரமணபர்வம்	....	47
7. அர்ச்சிராதி பர்வம்	....	55
8. திவ்யதேசப்ராப்தி பர்வம்	....	63
9. ப்ராப்தி பர்வம்	....	76
ப்ரமாண ஸூசிகை		
i ஸம்ஸ்க்ருதம்	....	105
ii தமிழ்	....	110
ப்ரமாண ஸங்க்ரஹம்		
i ஸம்ஸ்க்ருதம்	....	117
ii தமிழ்	....	119
ஆகரம் தெரியவேண்டியவை	....	120
பரமபதஸோபாநப் பாசுரங்கள்	....	121
பதஸூசிகை	....	122
பெயர் குறிக்கப்பட்ட கிரந்தங்கள்	....	129
உபாக்யானங்கள்		
i தர்மபுத்ரன் நரகமார்க்கத்தின் படிகளைக்கேட்டு மூர்ச்சித்தது	....	129
ii மது கைடபர்களின் வ்ருத்தாந்தம்	....	131
iii வைதிகன்புத்திரர்களைக் கொண்டுவந்தது	....	131
iv புண்டரீகன் முக்திபெற்ற ப்ரகாரம்	....	133

ஸ்ரீ:

பதிப்புரை.

ஸ்ரீபரமபதஸோபாநம் என்ற ரஹஸ்யம் இதற்கு முன் மூன்று நான்கு தடவைகளில் அச்சிடப்பட்டிருந்தாலும், அதன் உபயோகத்தையும் பெருமையையும் உத்தேசித்தே அடியேன் இப்போது பதிப்பிக்கத் துணிந்தேன். ஸ்ரீதேசிகனுடைய முப்பத்திரண்டு ரஹஸ்யங்களையும் கிடைத்தமட்டில் இம்முறையில் நன்றாக சோதித்துப் பதிப்பிக்கவேண்டும் என்ற விருப்பம் இருப்பதாலும் ஸாரஸாரம் முதலான பதினொரு சில்லறை ரஹஸ்யங்களோடு ஹஸ்திகிரி மாஹாத்ம்யத்தைச் சேர்த்தது போல் இதையும் சேர்த்து வெளியிடுகிறேன். பல இடங்களில் சிறந்த பொருளையுடைய மிகவும் ஸரியான புதிய பாடங்கள் கிடைத்ததும் ஒரு காரணம்.

ஸ்ரீதேசிகனுடைய கிரந்தங்கள் அழகாகவும் சுத்தமாகவும் வெளிவந்து உலகில் பரவவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு மாத்ருகையை சோதித்தும், ப்ரமாணங்களுக்கு ஆகரங்களைத் தேடிக்கொடுத்தும், கஷ்டமான இடங்களில் பொருளை விளக்கியும் புஸ்தகம் அச்சானபிறகு பின்னுமொருமுறை சோதித்தும் இப்படிப் பலவாறாக அடியேனுசார்யரான திருக்கோட்டியூர் ஸ்ரீ. உ. வே. ஸௌம்யநாராயணுசார்யஸ்வாமி செய்தருளின உபகாரத்திற்கு அடியேன் க்ருதஜ்ஞதையை ஸப்ரணமம் வெளியிடுவது தவிர செய்யக்கூடியது வேறில்லை.

உபயோகிக்கப்பட்ட கிரந்தங்கள்.

1. திருக்கோட்டியூர் ஸ்ரீஸ்வாமி திருமாளிகையில் இருக்கும் சுத்தப் பிரதியான ஓலையேடு. இதுவே ப்ரதானமாகக் கொண்டு மூலத்தில் போடப்பட்டிருக்கிறது.

2. கும்பகோணம் ஸ்ரீ கோமளாம்பா ப்ரஸ்ஸில் சின்னமுரெ. ஸ்ரீநிவாஸபாட்ராசார்யஸ்வாமியால் அச்சிடப்பட்டது. (1931)—க என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

3. கொ. ஸ்ரீநிவாஸராகவாசார்யஸ்வாமியால் பரிசோதிக்கப்பட்டு சென்னை ஸ்ரீ நிகேதன அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது. (1897)—வ.

4. மஹாமஹோபாத்யாய சேட்டலூர் ஸ்ரீ நரஸிம்மா சார்யஸ்வாமியால் இயற்றப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்புடன் கலாரத்னாகரம் முத்ராக்ஷர சாலையில் அச்சிடப்பட்டது (1926)— ம.

5. ஸ்ரீ பவுண்டரீகபுரம் ஸ்ரீஸ்வாமி ஆச்ரமத்தில் உள்ள ஓலையேடு—வ.

முதலாவது தவிர மற்ற எல்லாவற்றிலும் பாடங்கள் பெரும் பாலும் ஒரேமாதிரியாயிருப்பதால் அவை எல்லாவற்றையும் 'க' என்று காட்டிவிட்டு, அவைகளுக்குள் இருக்கும் பேதங்களை மட்டும் அந்தந்த அக்ஷரங்களால் காட்டியிருக்கிறேன். தவறாக ஏதாவது விடப்பட்டிருப்பின் தேசிக பக்தர்கள் க்ஷமிப்பார்களாக.

முகவுரை எழுதும்போதும் க்ரந்தம் அச்சாகும்போதும் முழுவதும்பார்த்து பல சிறந்த யோசனைகளைக் கூறின ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. கோவிந்தாசார்யஸ்வாமிக்கும் ஸௌஹ்ருத்தான ஸ்ரீ கோபால அய்யங்கார் ஸ்வாமிக்கும் அடியேன் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகரம் தெரியாத பல சுலோகங்கள் தனியாக எடுத்து அச்சிடப்பட்டிருக்கின்றன. எதற்காவது ஆகரம் தெரியுமானல் அறிஞர்கள் அடியேனுக்கு அறிவித்து உபகரிக்கவேண்டும் என்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

புதுக்கோட்டை,
14—3—38

ஸ்ரீநிவாஸராகவன்.

இந்தப் பரம புருஷார்த்தமான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் பரமபதம் அல்லது ஸ்ரீவைகுண்டம் என்னும் பெயருடைய தேச விசேஷத்தில் சென்றவனுக்கு உண்டாகிறதென்பதும் சாஸ்திரங்களிலிருந்து கிடைக்கிறது. [1]'அது ரஜஸ் என்னும் ப்ரக்ருதிக்கு மேல் உள்ளது' என்றும், [2]'தமஸ்ஸுக்கும் அப்பால் இருக்கிறது' என்றும் சுருதிகள் ஓதுகின்றன. அப்படியே [3]'அது விஷ்ணுவினுடைய பரமமான பதம்,' [4]'விஷ்ணுவினுடையதான அந்தப் பதத்தை ஸூரிகள் எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்,' [5]'அது அக்ஷரமான பரமவ்யோம அல்லது பரமாகாசம்,' [6]'அது தேவர்களான நித்யஸூரிகள் நகரமான அயோத்யை,' [7]'அது பரப்ரஹ்மத்தின் உலகம்,' இதுமுதலான வாக்கியங்களும் அவ்வுலகையேகூறுகின்றன. வேதார்த்தங்களை வ்யாக்யானம் செய்துவந்த இதிஹாஸபுராணங்களும் அவ்வுலகத்திற்கு [8]'வைகுண்டம்' என்று பெயர் என்றும், [9]'அது ஸூரியன் அக்நி இவர்களுடைய தேஜஸ்ஸைக் காட்டிலும் மிகவும் ப்ரகாச மானது' என்றும், [10]''அவை ஞானநந்தமயமான உலகங்கள் என்றும்,' [11]'அதன் பெருமையை அறிந்தவனுக்கு ஸ்வர்க்காதி

---

1 ரஜஸः பராகெ (தை. ஸம். 2. 1. 12.)

2 தமஸः பரஸ்தாத் (பாராஷஸ்-)

3 தத்விஷ்ணோः பரமம் பதம் (ருக்வேத)

4 தத்விஷ்ணோः பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரயः (ந்ருஸிம்ஹதாபநீய)

5 தத க்ஷரெ பரமெ வ்யோமந

6 தெவாநாம் பூரயோத்யா (தை. ஆர. 1. 2. 7.)

7 ப்ரஹ்மலோகெ த்ருதீயஸ்யாமிதோ திவி (கௌஷீதகி) (ஸ்ரீஜாபதெஸ்ஸலாம் வெஶ்மாஸா.)

8 லோகம் வைகுண்டநாமாநம்

9 அத்யர்கா நலதீப்தம் தத்

10 ஜ்ஞாநாநந்தமயா லோகாः

11 யத்தெ வெ நிரயாஸ்தாத

லோகங்கள் எல்லாம் நரகதுல்யங்களாம்' என்றும், [12] 'அங்கு காலத்தினுல் ஏற்படும் வேறுபாடுகள் ஒன்றும் கிடையாது' என்றும் விரித்து உரைக்கின்றன.

இதை அடைந்தவர்கள் மறுபடியும் ஸம்ஸரிக்கமாட்டார்கள் என்பதும் கூறப்பட்டிருக்கிறது.

பகவதநுக்ரஹத்தால் ஸர்வஜ்ஞர்களான ஆழ்வார்களும் அவற்றை அடியொற்றி இந்நாட்டைப் பற்றி, 'சேணுயர் வானம்,' 'தெளிவிசும்பு,' 'மாக வைகுந்தம்,' 'நலமந்தமில்லதோர் நாடு,' 'கலங்காப் பெருநகரம்,' என்று அருளிச் செய்தார்கள். புநராவ்ருத்தி இல்லை என்பது 'பிணை கொடுக்கிலும் போகவொட்டார்' என்பதால் காட்டப்பட்டது. இவ்விஷயங்களை சுருக்கமாக ஆளவந்தார் பட்டர் முதலான பூர்வாசார்யர்கள் தங்கள் ஸ்தோத்ரங்களிலும், ஸ்ரீ பாஷ்யகாரர் வைகுண்டகத்யத்திலும் அநுஸந்தித்துள்ளார்கள்.

இப்படிப்பட்ட பரமபதம், இதையடையும் வழி, அதைப் பெறும் அதிகாரிக்கு வேண்டிய குணங்கள் இவையே அத்யாத்ம சாஸ்திரங்களில் கூறப்படுகின்றன. ஶாரீரகஸூத்ரம் முதல் இரண்டு அத்யாயங்களால் பரப்ரஹ்மத்தையும், மூன்ருவதால் உபாயமான உபாஸநத்தையும் நான்காவதால் பலத்தையும் கூறிற்று. பகவத்கீதை உபாயமான பக்தியோகத்தை அதன் அங்கங்களோடு கூட விஸ்தாரமாக உபதேசித்து, அதில் சக்தியற்றவனுக்கு சுலபமான ப்ரபத்தி என்னும் மற்றொரு உபாயத்தையும் காட்டிக் கொடுத்தது. பகவச்சாஸ்திரங்கள் இந்தப் பிரபத்தியின் அங்கங்களையும் அது ஸகலபலஸாதனம் என்பதையும் விரித்து உரைத்தன.

இப்படி அநந்தமான அத்யாத்ம சாஸ்திரங்களில் அங்கங்கு சிதறியும் சுருங்கவும் பரக்கவும் கிடக்கும் விஷயங்களையெல்லாம் அளவுபெற்ற பலம், ஞானம், ஆயுள், முதலியவற்றையுடைய நாம் அறியமுடியாததை அறிந்து நம் ஆசார்யச்ரேஷ்டரான ஸ்ரீ வேதாந்ததேசிகன் அவற்றைக் கடைந்து ஸாரமான அர்த்

---

12 ந காலஸ்தத்ர வை ப்ரபு:

ஸ்ரீ:

முகவுரை.

இவ்வுலகில் பரஸ்பரம் அபிப்பிராயபேதமுள்ள பல மதங்கள் இருந்தபோதிலும், 'ஸம்ஸாரத்தில் ஸுகம் அல்பமாயும் துக்கம் மிகுதியாயும் இருப்பதால், இதை விட்டு அளவற்ற ஆநந்தத்தை அடைய முயற்சிப்பதே விவேகியான ஒருவன் செய்யத்தக்கது' என்று நிர்ணயிப்பதில் அவை எல்லாம் ஏகமனதாகவே இருக்கின்றன. ஆனால் அவை கைக்கொண்ட பிரமாணங்களுக்கேற்பப் புருஷார்த்தங்கள் வேறுபட்டிருக்கின்றன. வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட வைதிக மதங்களுக்குள்ளேயே இவ்விஷயத்தில் பேதமிருக்கிறது. அத்வைதம் முதலிய மதத்தினர் சில சுருதி வாக்கியங்களைப் பிரதானமாகக்கொண்டு, அவற்றுக்கநுகுணமாக மற்ற வாக்கியங்களை மாற்றி அர்த்தம் செய்தார்கள். விசிஷ்டாத்வைதிகளோவெனில், 'ப்ரஹ்மம் ஒன்றுதான் உள்ளது' என்கிற அபேத சுருதிகளுக்கும், 'ப்ரஹ்மம் வேறு, ஜீவர்கள் வேறு' என்பதுபோன்ற பேதசுருதிகளுக்கும், 'ஸகலசேதனசேதனங்களுக்கும் ஆத்மாவான ப்ரஹ்மம் ஒன்றே' என்கிற கடகசுருதிகளுக்கும், ஒருவித விரோதமும் வராமல், ஸகல வாக்கியங்களுக்கும் முக்யார்த்தத்தையே கொண்டு, வேத தாத்பர்ய நிர்ணயத்தைச் செய்தார்கள். அதனால் மற்ற ஸித்தாந்தங்களைக் காட்டிலும் இந்த ஸித்தாந்தத்திற்கு ஏற்றமுண்டு.

இப்படிப்பட்ட நம் ஸித்தாந்தத்தில் முக்கியமாக ஒருவன் தெரிந்துகொள்ளவேண்டியது தத்வம், ஹிதம், புருஷார்த்தம் என்ற மூன்றுமே. ஸகல சேதநாசேதநங்களையும் சரீரமாகக் கொண்ட ஜகத்காரணமான ஸ்ரிய:பதியான நாராயணனே பரதத்வம்; அவனுக்குப் பிரஸாதகமான பக்தி அல்லது ப்ரபத்தியே பரமஹிதம்; இவ்வுபாயத்தினால் ப்ரஸன்னனான பகவானை அடைந்து உபயவிபூதி விஶிஷ்டனான அவனை அநுபவித்து அவனுக்குக் கைங்கர்யம் செய்துகொண்டிருப்பதே பரமபுருஷார்த்தம்.

தங்களைத் தன் ரஹஸ்யக்ரந்தங்களில் நிரூபித்தருளினார். அவையும் ஸர்வாதிகாரமாக இருக்கவேண்டும் என்று அவற்றை மணிப்ரவாள நடையில் அருளிச் செய்தார். ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்தில் எல்லா விஷயங்களும் விஸ்தாரமாக ப்ரமாணம், உபபத்தி, ஸம்ப்ரதாயம் இவற்றைக்கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வர்த்தங்களில் சிலவற்றை ஒரு ரஹஸ்யத்திலும், வேறு சிலவற்றை வேறொன்றிலும் ப்ரதானமாகக் காட்டியிருக்கிறார். உதாரணமாக ஸாரஸாரத்தில் முமுக்ஷுவுக்கு உத்தாரகமான மூலமந்த்ரம் முதலான ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹித்தார். அபயப்ரதானஸாரத்தில் ப்ரபத்தியால் வசம் செய்ய வேண்டிய சரண்யனுடைய வைபவம் கூறப்பட்டது. ரஹஸ்ய சிகாமணியில் ப்ரபன்னர்களுக்கு அந்திமஸ்ம்ருதி ஸ்வயத்நத்தாலேயே அடையவேண்டியதொன்றன்று என்பதும் அஞ்ஜலி வைபவத்தில் ப்ரபத்தி ஸகலபாபத்தையும் போக்கும் என்பதும் காட்டப்பட்டது. பரமபதஸோபானத்தில் உபாயத்தை அநுஷ்டித்தஅதிகாரி இங்கும் பரமபதத்திலும் பெறும் லாபங்கள் விசேஷித்து விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றன.

இந்தப் பரமபதஸோபாநத்தில் கூறப்படும் விசேஷங்கள் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களில் பக்தியோகநிஷ்டனுக்கே சொல்லப்பட்டிருந்தாலும், ப்ரஹ்மவித்யைகளில் ஒன்றான ந்யாஸவித்யையை அனுஷ்டிக்குமவனுக்கும் அவ்விசேஷங்கள் வரும் என்பதில் ஆக்ஷேபம் இல்லை. ஆனால் இதில் விசேஷித்துக் கூறப்படும் கதிசிந்தநமானது பக்தியோகநிஷ்டனுக்கு உபாயாங்கமாக விதிக்கப்பட்டது. கதிசிந்தனமாவது: ஒரு ஜீவன் ஹ்ருதயத்திலிருந்து மேலே செல்லும் நாடிகளில் மோக்ஷத்திற்கு வழியான மூர்த்தந்ய நாடியால் சென்று, ப்ரஹ்மரந்த்ரத்தின் வழியாக வெளிக்கிளம்பி ஸூர்யமண்டலத்தைப் பிளந்துகொண்டு அர்ச்சிராதிகதியால் சென்று, ஸ்ரீவைகுண்டத்தை அடையும் ப்ரகாரத்தையும் அவனுக்கு வழியில் நடக்கும் விசேஷங்களையும் கடைசி சரீரத்தை விடுமளவும் மற்ற நிகழ்ச்சிகளையும் தினமும் சிந்திப்பதேயாகும். இவ்வர்ச்சிராதிகதியும், இதனால் சென்று அடையும் பரமபதம் என்னும் நாடும், அந்நாட்டிலுள்ள பொருள்களின் ஸ்வரூபஸ்வபாவங்களும் சாந்தோக்யம் ப்ருஹதாரண்யகம்,

கௌஷீதகி முதலான உபநிஷத்துக்களிலும், சாகடாயந ஸம்ஹிதை ஜிதந்தே முதலான பகவச்சாஸ்த்ரங்களிலும் வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. ஆழ்வார்களும், 'சூழ்விசும்பணிமுகில்' என்னும் (பத்தாம்பத்து ஒன்பதாவது திருவாய்மொழி) பதிகத்தில் அவர்களுள் ப்ராதனரான நம்மாழ்வாரும் இந்நாட்டையும் அங்கு செல்லும் முக்தனுக்கு நடக்கும் உபசாரங்களையும் அருளிச் செய்துள்ளார்கள். ஸம்ஸ்க்ருத-த்ராவிட வேதங்களிலும் மற்ற சாஸ்திரங்களிலும் கூறினதைத்தொகுத்து வைகுண்ட கத்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அநுஸந்தித்தார்.

இப்படி கதிசிந்தன விஷயமாக ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் கூறிய விஷயங்களையெல்லாம் ஸப்ரமாணமாக ஆழ்வார்களினுடைய அருளிச் செயல்களைக் கொண்டே தொடுத்து ஸ்ரீ தேசிகன் பரமபதஸோபாநம் என்னும் ரஹஸ்யமாக வெளியிட்டருளினர். பக்தனுக்குப்போல ப்ரபந்நனுக்கு இந்த கதிசிந்தநம் வித்யைக்கு அங்கமாய் அனுஷ்டிக்கவேண்டும் என்று விதி இல்லாவிட்டாலும்,ப்ரபந்நன் ஸம்ஸாரதோஷத்தைக்கண்டு அதில் வெறுப்படைவதற்காவும் தன்னுடைய அல்ப உபாயத்திற்காக இவ்வளவு பெருமையையும் தந்தருளுகிற பகவானுடைய குணங்களை நினைத்து ஸந்தோஷிக்கவும், உபாயபலமாகத் தான் பெறப் போகும் புருஷார்த்தங்களை நினைத்து பேராநந்தம் அடைவதற்காகவும், அப்பேர்பட்ட எல்லையில் பேரின்பத்தை உடனே பெற வேண்டும் என்று ஆவலும் த்வரையும் ஏற்படுவதற்காகவுமே ப்ரபந்நனுக்கு இது கூறப்படுகிறது.

பட்டர் தன் அந்திம தசையில், "இன்னும் சிறிதுகாலம் இங்கே விட்டுவைத்தாராகில் பரமபதத்திற்குச் சுருளும்படியும் கட்டி வைக்கேனோ!" என்று அருளிச்செய்தாராம். ஸ்ரீ தேசிகன் இதற்கு 'பரமபதஸோபாநம்' என்ற பெயர் வைத்ததையும், விஷயங்களை ஒன்றின்மேல் ஒன்றாக படிகள் போல நிரூபித்திருப்பதையும் பார்த்தால், இந்த ஐதிஹ்யம் மனத்தில் ஓடி பட்டர் திருவுள்ளத்தைப் பூர்த்திசெய்ய நினைத்தே இப்பிரபந்தத்தைச் செய்தருளினர் என்று சொல்லலாம்போலிருக்கிறது. மோக்ஷமென்னும் உயர்ந்த ஸ்தானத்தை கஷ்டமான வழி

களால் அடையமுடியாத அசக்தர்கள் ஒவ்வொரு படியாக எளிதில் ஏறி அதை அடையும் ப்ரகாரத்தையும், முதல்படியில் ஏறினவனே இரண்டாம்படியில் ஏறமுடியும் என்பதையும் இப் பிரபந்தத்தாலும் இதன் பெயராலும் காட்டுகிறார்.

பரமபதஸோபாநம் (அல்லது பரமபதத்தைக் கிட்டுவிக்கும் படிகள்) என்னும் இந்த ரஹஸ்யம் ஒன்பது பர்வங்கள் கொண்டது. இவற்றுள் முதல் நான்கையும் 'அதிகாரபேடிகை' என்று ஒரு வகுப்பாகவும், ஐந்தாவதை 'உபாயபேடிகை' என்றும், கடைசி நான்கையும் 'புருஷார்த்த பேடிகை' என்று ஒரு வகுப்பாகவும் பிரிக்கலாம். அதிகார பேடிகையில் சொன்ன குணங்கள் கொண்டவனே உபாயபேடிகையில் சொன்ன உபாயத்தை அநுஷ்டிக்கலாம்; அவ்வுபாயத்தை அநுஷ்டித்தவனுக்கே புருஷார்த்தபேடிகையில் சொன்ன பயன் கிட்டும். அதாவது ஒரு ஜீவாத்மா விவேகத்தை ஸம்பாதித்து, அதனால் நிர்வேதத்தை அடைந்து, விரக்தியைக் கைக்கொண்டு, பீதியுள்ளவனாய், பகவத்ப்ரஸாதநமான உபாயத்தை அநுஷ்டித்து, சரீராவஸாநத்தில் இச்சரீரத்திலிருந்து உதக்ராந்தியைச் செய்து, அர்ச்சிராதிகதியாலே சென்று, திவ்யதேச ப்ராப்தி பெற்றவனாய், பராப்தி என்னும் பரமபுருஷ லாபத்தைப் பெறும் ப்ரகாரமே இவ்வொன்பது பர்வங்களிலும் நிரூபிக்கப்படுகிறது.

i. இதில் முதல்படி விவேகம்: அசேதனம், சேதனம், ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களின் ஸ்வரூபஸ்வபாவங்களை அறிந்து 'தானும் பிறரும் தனக்கு சேஷியும் தஞ்சமும் போக்யமும் அன்று' என்று நிச்சயிப்பது.

ii. இரண்டாவது நிர்வேதம்: அதாவது ஸதாசார்யோபதேசத்தால் விவேகம் பெற்றவன் தான் இவ்வளவு நாட்களாக அர்த்தகாமங்களுக்காக மனம்போனபடி செய்த பாபங்களையும் அதன் பலமாக வரும் நரகயாதனைகளையும் சாஸ்த்ரங்களிலே கேட்டு மனந்தளர்ந்து இனி பாபத்தைச் செய்வதில்லை என்று அதிலிருந்து நீங்குவது.

iii மூன்றாவது விரக்தி. ஐச்வர்ய கைவல்யங்களின் தோஷத்தைக் கண்டு அவற்றில் ஆசையை விடுவது, பாபத்

தைச் செய்யாததினால் நரகத்தை ஸம்பாதிக்காமற்போனாலும் அல்பஸுகமுள்ள ஸ்வர்க்காதிகளில் ஆசை ஏற்பட்டால் அதனால் பேரின்பமானமோக்ஷத்திற்கு விக்னமும் விளம்பமும்உண்டாகும். சரீரத்தின் நிலையிலும், சரீரம் படைத்தாருக்கெல்லாம் அதிபர்க ளான சக்ரவர்த்திகளுடைய பதங்களிலும் அப்படியே தேவதை கள், அவர்களுக்குத் தலைவர்களான லோகபாலகர்கள், அவர்களை வெருட்டியடிக்கும் ராவணன் போல்வார், அவர்களையும் கட்டி யடிக்கும் வலிமையுள்ள கார்த்தவீர்யன் முதலானோர், இவர்களை யெல்லாம் அழிக்கவல்ல ருத்ரன், அவனுக்கும் தந்தையான ப்ரஹ்மா எல்லாருடைய ஸ்தானங்களிலிருக்கும் ஆபத்து அழிவு முதலான துன்பங்களை உணர்ந்து அவற்றில் ஆசையை விட வேண்டியது இதில் கூறப்படுகிறது.

iv நான்காவது பீதிபர்வம். இப்படி விவேக நிர்வேத விரக்திகளைக் கைக்கொண்டவன் நரகத்தைப் போலவே ஸ்வர்க் கத்தையும் இகழ்ந்து, எங்கும் துக்கத்தைக் கண்டு நடுங்கி மோக்ஷத்தைத் தரக்கூடிய உபாயத்தை அநுஷ்டிக்க ஊக்கமும் பரபரப்பும் உடையவனாவான்.

v. அவ்வுபாயத்தைக் கூறுகிறது ஐந்தாவதான ப்ரஸா தநபர்வம். அந்த உபாயம் பக்தி ப்ரபத்தி என்று இரண்டு. பக்தி யை அநுஷ்டிப்பதற்கு ஞானம், சக்தி, ஜாதி முதலிய பல குணங் கள் வேண்டும். பலமும் சீக்கிரத்தில் கிடைக்காது. இதெல்லாம் இல்லாதவர்களுக்கே ப்ரபத்தி அல்லது சரணாகதி என்னும் உபாயம் என்றும், இதைச் செய்வோர்களுடைய நோவுக்குத் தக்கபடி மோக்ஷம் சீக்கிரத்தில் கிடைக்கும் என்றும், இதில் கூறப்படுகிறது.

vi. புருஷார்த்த பேடிகையான அடுத்த நாலில் முதலாவது உத்க்ரமண பர்வம். இதில் தன் கடைசி சரீரத்தை விட்டு ஜீவாத்மா பிரிந்து செல்லும் பிரகாரத்தை நிரூபிக்கிறார். ப்ரபந்ந னுக்கு உத்தராயணம் புண்யஸ்தலம் முதலானவற்றில்தான் இறக்கவேண்டும் என்று நியமமில்லை. இவனுடைய புண்ய பாபங்களெல்லாம் இவனுடைய மித்ர சத்ருக்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. கடைசி க்ஷணத்தில் பகவானை ஸ்மரிப்

பது என்னும் அந்திம ஸ்மிருதியை பகவானே செய்துவைத்து பதினொரு இந்திரியங்கள், மனஸ், ப்ராணன் இவற்றை முறையே ஒன்றுசேர்த்து, அத்திரளை ஜீவனிலும், இவற்றோடுகூடின ஜீவனை பஞ்சபூத ஸூக்ஷ்மத்திலும் சேர்த்து, ஹ்ருதயத்திலிருக்கும் தன்னிடம் இளைப்பாற்றுகிறான். பிறகு மேல் நோக்கிச் செல்லும் ஸுஷும்நை என்னும் ப்ரஹ்மநாடியால் ஹ்ருதயத்திலிருக்கும் ஸூக்ஷ்மத்வாரம் வழியாக இவனைக்கொண்டு சென்று ப்ரஹ்மரந்த்ரம் என்ற தலைவாயிலைத் திறந்துகொண்டு புறப்பட்டு வைகுந்தம்புக வழிப்படுத்துகிறான்.

vii. ஏழாவதான அர்ச்சிராதி பர்வத்தில் சரீரத்தைவிட்டுக் கிளம்பின ஜீவாத்மாவுக்கு வைகுண்டத்தை அணுகும்வரையில் நடக்கும் உபசாரங்களை வர்ணிக்கிறார். அர்ச்சிஸ் அல்லது அக்னி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம், ஸம்வத்ஸரம், வாயு இந்த தேவதைகளெல்லாரும் இவனை எதிர்கொண்டு க்ரமமாக தம்தம் எல்லையளவும் அழைத்துச் செல்லுகிறார்கள். அதற்கு மேல் ஸூர்யமண்டலத்தைக் கீண்டுபுக்கு சந்திரனைக்கிட்டி அவன் வழிநடத்த அமானவன் துணையாக முறையே வருணன், இந்திரன், ப்ரஜாபதி இவர்கள் அழைத்துச்செல்ல, கடைசியில் அமானவனே இவனை ப்ரஹ்மத்தினிடம் கொண்டு சேர்க்கிறான். இவ்வழியாலே ப்ரகிருதியைக் கடந்தவனுக்கு மறுபடி பிறவி கிடையாது.

viii. எட்டாவது பர்வம் திவ்யதேசத்தை அடையும் முக்தனுக்கு உண்டாகும் விசேஷங்களை வர்ணிக்கிறது. விரஜையைக் கடந்ததும் ஞானானந்தமயமான உலகத்தையும் அதிலுள்ள ஆறு, மலை, மாளிகைகள் எல்லாவற்றையும் காண்கிறான். ஐந்நூறு அப்ஸரஸ்ஸுக்கள் எதிர்கொண்டு ப்ரஹ்மாலங்காரத்தால் அலங்கரிக்க, ப்ரஹ்மத்தினுடைய திவ்யகந்தம் ரஜஸ், தேஜஸ் இவனிடம் ப்ரவேசிக்கும். பிறகு கோபுரவாயிலைக் கடந்து திருவீதியில் நித்யஸூரிகளும் மதிமுகமடந்தையரும் சூழ்ந்து உபசரிக்கச் சென்று, திருமாமணி மண்டபத்தில் முக்தரும் கருடவிஷ்வக்ஸேனாதிகளான நித்யரும் புடைசூழ ஆதிசேஷன்மேல் நாய்ச்சி

மார்களோடு வீற்றிருக்கும் பரமபதநாதனைக்கண்டு வணங்கு கிறான்.

ix. ஒன்பதாவது பர்வம் முக்தன் இப்படி வீற்றிருக்கும் பகவானோடு சேர்வதைக் கூறுகிறது. அந்த பகவானுடைய திருமேனியழகிலும் அவயவசோபையிலும் ஆபரணச் சேர்த்தி யிலும் ஈடுபட்டு ஒவ்வொன்றையும் அனுபவித்து விவிதஸ்தோத் திரங்களைப் பண்ணுகிறான். அப்போது தன் திருவடிகளாலே பகவான் இவனுக்குப் பூமுடி சூட்ட, அத்திருவடிகளையே பற்றி பகவான் எழுந்தருளியிருக்கும் திவ்ய பர்யங்கத்தின்மேல் ஏறி, பகவான் கேட்க, தான் பெற்ற பேற்றையெல்லாம் கூறி மீளா வடிமைப்பணி கொள்ளவேண்டும் என்று பிரார்த்திக்கிறான். பிறகு பரமசேஷி திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்பெற்று பரபக்தி-பரஞான-பரமபக்தியுக்தனாய், அந்த முக்தன் பகவானை வலம்செய்தும், நிழல் போல் அநுஸரித்தும், குடியடிமை செய் தும் சூழ்ந்திருந்து பல்லாண்டேத்தியும், ஸர்வதேசத்திலும் ஸர்வகாலத்திலும் ஸர்வவித கைங்கர்யங்களையும் நித்யஸூரி களோடு கூடத் தானும்செய்து, மீட்சியில்லா வாழ்ச்சியை அனு பவிக்கிறான்.

இப்படி ஒரு ஜீவன் ஆசார்யனைஆச்ரயிப்பது முதல் மோ க்ஷத்தை அடைந்து பரிபூர்ண ப்ரஹ்மானுபவம்செய்யும் வரை யில் நிகழ்வனவற்றைக் கூறும் இப்பிரபந்தத்தை'ஒரு ஜீவாத்மா வின் சரித்திரம்' என்றே சொல்லலாம். இதன் அமைப்பின் சீர் மையையும் அழகையும் கண்டு 'ஸ்வபாவத்தினாலே மிகவும் அழ கானது' (ஸ்வபாவ-சித்ரம்) என்று ஸ்ரீ தேசிகனே ப்ரபந்த மு டிவில் கூறுகிறார். ப்ரமாணங்களை அநுஸரித்து அவை காட்டின முறையில் விஷயங்களை நிரூபித்திருக்கிறபடியால், குயுக்திகளைக் கொண்டு அசைக்க முடியாமல் உறுதியானது என்பதை 'ஸூஸ் தம்' என்று அருளிச் செய்திருக்கிறார்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த இந்தக் கிரந்தம் ஸ்ரீ தேசிகனு டைய ஆச்சர்யமான பல குணங்களை ஒருங்கே வெளிப்படுத்து கிறது. அநந்தங்களான சுருதிகளிலும் ஸம்ஹிதைகளிலும் அங் கங்கு தனித்தனியே கூறப்பட்ட விஷயங்களையெல்லாம் திரட்டி முமுக்ஷுவான ஒருவனுக்கு அவச்யம் அறியவேண்டியவற்றை

சுருக்கமாக இப்பிரபந்த மூலமாக வெளியிட்டிருப்பது அவர் ஸகல சாஸ்த்ரங்களேயும் அறிந்தவர் என்பதையும் பரமகாருணிகர் என்பதையும் காட்டுகிறது. நினைத்தபடி நிர்மாணம் செய்ய வல்லவராயினும் ப்ரமாணங்கள் போனவழியிலே விஷயங்களேக் கூறி, மேற்கோளாக ப்ரமாணவாக்யங்களேக் காட்டியும், அவற்றிலுள்ள சொற்களேக்கொண்டே தன் வாக்யங்களே இசைத்தும் பிரபந்தத்தைச் செய்தருளியிருப்பதைக் கவனிப்பவர்களுக்கு ஸ்ரீ தேசிகன் ப்ரமாணங்களே விட்டு அணுவளவும் விலகாதவர் என்பதும், இவருடைய ஸ்ரீ ஸூக்திகள் ஆப்ததமங்கள் என்பதும் விளங்கும். வேதங்களேப் போலவே ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களேப் பிரமாணமாக உதாஹரிக்கிறபடியால், த்ரமிடோபநிஷத்துக்களென்னும் திவ்யப்பிரபந்தத்திலும் ஆழ்வார்களிடத்திலும் இவருக்கு இருக்கும்பக்தி வெளியாகிறது. ஒன்பதாவது பர்வத்தில் முக்தன் பகவானே அநுபவிக்கும் ப்ரகாரத்தை வர்ணிக்குமிடத்தில், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளே அழகாக உணர்ச்சிததும்பும் வகையில் இசைத்திருப்பதை ஆராயுமவர்கள், நம் ஆசார்யர் கேவல தார்க்கிகரல்ல, அநுபவம் நிறைந்த இளகிய மனத்தர் என்பதை ஒத்துக்கொள்ளுவார்கள். ஸ்ரீ வைகுண்டகத்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீ வைகுண்டத்தை வர்ணித்த பிறகு பரிவாரங்கள் சூழ ஸர்வாலங்காராலங்க்ருதனைப் (பிராட்டிமார்கள்சூழ எழுந்தருளியிருக்கிற) பகவானே வர்ணித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகையே தன் சொன்வன்மையால் மனதைக் கவரும்படி சித்தரித்துக் காட்டும் கவிகள் போல, ஸ்ரீ தேசிகன் படிப்படியாக சாஸ்த்ரத்தை அறிந்து அநுஷ்டித்துப் பயனேப் பெறும் மார்க்கத்தை மேல்மேல் செல்லும் படிக்கட்டுகளாக நிரூபித்து, அத்யாத்ம சாஸ்த்ரத்தையே பேரின்பமாளிகையைக் கிட்டுவிக்கும் ஸோபாநமாக அழகாகச் சித்தரித்திருப்பது அவர் 'கவி ஸிம்ஹம்' என்பதை எடுத்துக் காட்டுகிறது. வடமொழியிலும் தென்மொழிலும் இனிய கவனங்கள் செய்யவல்லவர் என்பது யாவரும் அறிந்ததே.

இப்படி ஸர்வஜ்ஞத்வம், சாஸ்த்ரவரம்புமீருமை, குருபக்தி, கவியின் திறமை, ஸர்வபூததயை, கவனஸாமர்த்யம் முதலான

பல குணங்கள் நம் ஆசார்யரிடத்தில் இருப்பதாலும் இதுபோல பல கிரந்தங்களை அருளிச்செய்திருப்பதாலும் 'இவர் ஸ்ரீ வேங்கடேசனின் அவதாரம்' என்ற முன்னோர்கள் வார்த்தையும், 'வேதாந்தாசார்யன்,' 'கவிதார்கிகஸிம்ஹம்' என்ற திருநாமங்களும் இவரிடம் பொருட்பட நிற்கின்றன என்பது கூருமலே விளங்கும்.

இவ்வாறு நம் ஆசார்யச்ரேஷ்டர் 'எல்லோரும் உஜ்ஜீவிக்க வேண்டும்' என்கிற உதாரமனதுடன் கட்டிவைத்த ப்ரபந்த ரூபமான ஸோபாநத்தை உலகத்திற்கு நன்கு வெளிப்படுத்தவே அடியேனுடைய பிரயத்னம். ஸ்ரீ தேசிகனும் அவனடியார்களும் அந்தப் பிரயத்னம் ஸபலமாகவேண்டும் என்று அநுக்ரஹிப்பார்களாக.

இக்கிரந்தத்தைப் பதிப்பிக்கும் விஷயத்திலும் அங்கங்கு பொருள்கூற முயற்சித்திருப்பதிலும் அடியேனுடைய அறிவின்மையாலும் தேர்ச்சிக் குறைவினாலும் ஏற்பட்ட பிழைகளை க்ஷமித்து இதை உகப்புடன் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

புதுக்கோட்டை
25-3-1938

ஸ்ரீநிவாஸராகவன்.

நித்யவிபூதிவைபவம்.

'ஸர்வேச்வரன் உபயவிபூதி நிர்வாஹகன்' என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. லீலா விபூதியும் நித்ய விபூதியுமே உபய விபூதி. லீலா விபூதியிலுள்ள ஜீவர்கள் அவரவர்கள் கர்மாநுகுணமாக தேவ-மநுஷ்ய-ம்ருக-ஸ்தாவர சரீரங்களை எடுத்து விழுந்தும் எழுந்தும் ஈச்வரனுக்கு போகத்தைக் கொடுக்கிறார்கள். போகவிபூதி என்னும் நித்யவிபூதியிலோ நித்யர்களும்முக்தர்களும் பகவானை எப்போதும் ஸாக்ஷாத்கரித்து அநுபவித்துக் கைங்கர்யங்கள்செய்து போகத்தைக் கொடுக்கிறார்கள். ஒரு உபாயத்தைஅநுஷ்டித்து இந்த லீலாவிபூதியிலிருந்து அங்கு சென்ற ஜீவர்களே முக்தர் எனப்படுவர்.

லீலா விபூதியைத்தான் ஸம்ஸாரம் என்பது. இது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணம்கொண்ட பிரகிருதிக்குட்பட்டது. இதற்கே அண்டம் எனவும் பெயர் உண்டு. இதில் அதலம் விதலம் ஸுதலம் ரஸாதலம் தலாதலம் மஹாதலம் பாதாளம் என்று கீழேழு லோகங்களும், பூமி அந்தரிக்ஷம் ஸ்வர்க்கம் மஹஸ் ஜனம் தபஸ் ஸத்யம் என்ற மேலேழு லோகங்களும் இருக்கின்றன.

இப்படிப் பதினாலு உலகங்கள் கொண்ட இவ்வண்டத்தைச் சுற்றி ஒன்றைவிட ஒன்று பதின்மடங்கு விஸ்தீர்ணமுள்ள ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், அஹங்காரம், மஹத், அவ்யக்தம் (அல்லது ப்ரதானம், ப்ரக்ருதி) என்னும் ஏழு ஆவரணங்கள் சூழ்ந்து இருக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் அப்பால் 'விரஜை' என்னும் அம்ருத நதி பகவத்க்ருபை போலே ஸர்வகாலத்திலும் ஏக ரூபமாகப் பிரவஹிக்கிறது. மோக்ஷத்திற்குச் செல்லும் ஜீவன் தன் ஸங்கல்பத்தால் இந்த விரஜையைத் தாண்டியே ரஜஸ் தமஸ் கலப்பில்லாத சுத்த ஸத்வமயமான நித்யவிபூதியை அடைகிறான். அங்கு அம்ருதமயமான ஸமுத்திரங்களும் நதிகளும், மணி பர்வதங்களும், மாளிகைகளும், உத்யானங்களும் பக்ஷிகளும் உள்ளன.

அவையெல்லாம் ஞானுநந்தஸ்வரூபமாய், ஒன்றையொன்று தகையாமலும் மறைக்காமலும் தேஜோமயமாய் விளங்குகின்றன. அங்குள்ள பொருள்களுக்கெல்லாம் காலத்தினுல் வேறுபாடு இல்லை. சில நித்யமாய் ஏகரூபமாயும், சில நித்ய முக்தர்களின் ஸங்கல்பத்தையொட்டி அந்தந்தக் கைங்கர்யத்திற்காக சிறிதுபோது நிற்பவையாயு மிருக்கும். ஆச்சர்யமான இவ்வுலகத்தினுடைய பரிமாணம், ஐச்வர்யம் ஸ்வபாவம் எல்லாம் பரமயோகிகளுடைய வாக்குக்கும் மனதிற்கும்கூட எட்டாதவை.

விரஜையைக் கடந்ததும் 'அரம்' 'ண்யம்' என்ற இரண்டு அம்ருதமயமான ஸமுத்ரங்கள், திவ்யோத்யானங்கள், மணி பர்வதங்கள் எல்லாம் இருக்கின்றன. பிறகு 'ஐரம்மதீயம்' என்னும் அரும்த ஸரஸ்ஸையும். 'ஸோமஸவநம்' என்னும் அச்வத்த வ்ருக்ஷத்தையும், அதற்கப்பால் திவ்ய வ்ருக்ஷத்தையும், 'ஸாலஜ்யஸம்ஸ்தான அபராஜிதாயதநங்களேயும் காணலாம். 'அயோத்யை' என்றும் 'அபராஜிதை' என்றும் கூறப்படும் ஸ்ரீ வைகுண்ட நகரம் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு உயர்ந்த மதிள்களால் சூழப்பட்டதாய் அங்கே விளங்குகிறது. நகரவாயிலுக்கு இந்த்ரன் ப்ரஜாபதி என்பவர் த்வாரபாலகர்கள். நகரத்தின் உள்ளே மணிபர்வதங்களே அடுக்கிவைத்தாற்போல் அழகிய மாளிகைகள் இருபக்கமும் திகழும் வீதிகள் ஸர்வேச்வரன் எழுந்தருளியிருப்பதும் ஆயிரங்கால்களேயுடையதும் ஹிரண்யமயமானதுமான திவ்யவிமானத்தை நோக்கிச் செல்கின்றன. இதுவே சாந்தோக்யோபநிஷத்தில் 'ப்ரஜாபதியினுடைய ஸபை' என்று ஓதப்படுகிறது.

இவ்விமானத்தின் எட்டுமூலேகளிலும் குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமனன், சங்குகர்ணன், ஸர்வநேத்ரன், ஸுமுகன், ஸுப்ரதிஷ்டிதன் என்ற எட்டு கணுதிபதிகள் ஆயுத பாணிகளாய் வாஹனுரூடராய் பரிவாரங்கள் புடைசூழப் பரிவுடன் ரக்ஷித்துக்கொண்டு நிற்கிருர்கள். நான்குபுறத்திலும் வாயிலுக்கு இருவராக சண்டன் ப்ரசண்டன், பத்ரன் ஸுபத்ரன், ஜயன் விஜயன், தாதா விதாதா என்ற எட்டு த்வாரபாலகர்கள் காத்துவருகிருர்கள். அதற்குள்ளே கஜாநநன், ஜயத்ஸேனன் முதலான பரிவாரங்கள் சூழ்ந்திருக்க, தன்மஹிஷியான ஸுஆத்ர

வதியோடு ஸேனாதிபதியாழ்வான் என்னும் விஷ்வக்ஸேனர் ஆஸ்தானத்தை நிர்வஹித்து வருகிறார். தன் பத்நிகளான ருத்ரை ஸுகீர்த்தி இருவரோடும் கருடபகவான் எதிரிலும், வாருணீ காந்தி என்ற தன்பார்யைகளோடு திருவநந்தாழ்வான் பின்னாலும் எழுந்தருளியிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் ஆசார்யர்களும், இருமருங்கும் அந்தமில்பேரின்பத்து அடியார்களான நித்யரும் முக்தரும் கோஷ்டியாக வீற்றிருக்கின்றனர்.

நடுவில் ஜ்யோதிர்மயமாய் ஸிம்ஹாஸனரூபமான திவ்யபர்யங்கம். அதற்கு அவயவங்களெல்லாம் தத்வங்களின் அபிமானி தேவதைகளே: தர்மம், ஞானம், வைராக்யம், ஐச்வர்யம் என்பவை பாதங்கள்; அதர்ம-அஜ்ஞான-அவைராக்ய-அனைச்வர்யங்களும், ஸத்வ-ரஜஸ்-தமஸ்ஸுக்களும், க்ருத-த்ரேதா-த்வாபர-கலியுகங்களும் குறுக்கும் நெடுக்குமான பலகைகள். இந்தப் பர்யங்கத்தின்மேல் கோடி ஸூர்யப்ரகாசமான ஒரு பெரிய தாமரை திகழ்கிறது. விமலா, உத்கர்ஷிணீ, ஞானம், க்ரியை, யோகை, ப்ரஹ்வீ, ஸத்யை ஈசானை என்ற எண்மர் அதன் எட்டு இதழ்களிலும், முன்புறத்தில் ஒரு இதழில் அநுக்ரஹையும் நின்றுகொண்டு சாமரகைங்கர்யம் செய்துகொண்டிருக்கிறார்கள். சுற்றிலும் ஆயுதாழ்வார்களும் ஆபரணாழ்வார்களும் குவித்த கையுடன் ஆயுதங்களையும் ஆபரணங்களையும் சிரமேல் ஏந்தி நிற்கின்றனர். நடுவிலுள்ள தாமரைக்காயில் திருவநந்தாழ்வான்பேரில் வலது புறத்தில் நீலமேகத்தையணைந்த நிலைமின் போன்ற லக்ஷ்மியும், இடதுபக்கத்தில் ச்யாமளவர்ணைகளான பூமி நீளைகளும் எழுந்தருளியிருக்க ஸர்வேச்வரன் சங்கசக்ரபாணியாய், இடது திருவடியைத் தொங்கவிட்டு மற்றதை மடக்கி வீற்றிருந்து, உலகங்களுக்கெல்லாம் அபயமளித்து, ஸூரிகளுக்கும் முக்தர்களுக்கும், தன் அனுபவத்தை அளித்துக்கொண்டிருக்கிறான்.

𑌸𑌵𑍍𑌯𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑍍𑌯 𑌶𑍍𑌰𑌿𑌤𑌦𑍁𑌰𑌿𑌤𑌹𑌰𑌂
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌕𑍁𑌞𑍍𑌚𑌯𑌿𑌤𑍍𑌵𑌾
𑌜𑌾𑌨𑍁𑌨𑍍𑌯𑌾𑌧𑌾𑌯 𑌸𑌵𑍍𑌯𑍇𑌤𑌰𑌮𑌿𑌤𑌰𑌭𑍁𑌜𑌂
𑌨𑌾𑌗𑌭𑍋𑌗𑍇 𑌨𑌿𑌧𑌾𑌯 ।

वस्त्राद्याहार्ययेन प्रतिभटशयने
यारयनु [illegible]
देवीभूषास्त्रजुष्टो जनयतु जगतां
शं स वैकुण्ठनाथः ॥

என்கிற சுலோகத்தில் இவற்றையெல்லாம் ஸங்க்ரஹமாகக் காண லாம். சாந்தோக்யம் கௌஷீதகீ முதலான உபநிஷத்துக்களும், பாஞ்சராத்ரஸம்ஹிதைகளும் இவ்விஷயங்களைக் கூறுகின்றன. ஸ்ரீவைகுண்டத்தையும் அவற்றிலுள்ள பொருள்களையும், நித்ய முக்தர்கள் கைங்கர்யம் செய்ய ஸ்ரீபூமிநீளைகளுடன் பகவான் எழுந்தருளியிருப்பதையும் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்த ஸ்ரீவைகுண்டகத்யத்தில் விஸ்தாரமாகக் காணலாம்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	2	உணர்த்தியுடைவன்	உணர்த்தியுடையவன்
13	14	நிவெஷ	நிவேஷ
15	18	ஸ்நாயுபத்யும்	ஸ்நாயுபத்தம்
22	15	தன்னையும் கொடுத்து	தன்னையும் கொன்று
24	25	உபாயம்	ப்ராப்யம்
25	23	அறிதானதும்	அரிதானதும்
26	2	"நிரயாவஹாத," 17 "தவஸ்ராஜனாயொ ஜெஜெத்ருய"	
	15	நாகங்கள்	நரகங்கள்
32	7	வெள்ளித்திடைபட்ட	வெள்ளத்திடைப்பட்ட
	8	நரியினம்போலவும், உள்ளம்துளங்கி, ப்ரயோஜந	
	25	நெறுப்பு	நெருப்பு
38	7	உன்திருவருளன்றி	உன் திருவருளாலன்றி
43	9	ஹுவஸஹஉஹவதக்ஷெஷ (பத்மபுராணம் 6 உத்தரகண்டம் 81-133)	
53	18	ஸூக்ஷ்ம	ஸௌக்ஷ்ம
56	28	மத்தளம்	முரசு
		முரசு அல்லது பேரி என்னும் வாத்தியத்தின் அடியில் இருக்கும் மிகச் சிறிய துவாரம் இங்கு 'ஆடம்பரரந்த்ரம்' என்பதால் கொள்ளப்பட்டது.	
58	1	என்று	என்றும்
60	3	ஜ்ஞாநவ்ருத்தி	ஜ்ஞாநவ்ருத்தி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
60	20	அக்னியும் அதைச்சுற்றி வாயுவும் அதைச் சுற்றி ஆகாசமும்	
61	6	வெகண்ணா	வெகாண்ண
64	19	வாக்கும்	வாக்குக்கும்
	26	9 7. 10. 9	9 9. 7. 5
68	16	20 6. 10. 1.	20 6. 10. 10
71	3	வயூஜத்தை	வயூக்ஷத்தை
	7	என்றூர்போலவும்	என்றூற்போலவும்
	17	34 4. 1. 5	34 4. 5. 1
	18	பூதபவிஷத்	பூதபவிஷ்யத்
73	26	தாரை	தாமரை
74	3	ஸௌத்வஹ்ரு	ஸௌத்வவஹ்ரு
95	27	கண்டிக்கிறபடியால்	கண்டிருக்கிற (படியால்
102	7	மாதர்போலக்	மாதர்போல
	20	விருப்பத்து	பொருந்தி
103	8	மேதியினில்	மேதினியில்
110	4	(பக்கம்) 46	(பக்கம்) 6
	20	,, 99	,, 66

[* இக்குறியுள்ளது அர்த்தபேதத்தையும்

† இக்குறியுள்ளது பாடபேதத்தையும் காட்டும்.]

பக்கம்	வரி	
5	26	* விபரீதருசி—ஒன்றில் 'தோஷம் உண்மை' என்று தெரிந்திருந்தும் அதில் வரும் ருசி. ஸம்ப்ரதாய வி[illegible]வாஸிகளுக்கு அர்த்தகாம ருசி போன்றவை.
6	6	† ஜீவாத்மாவினுடைய—வ
6	25	* மூவுலகத்தைத்திண்ணிய நிலையுடையதாகத் திருத்தித் தன்னுள் இருத்தி.
10	4	† ஹஶவத நாஹவவிஶேஷாதிகளில்—வ
13	4	† இதுமேலும்—வ.
	22	† வளர்ந்திடுமேறக்கவாறே
15	5	† சுநஞ்சுஷவேசயமாய்—வ
15	12	* த்ரிமலம்— மூத்ரம், சுக்லம், புரீஷம் என்ற மூன்று மலங்களையுடையது.
17	7	† அவர்கள் தந்தாம் கதைகளையும்—வ
19	16	† வ்ருஷ்டிவ்ரீஹ்யாதிகளிலே—வ.
20	1	† ஸ்வர்க்காதிவிஶேஷங்களை அடைந்து-வ
	6	† ஶஹாவாஸக்லேஶங்களை அடைந்து—வ.
23	26	* அண்டத்திற்குட்பட்ட உலகங்களை ஸம்ஹரிப்பது 'வ்யஷ்டிஸம்ஹாரம்.'
25	7	† காங்க்ஷிக்கும்படியாம்—வ
27	19	* எல்லோரும் ஸ்வஸ்வ - பலாவஸாநத்தில் அப்பலாநுபவதேசத்திலிருந்து விழுமவர்களாகையால்
30	1	† துல்யராய்த் தோற்றினுரை—வ.
30	3	† மதாமதம் பண்ணுவிப்பார்—வ.
58	1	† சிலர் சொல்லுவார்கள்—வ.
58	4	† சுவிபுவபுராவஸரஸ்கவக்ஷ—வ.
68	20	† ஷ்ருணாதிநாந்ரதஜவாவ்ந்வாநி

78	12	* அவற்றிற்கேற்ற ஸ்வரூபவிபூதிகளோடு
	27	* வலது பக்கத்திற்கு எல்லை
82	12	* கதிர்களையுடைய ஆயிரம் இரவி-
	24	* கோள்-மிடுக்கை (வலிமையை) யுடைய
86	4	† ஸ்மயமாநமுகனைக் கொண்டு தோற்றின தொண்டைவாய்ப் பிரானுடைய—**வ.**
93	24	*தாழ்ச்சி-தாழ்வதை தாழ்ச்சி-ப்ராவண் [யத்தை
101	8	†ப்ரக்ருதிகுணங்களைக் கழற்றுவித்த பகவத்குணங்களிலே—**வ.**

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

ரஹஸ்யங்களில் ஒன்றான

ஸ்ரீ பரமபதஸோபாநம்.

𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑌂 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍 ॥*

சீரொன்று தூப்புல் திருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்-ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

---

*𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍 ॥
என்று அதிகம்.

*ஸ்ரீ பரமபதஸோபாநத் தனியன்கள்.

வ்ராஜீக்ருத்ய விரக்திஸம்பதமதீ-
ஸோபாநஸம்வர்த்தநம்
ஶரீராண்யபராந்தஜாதவிஹ யஃ
ப்ராவீகஶக் ஸம்பதஃ ।
தஸ்மிந் திஷ்டதி வேங்கடேஶ்வரகவௌ
ஸ்ரீஹாஸ்த்ரிகாரோவஸ
யம் கஞ்சந் வாரணஷம் ஹ்ராவாஸிதம்
சுபே ஶா மா உநஃ ஸ்வஸ்தி தே ॥
தஸ்மை நமோஸ்து வரவே
தார்க்ஷ்யஸவிதவாய வேங்கடேஶாய ।
ப்ராவதப்யஜ்ஞாநாநாம்
ஸச்ச்ரீவ வாரவமஹாஸ்த்ரஸோவாந ॥

தேனேறு தாமரையாள் திருமார்பன்தன்
திண்ணருளால் அவனடியில் விவேகம்பெற்றுக்
கூனேறு பவக்குழியை வெறுத் ததற்பின்
கூர் விரத்தி யுடன்வினையின் திரளுக் கஞ்சிக்
கூனேறு பிறையிறையோன் சாபம் தீர்த்தான்
குரைகழலே சரணடைந்து குரம்பை விட்டு
வானேறும் வழிப்படிகள் அடைவே கண்ட
வண்புகழ் தூப்புல்வள்ளல் அருள் பெற்றேமே.

---

* ஆசார்யனை அல்லது அவர் கிரந்தத்தைப் புகழ்ந்து கூறுவ்தும், அதனாலேயே கிரந்தத்தோடு சேராமல் தனித்து நிற்பதுமான சுலோகம், பாசுரம் முதலியவை. 'தனியன்கள்' எனப்படும்.

ப்ரதமம் விவேகபர்வ

ஸேயம் ஸோபாநபத்ததீ ஶ்ரீமதா விஹிதா ஸ்வயம் ।
ஸர்வஜ்ஞஸங்கல்ப்யம் ஹ்ருத்ஸ்தேந ஸ்வஸம்யம் வேங்கடேஶிநா ॥

விவேக - நிர்வேத - விரக்தி - பீதய:
ப்ரஸாதஹேதூத்க்ரமணார்சிராதய: ।
ப்ரக்ருத்யதிக்ராந்திவஹாயிரோஹணம்
பராப்திரித்யத்ர து பர்வணாம் க்ரம: ॥

அடற்புள்ளரசிலும் அந்தணர்மாட்டிலும் இன்னமுதக்
கடற்பள்ளிதன்னிலும் *காவிரியுள்ளம் உகந்தபிரான்
இடைப்பிள்ளையாகி உரைத்தது உரைக்கும் எதிவரனர்
மடைப்பள்ளிவந்த மணம் எங்கள் வார்த்தையுள்
[மன்னியதே. 1.

கள்ளமனத்துடன் கண்டுமுயன்ற கடுவினையால்
நள்ளிருளாழியில் நற்சுவை ஐந்தென நாடியதோர்
அள்ளலில் நாளும் விழுந்தழியாவகையாரணநூல்
வள்ளல் வழங்கிய வான்படியான வழியிதுவே. 2.

ஸ்வஶேஷசிதசித்வஸ்துஶேஷியான ஶ்ரிய:பதிக்கு ஸ்வ-
நியாஹ்ரு நிருபாதிகஶேஷபூதராய், [1]‘அந்தமில்
பேரின்பத்து அடியரோடு’ இருந்து [2]‘அனைத்துலகு
முடைய அரவிந்தலோசனனைத் தினைத்தனையும் விடா
தே’ அனுபவிக்கப் ப்ராப்தரான க்ஷேத்ரஜ்ஞர் அநாத்ய
வித்யாகர்மாதிப்ரவாஹத்தில் ஒழுகி, கரையேற விரகற்று
[3]அலமருகின்றபடியைக் கண்டருளின பரமகாருணிக

1 10. 9 11. 2 6. 7. 10. 3 அலமருகின்றபடியை-வருந்துகின்றபடியை. அந்தணர்மாட்டிலும்—பிராமணர்களின் தனமாகியவேதத்தைக் காட்டிலும். *காவிரியுள்ளும்.—பா.

ஞன பரமசேஷி, தானே ஞானக்கை கொடுத்து இவர்களை எடுக்க இடம் பார்த்து; [4]அஜ்ஞாத-யாத்ருச்சிக-ஆநுஷங்கிக-ப்ராஸங்கிக-ஸாமாந்யபுத்திஜநித ஸுக்ருதவிசேஷங்களை வ்யாஜமாகக்கொண்டு விசேஷகடாக்ஷம் பண்ணி; அத்வேஷ-ஆபிமுக்ய-ஸாத்விகஸம்பாஷணாதிகளை உண்டாக்கி; ஸாதாரண-நித்ய-ஸம்பந்த ஸஹகாரியான * ஆசார்யஸம்பந்தத்திலே அபிஸந்தியை உண்டாக்கி; விசேஷண-விசேஷ்ய-உபயஸ்வபாவ-விஷயமாகத் [5]'திருந்தக்கண்டு உரைக்கவல்ல' 'தெளிவுற்ற

---

[4] அஜ்ஞாதஸுக்ருதம்— அடியுடன் இது ஸுக்ருதம் (நல்ல காரியம்) என்று நாம் அறிந்துகொள்ளாதது; (இதென்னமலை என்று கேட்டவர்களுக்கு, 'திருமாலிருஞ்சோலைமலை' என்று சொல்வது முதலானவை). பகவான் எழுந்தருளியிருக்கும் மலையாதலால், அதன் பெயரைச் சொன்னதும் ஸுக்ருதமாக முடிந்தது.

யாத்ருச்சிக ஸுக்ருதம் – ஸுக்ருதம் என்று தெரிந்தாலும், செய்ய நினைப்பின்றிச் செய்யுமவை. (மாடுகளை ஓட்டும்போது அவற்றைத்தொடர்வதால் நேரும் ஆலயப்ரதக்ஷிணம்முதலானவை).

ஆநுஷங்கிகம்—வேறொரு கார்யத்தின்பொருட்டு பிரவிருத்திக்கும்போது, அப்பிரதானமாகக் கருதிச் செய்யுமவை (ஊருக்குப் போம் வழியில் நேர்ந்த பகவத்பக்தனை வலமாகப் போவது முதலியன).

ப்ராஸங்கிகம்—ப்ரஸக்தி நேர்ந்தால், இதற்கென்றே எண்ணிச் செய்வது. (கடைக்குக் காஞ்சீபுரம் போம்போது, பகவானையும் தொழுவது).

ஸாமாந்ய புத்தி மூலம்—வேறு பயனையாவது மோக்ஷத்தை யாவது விசேஷித்துக் கருதாமல், 'நல்ல கார்யம்' என்று இவ்வளவைக்கொண்டு செய்யும் ஸ்ரீரங்கயாத்திரை முதலியன.

[5] 6. 1. 8; 7. 5. 11.

* ஆசார்ய ஸம்பந்தத்தை அபிஸந்திபண்ணி—க.

சிந்தையனாய்', 6குலிங்கஶகுநிவ்ருத்தாந்ததேஶிகனான தேஶிகன் திருவடிகளிலே சேர்த்து; அவன் மநஸ்ஸிலும் வாக்கிலும் கோயில்கொண்டு, 7'பிரம குருவாகி' நின்று, 8'தீதில் நன்னெறி காட்ட' ஒருப்பட்டு; ஸுத்ரோஜ்ஜீவநாபேக்ஷிதங்களான ரஹஸ்யார்த்தங்களை 9அஜ்ஞாந-ஸம்ஶய-விபர்யய-விபரீதருசிகள் புகாதபடி உபதேசிக்க; 10"உபதேஷ்டா நிரபேக்ஷக:" என்னாதபடி 11'கருவிலே திருவுடைய'னாய், ஸத்ருஶவ்யவஸாயனாய், 12"ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரப

6குலிங்கசகுனி விருத்தாந்தம் — 'ஸாஹஸத்தொழில் செய்யலாகாது' என்று பிறவற்றுக்குப் போதனைசெய்து, சிங்கம் வாயைத் திறக்கும்போது தான் உட்புகுந்து அதன் தொண்டைத் தசையை (அல்லது பற்களின் இடையில் இருக்கும் மாமிசத்தைத்) தின்னும் ஸ்வபாவமுள்ளதாகக் கூறப்படும் 'குலிங்கம்' என்னும் பக்ஷி. (இந்தப் பக்ஷியின் செய்கை இருக்கும் ஊரிலேயே இராதவர்களான ஆசார்யர்கள்.)

7பெரி. தி. 5. 2. 8. 8பெரு. தி. 2. 6.

9 அஜ்ஞானம்— அடியுடன் தெரியாதிருப்பது; ஸம்சயம்— ஒன்றுக்கொன்று விரோதமுள்ள இரண்டு தர்மங்களை ஓரிடத்தில் ஏறிட்டு, வஸ்து இதுவோ, மற்றொன்றோ என்று ஸந்தேஹப்படுவது (இருட்டில் தூரத்தில் தெரியும்வஸ்துவை 'அது மரமோ, மனிதனோ' என்று ஸந்தேஹிப்பது முதலானவை); விபர்யயம்—ஒரு வஸ்துவின் உண்மையான தன்மை நிச்சயமாகத் தெரியாதபோதிலும், மாறாக அதை எண்ணுவது (இருட்டில் இருக்கும் மரத்தை மனிதன் என்று நிச்சயிப்பது);

விபரீதருசி — உண்மையான தன்மை தெரிந்தும், அதற்கு விபரீதமாக அதைக் காட்டுவதில் ஏற்படும் ருசி. (ஒரு மனிதன் நல்லவன் என்று தெரிந்தும், ஏதோ காரணத்தால் அவனைக்கெட்டவன் என்றுசொல்வது.)

10 11திருமாலை 11. 12கீதை 2. 7.

ஞம்’’ என்று ‡செவிதாழ்த்த இச்சேதனன் [13]‘சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழில்’ எழுந்த [14]‘மான் ஆங்கார மனங்கள்’ முதலான விவியவிஷவ்ருக்ஷங்களினுடைய பஹ்வங்குர ஶாக ஸகலத்தையும், [13]‘சூழ்ந்து அதனில் பெரிய பரநன் மலர்ச்சோதி’யான ஜீவாத்மாக்களுடைய ஶரீரகாரா க்ருஹநிவாஸ — கைங்கர்ய-ஸாம்ராஜ்ய - ஐஶ்வர்யங்களையும், [13]‘சூழ்ந்து அதனில் பெரிய சுடர்ஞான இன்பமான [15]‘உயர்வற உயர்நலமுடையவன்’படிகளையும் ஸ்வஹிதனாய்க் கேட்டு, [16]‘உய்வதோர் பொருளால் உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து’ ஸூர-தேவ-ஹர-ஹய-ஹம்ஸ வடுணவ்யாஸமாய் §ஶேஷஶேஷிகளைப் பிரியாதபடி பிணைத்து வணக்கி உஜ்ஜ்வலிதமாக்குகிற ஹ்ருதயத்திலே தன்னுடைய ஜ்ஞாத்ருத்வ-கர்த்ருத்வ-போக்த்ருத்வங்களை ஸாத்யங்களாகவும் ஸ்வாதீநங்களாகவும் பார்த்து. [17]‘முதல் தனி வித்தாய், [18]‘திருத்தித் திண்ணிலை மூவுலகும் தன்னுள் இருத்திக் காக்கும் இயல்பினனாய், [19]‘தனதே உலகென நிற்குமவனாய்’ [20]‘அடைக்கலங் கொண்டு அஞ்சல் என்னப்’ ஶரண்யனாய், [21]‘உலகங்களுக்கெல்லாம் ஓர் உயிராய்’ [22]‘உலகு தன்னோடு ஒன்றி நிற்க வேறு நிற்கு’மவனாய், உபாயோபேயபூதனான

---

13. 10. 10. 10. 14 10. 7. 10. 15 1. 1. 1. 16 தி. மொ. 1. 1. 1.
17 10. 10. 9. 18 2. 2. 8. 19 4. 5. 10. 20 தி. ச. வி. 92
21 8. 1. 5. 22. தி. ச. வி. 12.

18 திருத்தி— (லோகங்களை) ஸ்ருஷ்டித்து, திண் - த்ருடமான, நிலை - ஸ்திதியை உடைய, மூவுலகும்-மூன்று லோகங்களையும், தன்னுள் - தனக்குள்ளே, இருத்தி - வைத்து, காக்கும் இயல்பினனாய் - ரக்ஷிக்கும் ஸ்வபாவத்தையுடையவனாய்.

‡செவிதாழ்த்திச் சேதனன்—க. §சேஷசேஷி தத்வங்களை-ம

'ஸ்ரியஃவதியை உளன் என்று தேறியிருக்கும் உணர்த்தியுடைவன் [23] தானும் உளனும்' என்று தைத்திரீயாதி ஶ்ருதிகள் *சொல்லலுற்றன.

அருவுருவா னவையனைத்தும் அறிவா ரேலும்
அரும்கலைகள் கற்றுரைக்க வல்லா ரேலும்
தருமவழி †அழியாமல் காப்பா ரேலும்
தனிமறையின் தாத்பரியம் தருவா ரேலும்
இருவினையின் ஒழுக்கத்தால் ஏவ லோரா (து)
இங்கேநாம் சிறையிருந்த ஈனம் தீர்க்கும்
திருமகளார் பிரியாத தேவன் திண்ணம்
தேறாதார் திண்படியில் ஏறாதாரே. 3.

ஜதி வாஜவதவொவாநெ வூயஜம் விவெகவவ_ ॥

ஃிதீயம் நிவெ_ஃவவ_ ॥

மறுத்தார் திருவுடன் மார்பில்
தரித்தவன் வாசகத்தை
மறுத்தார் மயக்கமும்
மற்றதனல் வந்த மாநரகும்
நிறுத்தார் பவத்தில் நெடுநாள்
உழன்றமை கண் (டு) அதனல்
வெறுத் (து) ஆரணநெறியே
வெள்கியோட விரைவர்களே. 4

---

23 "அஸஃி ஊ_ஹெதி வெசஃ வெஃ ஸஞெஜநம் தமெதா விஃஃ"—தை. உ.

*சொல்லிற்றன. †தவிராமல்—ம

இப்படித்தானும் பிறரும் தனக்கு ஶேஷியும் தஞ்சமும் போக்யமும் அன்று என்று தோன்றும்படி தயா ஸீல-தேஶிகோபதேஶஸித்த-பத்ருயாய-பராதஸ்த்தாலே ஜிவ்ருமஜ்ஞாஜநம்போலே ப்ரஸந்ந-ஜலதர-பவித்ர ஶீதலமான *பராவரதத்வ விவேகம் பெற்றவன் தான் முன்பு அநாதிகாலம் [1]அஸமஞ்ஜன்படியே நடக்கையாலே [2]"ந க்ஷமாமி," [3]"க்ஷிபாமி" என்னும்படி [4]துறப்புண்டு, அநந்தாயத-விஸ்தாரமான த்ரிகுணஸாரகாந்தாரத்திலே [5]அநேகஜந்மஸாஹஸ்ரீயான ஸம்ஸாரபதவியை அடைந்து, அநாதிதவிஷய-த்ருஷ்ணாத்ருஷ்ணிகாஸ்வாதபரவஶனாய், † அடிதரியாதே ஓடி, வாஸநாரேணுகுண்டிதனாய், விபரீதபரிஶ்ரமனாய், ஒரு விஶ்ரமஸ்தாநமும் பெறுதே க்ஷுத்தாதகாமாதிகள் ‡வந்தாலும்

---

[1] அஸமஞ்சஸன்—பா. நிர்வேதம்—பாபத்தைச் செய்தால்வரும் நரகத்திலிருந்துபடந்து, அவ்வித பாபத்தைச் செய்யாதிருக்கவேண்டும் என்கிற ஸங்கல்பம்.

அஸமஞ்ஜன்— ஸகரமஹாராஜனுக்கு கேசிநியிடம் பிறந்தவன். இவ்வஸமஞ்ஜன் இளம்பிராயத்தில் வீதியில் விளையாடும் சிறு குழந்தைகளையெல்லாம் ஸரயூநதியில் தூக்கி எறிந்து ஜலத்தில் முழுகித்தவித்து இறக்கும் அவற்றைக்கண்டு ஆநந்திப்பது வழக்கம். பட்டணத்து ஜனங்கள் முறையிட, ஸகரன் அவனை ராஜ்யத்திலிருந்து வெளியேற்றிவிட்டான். இவன் புதல்வன் அம்சுமான். (ராமாயணம் பாலகாண்டம் 38. 20-22. பாகவதம் 9. 8.)

[2]வராஹபுராணம். [3]கீதை 16. 19. [4]துறப்புண்டு—தள்ளப்பட்டு

[5]அநேகஜந்மஸாஹஸ்ரீம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந் ।
மோஹஶ்ரமம் ப்ரயாதோ(அ)ஸௌ வாஸநாரேணுகுண்டித: ॥ (வி. பு. 6. 7. 79)

*பராபரதத்வ விவேகம்—க † அடிதெரியாதே—க. ‡வந்து முன்பு—க.

முன்பு அவிபக்தஸூக்ஷ்மதையான ஸூக்ஷ்மதசையிழந்து மூச்சடங்க ஸ்வாத்மனாய், ஹேயோபாதேய ப்ரவ்ருத்தி களுக்குப் ப்ரஸங்கமில்லாதபடி கரணகளேபரங்களை இழந்து [6]"லூநபக்ஷ இவாண்டஜ:" என்னும்படியாய், தனக்கு விசேஷித்தொரு பேரிடவொண்ணாதபடி மஹா தமஸ்ஸிலே இரும்புண்ட நீர்போலே இறுகச் சுவறி, ஒரு மூலையிலே [7]"ஸம்ஹாரவிக்ஷேபஸஹஸ்ரகோடீ: திஷ்டந்தி ஜீவா:" என்னும்படி ஆயிரம்கோடி ப்ரஹ்மகல்பங்கள் அடைப்புண்டு கிடக்கும்படிகளையும், மீண்டு காருணிக-ஸ்வதந்த்ரசேஷி-ஸங்கல்பவிசேஷ-நியத காலம் வந்தால், [7]"ப்ரவர்தந்தி வாஹவத்" என்னும்படி ஸஹகாரிவழியே போந்து, [8]ஈச்வர-நிவேதநார்த்தமான விசித்ரதேஹஸம்பத்தியைப் பெற்றாலும் §ஆக்கையின் வழி உழன்று, 'நீ ஸர்வஜ்ஞன்' என்றால் 'ஓம்' என்று இசையாதே யமகிங்கரர்க்கு இடமாம்படி ஜந்மாகிஞ்சநனாய்ப் போந்தபடிகளையும், [9]'தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும்' பொழுதுபோக்கப் ப்ராப்தமாயிருக்க, [10]'சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து சுரிகுழல் மடந்தையர்திறத்துக் காதலே மிகுத்தும், [10]'வென்றி

---

[6]வங்கிபுரத்துநம்பிகாரிகை (சிறகொடிந்த பக்ஷிபோல) [7]பாரா.சா. [286. 30.

[8]விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்।

§3. 2. 1. (ஆக்கை-சரீரம்) [9] 4அ.63. (தெரித்து-தெரிந்துகொண்டு)

§ஆக்கையின்வழியுழல்வேனென்று—க.

[10]தி. மொ. 1. 6. 3; 1. 1. 4; 1. 6. 2.

[10]சூதினைப்பெருக்கி-(பகலில்) பெருக்க சூதாடியும், களவினைத் துணிந்து-(இரவில்) அச்சமின்றித் திருட நிச்சயித்தும், சுரிகுழல் மடந்தையர் திறத்து-(அதனால் கிடைத்தபொருளைக்கொண்டு)

யே வேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார் கலவியே கருதி [10]புலன்படிந்து உண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை வாளாப் போக்கின'படிகளையும்; ஸம்வ ஒநாஸவவிஶெஷாதிகளில் [11]"ஸா ஹாநி:" என்று இழவுபட்டு, 'ஒவஸ்ரஹிரவூஷித'ரைற் போலே கூப்பிட வேண்டியிருக்க, [12]"தாயொருபக்கம் தந்தையொரு பக்கம்" இத்யாதிகளிற்படியே சுஹ்ருத்விஷயவிஶெஷத்தில் அலற்றும் படிகளையும்; [13]'நிற்கின்றதெல்லாம் [14]'உடன்மிசை உயிரெனக் கரந்த' நெடுமால்' என்று ஓர்ந்து, [15]'மித்ராமித்ரஸமெ'யற்று 'யஹீயஃ ஸ்வா' என்கிற ந்யாயத்தாலே ஸவஹூஸஹ்தஸாஹ்ருத்தாகை

சுருண்ட கூந்தல்களையுடைய மாதர்களிடம், காதலே மிகுத்தும்-மிகுந்த ஆசையைச் செய்தும், வென்றியே வேண்டி - ஜயம் ஒன்றையே விரும்பி, வீழ்பொருட்கு - நாசமடையும் ஸ்வபாவமுள்ள பொருள்களுக்காக, இரங்கி - இரங்கியும், புலன் - இந்திரியங்கள் படிந்து உண்ணும் - மண்டி அனுபவிக்கிற, போகமே பெருக்கி - போகத்தை அதிகப்படுத்தி, பொழுதை வீணே போக்கினேன்.

[11]யநுஹூதஃ க்ஷணம் வாஸவி வாஸுதெவொ ந சிந்த்யதெ। ஸா ஹாநிஸ்தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ்ஸா ச விக்ரியா ॥ (கருடபுராணம் பூர்வக. 322. 22)

ஶாகஸ்நிஹவஸ்திக்ராணெ ஸஹதெ யஸ்ராநவஜீ தெ। ஒவஸ்ரஹிரவூஷிதெநெவ யாகஜராகூதிதம் ஸ்ருஸ ॥

[12]பெரி. தி. 4. 8. 9. [13]4அ. 54. [14]1. 1. 7. ஓர்ந்து—ஆராய்ந்து

[15]ஸவஹூஸஹ்தாதகெ தாத ஜமஸாயெ ஜமநயெ। வஸாதநி மொவிநெ மித்ராமித்ரகயா கூதஃ ॥

(வி. பு. 1. 19.37.)

உசிதமாயிருக்க, [16]'அறப்பொருளை அறிந்து ஓராதே மறுக்கி வல்வலைப்படுத்திக் குமைத்திட்டுப் பல்லுயிரைக் கொன்று உண்ணும்படிகளையும்; [17]'ஹரிரித்யக்ஷரத்வய'த்தை ஸக்ருத்மாகவாகிலும் உச்சரித்து, மோக்ஷகமநத்திற்குப் பரிகரபந்தம் பண்ணுகையே வர்ணிதக்ருத்யமாயிருக்க, ஸஹஸ்ரநாமாநாம் லவத்திலும் உண்டறுக்கவொண்ணாதபடி ¶ஸுக்ஷயஸஹமான ஸம்ஸாரப்ரவாஹத்தை க்ஷணாயுஷாந்தந்தோறும் நடத்திப் போந்தபடிகளையும்; $இன்னடப்பைப் புரிந்து பார்த்து, [18]"வாடினேன் வாடி." "வாணிலா முறுவல்" "தாயே தந்தை" இத்யாதிகளிற்படியே அநுதாபம் பிறந்து [19]'பழுதே பல பகலும் போயின' என்று அஞ்சி அழப் ப்ராப்தமாயிருக்க, ப்ரக்ருதிவேதாளீவசனாய், [20]"காமக்ரோதஸமாவிஷ்டா" என்னும்படி

---

[16]4. 9. 6. அறப்பொருளை - தர்மத்தின் தத்வத்தை, அறிந்து, ஓராதே - ஆராயாமல், மறுக்கி - (பிறர் மனதைக்) கலக்கி, வல்வலைப் படுத்தி - பலரான தங்கள் மோசவலையில் விழச்செய்து, குமைத்திட்டு - ஹிம்ஸை செய்து, பல்லுயிரைக் கொன்று - (அதற்கு மேலும்) பல ஜீவர்களையும் கொன்று, தான் அனுபவித்தபடிகளையும்.

[17]ஸக்ருதுச்சரிதம் யேந ஹரிரித்யக்ஷரத்வயம் ।
பத்த: பரிகரஸ்தேந மோக்ஷாய கமநம் ப்ரதி ॥
[இதி. ஸஹா.

[18]தி. மொ. 1. 1. 1; 1. 6. 1; 1. 9. 1 (வாள் - ஒளி, நிலா - பொருந்தியிருக்கிற, முறுவல் - மந்தஹாஸத்தையுடைய-ஸ்திரீகள்) (அநித்ய வஸ்துக்களுக்காகவும், மாதர் பொருட்டும், தன் பந்துக்களுக்காகவும், வீணே முயன்று காலத்தைக் கழித்ததை முறையே இம்மூன்று திருமொழிகளிலும் அருளிச்செய்கிறார்.)

[19]1அ. 16. [20]பார. சாந்தி. 312. 30.

¶ஸுக்ஷயப்ரஸஹமான-க $முன்னடப்பை--க. (புரிந்து = திரும்பி)

கலங்கிக்*கண்டவா திரிந்தபடிகளையும்கண்டு, [21]"ஸுஹொ ஜெஉஹதீ யாதா நிஷ்ணா ஜநஸஞதிঃ," "[22]"யானே என்னை அறியகிலாதே யானே என்தனதே என்றிருந்தேன்." [23]"நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்," [24]"அருநரகத்தழுந்தும் பயன்படைத்தேன்" [25]"ந ஸஞ்தி தாவஞ்தி ஜநாநி லொகெ" [26]"ஸிංஹெந ஹ-ஞகவா ஙஹவொ உயாஉதாঃ" இத்யாதிவஙிசெவநங்களைப் பண்ணும்படி முன்பு ஸாகவிக்ஸஂஹாஷணாதிகளாலே முகிழ்த்த நிர்வேதம் நஉஸூஙநிஷெயூநிஙஞவணத்தாலே முற்றி, [27]"செய்யாதன செய்யோம்," [28]"நயவேன் பிறர் பொருளை நள்ளேன் கீழாரோடு" என்னும்படி [29]"செய்யேல் தீவினை என்று அருள்செய்

---

[21]வங்கி. காரிகை.[22]2. 9. 9, [23]தி.மொ. 1. 9. 2. [24]தி.மொ. 6. 3. 4

[25]ந ஸஞ்தி தாவஞ்தி ஜநாநி லொகெ [ஸவெஷூ நாயாஸ்விஷூ ஸவஷுகாஶம் । ஷ்ருநாநி யாவஞ்தி உயாஉதிவொஙெ வீதாநி ஸஂஸாரஉஹாஸஉெஹெ ॥]

விஷ்ணுதர்மம் 98 12 (க்ஷத்ரபந்து உபாக்யானம்)

ஹே நாத! பயங்கரமான இந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து, ஒவ்வொரு பிறவியிலும் தாயிடம் உண்ட பாலையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், அநாதிகாலமாக ஸர்வஸமுத்ரத்திலிருந்ததும் இப்போது இருப்பதுமான ஜலமெல்லாம் கூட அதன் அளவு ஆகாது.

[26]ஸிංஹெந ஹ-ஞகவா ஙஹவொ உயாஉதாঃ வூாவெூண ஹ-ஞகவா ஙஹவொ உயாஉதாঃ— விஷ்ணுதர்மம் 98.17

சிங்கமாயும் புலியாயும் பிறந்து எவ்வளவோ பூதங்களைக் கொன்று தின்றிருக்கிறேன்.

முகிழ்த்த—துளிர்த்த. வஙிசெவந—புலம்பல்

[27]திருப்பாவை 2. [28]1 அ. 64. [29]2. 9. 3.

*கண்டவாறு திரிந்தபடிகளையும்—க

யும் கையார்சக்கரக் கண்ணபிரான் அநுமதி பண்ணுத வழிகளில் ஸ்வப்நதசையிலும் அடியிட நடுங்கும்படியாம்.

ஸம்ஸர்க்காதிகளாலே நிர்வேதம் பிறக்குமாகில், அது மேலும் விபரீதவ்ருத்தங்களிலே கைவளரப் பண்ணும். அநாதிமாயா நித்ரையாலே உறங்கினவனுக்கு உணர்த்தியாலே நிர்வேதம் பிறந்தால், இது ராகத்வேஷாதிகளான துஸ்ஸ்வபாவங்களை அடியறுத்து, ஶமதமாதிகளான ஸத்குணங்களோடே அவிநாபூதமாய், அபவர்க்கஸாம்ராஜ்ய நாயிகாஸ்ரீயாக்கும். ஆனபின்பு ஸக்ருத்த்வயப்ரயோகமாயியான அத்யந்தஸம்ஸ்பர்ஶத்திலும் ஆழங்கால் படாதே, ஸவப்ரகாரப்ராவஸாதகமான அத்யந்தநிர்வேதத்திலும் இழியாதே, ஸாத்விகப்ரவ்ருத்தியைக் கைப்பிடித்து நிஷித்தப்ரவாஹத்தை விலக்குகை நிர்ஹேதுகவிவேகஜந்ய நிர்வேதபலம்.

வான்பட்ட மண்ணிருளில் மயங்குமாறும்
மறித்தொருகால் எனையூழி சென்றால் அன்றோர்
ஊன்பட்ட உடலாழி வினையொழுக்கில்
ஒருகரையும் காணுதே ஒழுகுமாறும்
தேன்பட்ட விடம்போலத் தித்திக்கின்ற
சிறுபயனே உறுபயன் என்றருந்துமாறும்
*தான்பட்ட படியிந்நேர் தானே கண்டு
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே. 5.

இதி ஸ்ரீபரமபதஸோபாநே த்விதீயம் நிர்வேதபர்வம் ॥

---

*தான்பட்டபடியின்றே தானே கண்டு—ப.

த்ருதீயம் விரக்திபர்வ॥

உலகத்துயர்ந்தவரொன்றும் பயனில் உறுந்துயரும்
அலகிற்படாதவப்போகம் கவர்ந்தெழுமம்புயத்தோன்
கலகத்தொழில் மதுகைடபரால் படும் *கட்டமெண்ணும்
பலகற்ற மெய்யடியார் படியார் இக்கடும்பவத்தே. 6.

இப்படி விவேகஜநிர்வேதஜவிரக்தியாலே [1]அபாய ப்ராவண்யமற்றாலும், [2]"ஸுகஸங்கேந பத்நாதி" †என்னும் அளவான ஸத்த்வமடியாக ஐஹிகாமுஷ்மிக ஸுகஸங்காநுஷங்கத்தாலே ஹேமமயநிகளங்களாகிற பொன்விலங்குகளைப் பூட்டிக்கொள்ளுமாகில், இவன் முமுக்ஷு அல்லனும். ஆகையால் [3]'கடையறப் பாசங்கள் விடும்படி' இதர ஸர்வதோஷங்களை யதாவஸ்திதமாக அநுஸந்திக்க வேண்டும். எல்லாருக்கும் ‡தம்தம் ஸுகங்களை [4]"ஒரு நாயகம்," [5]"நண்ணாதார் முறுவலிப்ப," [6]"கொண்டபெண்டிர்" இத்யாதிகளிற் படியே தெளியப்பார்க்குமளவில், இவை நிஸ்ஸார

---

[1] அபாய ப்ராவண்யம் - நிஷித்த கர்மங்களில் ஆசை. [2] கீதை 14. 6
[3] 8. 2. 8. (கடையற—வாளைகூட இல்லாமல், பாசங்கள் - ஆசைகள், அற்றுப்போம்படி) [4] 4. 1. 1. இந்தத் திருவாய்மொழியில் ஐச்வர்யம், கைவல்யம் இவற்றின் கீழ்மை சொல்லப்பட்டது.

[5] 4. 9. 1. இதில் தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களின் தண்மை சொல்லப்பட்டது. குணபம்—பிணம்.

[6] 9. 1. 1. இதில் பந்துக்களின் தண்மை கூறப்பட்டது.

*கட்டமெண்ணில்—ம †என்னுமளவாக ஸத்வமடியாய்-க. என்னும்படி அளாவனான ஸத்வமடியாக—ம. ‡தத்தம்— க.

ப்ராக்ருதாந்தகாரத்தின் நடுவே §மின்னொளிபோலே தோற்றுவதும் மறைவதுமாம்படி தோற்றும். ¶போக்தாவுக்கு போகஸ்தானமுமாய் போகோபகரணமுமான ஸ்வபரஶரீரமும் நிர்விண்ணனுக்குக் காணவாகிவர்ஜியமாய், அத்யந்ததுஃகமயமாய், அத்யந்தஹேயமுமாய் தடித்வஜ்ஜீவிதமுமாய் இருக்கும் என்னுமிடம் [7] “ஸப்ததாதுமயம் த்ரிமலம் ஶுக்லஶோணிதஸம்பவம்” என்றாற்போலே சொல்லுகிற ஶ்ருதிகளிலும், [8] “அஸ்திஸ்தூணம் ஸ்நாயுபத்தம்,” [9] “மாம்ஸாஸ்ருக்பூயவிண்மூத்ர,”

---

[7] கர்ப்போபநிஷத்–1. ஸப்ததாதுமயம்—(ரஸம், ரக்தம், மாம்ஸம் மேதஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்ரம் என்னும்) ஏழுவித தாதுக்கள் நிறைந்ததாயும், த்ரிமலம்–(வாதம், பித்தம், கபம் என்னும்) மூன்று மலங்களை உடையதும், சுக்ல–சோணித--ஸம்பவம்—சுக்லம் சோணிதம் இவற்றின் சேர்க்கையால் உண்டாவதுமான (சரீரம்).

[8] அஸ்திஸ்தூணம் ஸ்நாயுபத்தம் மாம்ஸஶோணிதலேபநம்|
சர்மாவநத்தம் துர்கந்தி பூர்ணம் மூத்ரபுரீஷயோ:‖

மநு 6. 76

அஸ்திஸ்தூணம் - எலும்பைத் தூணாக உடையதும், ஸ்நாயுபத்தம் - நரம்புகளால் கட்டப்பட்டதும். (மாம்ஸத்தையும் ரக்தத்தையும் கொண்டு பூசி, தோலினைப் போர்த்து, மலமூத்ரங்களுக்கு இருப்பிடமாய், நாற்றமுடைத்தானதுமான சரீரம்).

[9] மாம்ஸாஸ்ருக்பூயவிண்மூத்ரஸ்நாயுமஜ்ஜாஸ்திஸம்ஹதௌ|
தேஹே சேத் ப்ரீதிமாந் மூடோ பவிதா நரகேऽபி ஸ:‖

வி. பு. 1. 17. 63.

மாம்ஸம், ரக்தம், ஊந்தண்ணீர், விஷ்டை, மூத்ரம், (மேதஸ் மஜ்ஜை, எலும்பு என்ற இவற்றின் சேர்க்கையினாலுண்டான சரீ, ரத்தில் ஒரு முட்டாள் ஆசையை வைப்பானாகில், இதேமாதிரியான) நரகத்திலும் அவன் பிரீதியையே செய்வான். (அதை வெறுக்கமாட்டான். அதனால் நரகத்தில் தள்ளுவது அவனுக்குத் தண்டனையாகாது என்று பொருள்).

§மின்போலே—க. ¶போக்தாவுக்கு ஸ்தானமுமாய்—க.

10"அநித்யமஸுகம் லோகம்," 11"கச்சதி வஸுமதீ நாஶம்," 12"ஸாரஶூந்யே *கதலீஸ்தம்பே," 13"யாமேவ ராத்ரிம் ப்ரதமாம்," 14"ஆஸந்நதரதாம் யாதி" 15"மஸ்தகஸ்தாயிநம் ம்ருத்யும்," 16"ப்ராதர்மூத்ர புரீஷாப்யாம்," 17"ஊனிடைச் சுவர்வைத்து," 18"பொல்லாவாக்கை," 19"புண்

10கீதை 9. 33. அழிவுள்ளதும் (இருந்தபோதும்) ஸுகமில்லாததுமான இவ்வுலகத்தை (அடைந்தவனான நீ என்னை ஆச்ரயிப்பாயாக).

11வஸுமதீ - பூமியே, நாஶம் கந்த்ரீ - அழிவை அடையப் போகிறது; (மற்றும் அதனுள்ளிருக்கும் வஸ்துக்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ ?)

12வாழைக்கட்டைபோல் நிஸ்ஸாரமான மனுஷ்யசரீரத்தில்.

13யாமேவ ராத்ரிம் ப்ரதமாம் மஹேந்த்ர விஶதி மாதரம் ।
தாமேவ ராத்ரிம் ப்ரஸ்தாய மரணாய விவஸ்வத: ॥

[பார. சாந்தி. 283. 12.]

எந்த முதல் ராத்ரியில் கர்ப்பமானது தாய் வயிற்றில் பிரவேசிக்கிறதோ, அந்த ராத்திரியிலேயே இவனை இறக்கச் செய்வதற்காக இவனை உறங்கச் செய்து யமனும் பிரவேசிக்கிறான்.

14 (உதயாஸ்தமனங்கள் ஆக ஆக மரணம்) மிகவும் ஸமீபத்தில் இருக்குந்தன்மையை அடைகிறது.

15 உச்சந்தலையிலேயே நிற்கிற மிருத்யு தேவதையை (அறிகிறேனில்லை)

16 விடியற்காலையில் விடப்படும் மல மூத்ராங்களாலும், (மத்யாஹ்நத்தில் வெளிவரும் வியர்வை முதலியவற்றாலும், ராத்ரியில் சுக்லசோணிதங்களாலும் சரீரம் அசுசிமயம் என்று அறியலாம்).

17 ஊன் - மாம்ஸத்தை, இடை - நடுவேநடுவே, சுவர்வைத்து-சுவராக வைத்து.

18 3. 2. 3. பொல்லா - மிகவும் கெட்டதான, ஆக்கை-சரீரம்.

19தி. மொ. 1. 9. 6. புண்—புண்கள், ஆர்-நிறைந்த, ஆக்கை. (புண்போன்ற சரீரம்): *கதலீஸ்தம்பம்—க.

ணுராக்கை" [20]"மின்னின் நிலையில மன்னுயிராக்கை கள்" [21]'வேதநூற் பிராயம் நூறு" இத்யாதிகளிலும் விளங்கக் காணலாம்.

*த₄ர்மோத்தராய் சக்ரவர்த்தித்வமும் பெற்றிருந்த [22]"நள-ந்ருக₃-நஹுஷாதி₃களுள்பட உந்மத்த-க்ருகலாஸ-ஸர்ப்ப-நரகாதி₃வைஷம்யங்களையும் அடைந்து அவர்கள் பட்ட பாடுகளையும், †அவர்கள்தந்தாம் கதைகளும்

---

*ஆகையால் தர்மோத்தராய்—க. †அவர்கள் தா₃ரங்களும் அநுமரணம் பண்ணிப்போன படிகளையும்—க.

†அவர்கள் இறந்தபோதே அவர்களுடைய கதைகளும் மறைந்த படியால், கதைகள் அநுமரணம் பண்ணின என்கிறார். ('அவர்கள் தாரங்களும்' என்று பாடமானால், மௌஸல பர்வத்தில் வஸுதேவ ருடைய பத்நிகள் அநுமரணம் செய்தது முதலானவையை எடுத் துக்கொள்ள வேண்டும்.)

[20] 1. 2 2. மன்-ஸ்திரமான, உயிர் - ஜீவாத்மாவினுடைய, ஆக்கைகள் - சரீரங்கள், மின்னில் - மின்னலைக் காட்டிலும் கூட நிலையில - நிலையில்லாதது.

[21] திருமாலை 3. வேதநூல் - வேதசாஸ்திரங்களில் சொல் லியபடி, நூறு பிராயம் - நூறு வருஷங்கள் (மனிதர் ஜீவித்திருந் தாலும், பெரும் பகுதி வீணாகக் கழிகின்றன).

[22] நளன் - தேவதைகளின் இஷ்டத்திற்கு விரோதமாக, நளன் தமயந்தியை மணந்ததால், கலி அவனுடைய சரீரத்தில் புகுந்து ராஜ்யத்திலிருந்து அவனை வெளியேற்றி, பைத்தியம் பிடித்தவன் போல் அலையச் செய்தான். அந்த நிலைமையே இங்கு விவக்ஷிதம்.

ந்ருகன்—வைவஸ்வதமனுவின் புத்திரன். இவன் கோடிக் கணக்கான பசுக்களை தானம் செய்தான். ஒரு ஸமயம் ஒரு பிரா மணனுக்குக் கொடுத்த பசு அரசனுடைய அரண்மனைக்கே திரும்பி வந்துவிட, அது தானம் செய்யப்பட்டது என்றுஅறியாமல், அதை வேறொருவனுக்குத் தானம் செய்தான். அந்த பிராம்மணர்களிரு வரும் பரஸ்பரம் சண்டையிட்டுக்கொண்டு, அரசன் உடனே தங்க ளைக் காணவாராததால், 'நீ ஓணாகக் குழியில் வஸிப்பாய்' என்று சபித்துவிட்டார்கள். பிறகு ஸ்ரீ கிருஷ்ணனுடைய கையினால் அவ னுக்கு சாபவிமோசனம் ஏற்பட்டது. (ராமாயணம், உத்தரகாண் டம் 53, 54; பாகவதம் 10. 64.)

அநுமரணம் பண்ணிப் போனபடிகளையும் கேட்டால், [23]"இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்னும்படி ராஜ்யாதிஸாவஸஜ்ஜம் ஸுதூஷ்ஜியாது.

தன்னோடொக்க [24]ஒழுகு சங்கிலியிலே கோப்புண்டு உழலுகிற தேவர்களுக்கு இறைக்குடிமகனாய் நெடுநேர்த்திகளோடும் நெடும் காயக்லேஸங்களோ

நஹுஷன்—ஆயுஸ்ஸின் புத்திரனும் யயாதியின் தந்தையுமான இவன் சந்திரவம்சத்து அரசர்களில் ஒருவன். ஒரு காலத்தில் இந்திரன் ப்ரஹ்மஹத்தி பாபத்தினால் மறைந்திருந்தபோது, நஹுஷன் இந்திரனாக நியமிக்கப்பட்டான். அப்போது இந்திராணியிடம் காதல்கொண்டு, ஸப்தரிஷிகள் தூக்கிச்செல்ல ஒரு பல்லக்கில் அவளுடைய அரண்மனைக்குச் சென்றான். இவனுக்கு இருந்த ஆவலினால், அவர்களை 'செல், செல்' (ஸர்ப்ப, ஸர்ப்ப) என்று விரட்ட, அதனால் கோபம்கொண்ட அகஸ்த்யர் அவனை மலைப்பாம்பாயாகும்படி சபித்தார். உடனே அவன் ஆகாசத்திலிருந்து கீழே விழுந்து அந்த நிலையுடன் வெகுகாலம் இருக்கும்போது, யுதிஷ்டிரனால் அவனுக்கு சாபம் நீங்கிற்று.

ஸோமகன் என்னும் அரசன் தன்பிள்ளையின் சரீரத்தைக் கொண்டு யாகம் செய்ததினால் நரகாவஸ்தையை அனுபவித்ததும் இங்கே கொள்ளவேண்டியது. (மஹாபாரதம் ஆரண்யபர்வம் 128, 129.)

[23]பெரு.தி.4.5. இன்பு-எல்லா போகங்களையும், அமரும் - பூஜிக்கும், செல்வமும் - ஸம்பத்தும், இவ்வரசும் - அதற்குக் காரணமான ராஜ்யமும், நான் வேண்டேன்.

[24] ஒழுகு சங்கிலி-அனேகம் மாடுகளைக் கட்டும்படியாக வயல்களில் கட்டப்படும் நீண்டதான சங்கிலி (அல்லது கயிறு). கோப்புண்டு - கட்டப்பட்டு, இறைக்குடிமகன்-வரிகொடுக்கும் படியாள். நெடுநேர்த்தி - பல பிரார்த்தனைகள்; மிகுந்த சிரத்தை.

டும் நெடுநாள் பண்ணின யஜ்ஞாதிபுண்யபலத்திற்குப் பலமாக ஸ்தூலசரீரம் விழுந்தால் ஸம்ஸாரித்வஹேது காரணமான †பூதஸூக்ஷ்மஸமுதாயத்தோடே கூடி ப்ராணவ்ருத்திவிசேஷவிசிஷ்டனாய்க்கொண்டு தூமராத்ரி க்ருஷ்ணபக்ஷ-தக்ஷிணாயந-பித்ருலோக-ஆகாச-சந்த்ரமார்க்கத்தாலே ஸ்வர்க்கப் பரணிலே ஏறி, அங்கே தேவ ஜாதி என்னும்படி ஒரு தேஹத்தை எடுத்து, எருது பரதேசம்போன கணக்காய் தனக்கு மேலான தேவர்களுக்குப் 'வாஹ' என்னலாம்படி எடுத்துச் சுமந்து திரிந்து, ஏறவிட்டகர்மம் விலைசயற்றவளவிலே, [25]"அந்தவத்து பலம் தேஷாம்" [26]"ஆப்ரஹ்மபுவநால்லோகா:" [27]"சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள்" இத்யாதிகள்படியே தள்ளுண்டு தகரவிழுந்து, அங்கே தேவசரீரத்தையும் இழந்து, அதின் பூதஸூக்ஷ்மஸமுதாயத்தோடேகூட வந்து ஸ்தானத்தினின்றும் ஆகாச-வாயு-தூம-அப்ர-மேக-வ்ருஷ்டி-வ்ரீஹ்யாதிகளாலே §பிரியப்பேரிடவொண்ணாதபடி கலந்து போந்து, அந்நாச்ரிதனாய்க்கொண்டு புருஷசரீர நரகத்திலே ப்ரவேசித்து, ரேதோரூபபரிணாமத்தாலே ஸ்த்ரீசரீரசோணிதமத்யத்திலே விழு

†பூதஸூக்ஷ்ம ஸமுதாயத்தோடேகூட—ம. §பிரித்துப் பேரிட-ம

[25]கீதை 7. 23. [26]கீதை 8. 16. [27]4. 1. 9.

எருது பரதேசம்போன கணக்காய்-தீனியைப்போட்டு வேலை வாங்கும் எஜமானனை வெறுத்து, 'ஸுகமாக இருக்கவேண்டும்' என்று நினைத்து எருது பரதேசம் சென்றால், அங்கொருவன் அதைப் பிடித்துக் கட்டி வேலை வாங்குவானே யொழிய, அதன் சொந்தக்காரனைப் போலத் தீனி போடமாட்டான். (அதுபோல ஜீவர்கள் ஸ்வர்க்கம் சென்றால் அங்கும் உழைக்க வேண்டியதே.) தகர=சிதறும்படியாக.

ந்து, 28'கலலபுத்புதாத்யவஸ்தைகளையும் அடைந்து ஸ்ராவபாதாதி விபத்துக்களுக்குத் தப்பினானாகில் 29'புண்ணை மறைய வரியுண்டு' ஶக்ருந்மூத்ரஹாவஜ்ஞஶாயியாய் *ஸம்விஷ்டிதஸர்வகாத்ரனாய், முகம் புதையுண்டு, க்ஷுதிதுஸ்ஸஹங்களான கர்ப்பவாஸக்லேஶங்களையும் அநுபவித்து, உல்பஸம்வேஷ்டிதனாய், ஸாந்த்ரவ்ருஷ்ணீ †ஸ்ரீவனாய்க்கொண்டு ப்ராஜாபத்யவாயுவாலே தலைகீழாகத் திருப்புண்டு ப்ரஸூதிமாருதவேகத்தாலே யோநியந்த்ரபீடிதனாய்க்கொண்டு மஹாதுக்கத்தோடே ஶல்யங்கள்போலே அஸ்ருக்விஸ்ரஸ்தானத்திலே விழுந்து பாஹ்யவாயுஸம்ஸ்பர்ஸத்திலே மோஹிநியான வைஷ்ணவமாயையாலே அபஹ்ருதப்ரஜ்ஞனாய் ஜந்மாந்தர ஸம்ஸ்காரஸ்ம்ருதிகளை இழந்து, 30'ஐவர் திசை திசை வலித்தெற்ற' பால்யாதிவயஸ்காலங்களிலே வாஸ

*ஸம்வீஷிதஸர்வகாத்ரனாய் — க. †யோநீஸ்ரீவனாய் — வ.

28கலலம் — பா. 28கலிலம் (கலலம்) — ஒரு இரவு ஆன கர்ப்பம்; புத்புதம் — ஏழு ராத்திரிகளான கர்ப்பம்.
(ஏகராத்ரோஷிதம் ஸம்யோகாத் கலலம், ஸப்தராத்ரோஷிதம் புத்புதம் பவதி)

ஸ்ராவம் — (நான்கு மாதத்திற்குள் ஏற்படும்) ஜலரூபமான கர்ப்ப விநாசம்; பாதம் — (ஐந்தாவது அல்லது ஆறாவது மாதத்தில் வரும் கடினமான கர்ப்பம்) விழுதல்.

295. 1. 5. (சரீரத்திற்குள் இருக்கும்) புண் முதலான தோஷங்களைக் காணவொண்ணாதபடி, இடைவெளியில்லாமல் கட்டி.

உல்பம் — கர்ப்பப்பை. (உல்பஸம்வேஷ்டிதோ ஸாந்த்ரவ்ருஷ்ணீவாஸிஸம்ஹதி: — வி. பு. 6. 5. 10. இங்கு சொல்லப்பட்டதையெல்லாம் விஷ்ணுபுராணம் ஆறாவது அம்சம் ஐந்தாவது அத்தியாயத்தில் விஸ்தாரமாகக் காணலாம்.)

307. 1. 10. (ஐந்து இந்திரியங்களும் திக்குத்தோறும் இழுத்து உதைக்க)

ஸம்ஸாரஸம்பந்தியாலே தப்தனாய், [31]“அநேகோத்பாதஸம் ஸ்ருத்வாஸ்யபீடாணா: ப்ரவக்ஷ்யதே” என்கிறபடியே ஏதேனுமொரு வயஸ்ஸிலே மரணவேதனையோடே தலைக் கட்டி பழைய வட்டத்திலே [32]சூறுவளிக்காற்றுபோலே சுழலும்படிகளைக் கேட்டால் ஸ்வபீடாதி ஸம்ஸாரஸங்க நிவ்ருத்தியுண்டாம்.

[33]ராவணஹிரண்யப்ரப்ருதிகள் *கையிலே இந்த்ராதிகள் படும்பாட்டைக் கேட்டால், †சந்தனக் கழுவோடொத்த லோகபாலாதிபதங்களிலும் ஸங்கம் தீரும்.

அவர்களைப் பீடித்த ராவணாதிகள் தாங்களும் [34]கார்த்தவீர்யாதிகள் கையிலே கட்டுண்டும் நெருக்

* கையிலே படும்பாட்டை—ம. †சந்தனக்கழிவோடொத்த—க.

31 [32]சூறுவளிக் காற்று=சுழல் காற்று.

சந்தனக்கழு—குற்றவாளிகளைக்கழுவேற்றிக் கொல்வதற்கான கழுமரத்தைச் சந்தன மரத்தால் செய்தாலும், அதனால் இறப்பவனுக்கு ஸுகமிராது. அதுபோன்றவை இந்திராதிபதங்கள்.

[33]ராவணன், ஹிரண்யன் முதலானோர், இந்திரன், குபேரன் முதலான லோகபாலர்களை ஜயித்து, அவர்களுடைய ராஜ்யம், மனைவி எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு, அவர்களை வெருட்டியும் சிறையிலிட்டும் ஹிம்ஸித்ததையெல்லாம் உணர்ந்தால், அவர்கள் பதவியிலும் ஆசை உண்டாகாது என்று கருத்து.

[34]கார்த்தவீர்யார்ஜுனன் - மாஹிஷ்மதிக்கு அரசனான இவன் தவத்தால் ஆயிரம் கைகளையும் அளவற்ற பலத்தையும் பெற்றான். ஒருநாள் தன் ஆயிரம் கைகளாலும் நதியின் ஜலத்தைத் தேக்கி, தன் பத்தினிகளுடன் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்தான். அப்போது அந்த இடத்திற்கு மேற்கே ராவணன் ஆற்றுமணலில் பூஜை செய்துகொண்டிருக்க, தேக்கப்பட்ட ஜலம் அந்தப் பூஜையை வெள்ளமிட்டது. ராவணன் கோபங்கொண்டு, கார்த்தவீர்யார்ஜுனனோடு சண்டைக்குவர, அவன் ராவணனை நாண்கயிற்றால் கட்டித் தன் நகரத்திற்குக் கொண்டுபோய்விட்டான். பிறகு புலஸ்தியரின் வேண்டுகோளுக்கிணங்கி ராவணனை விடுவித்தான். (ராமாயணம் உத்தரகாண்டம் 77, 78). அவ்விதமே ராவணன் வாலியால் கண்டுண்டதும் இங்கே நினைக்கத் தக்கது.

குண்டும் முடிவில் வஸ்த்ரச்சத்ராதிகளையும் இழந்து கழுகு நிழலிலே ச்ருகாலங்கள் கதறக் கிடந்தபடிகளைக் கேட்டால், [35]'திண்கழற்கால் அசுரர்கள்' செல்வங்களிலும் சிந்தை *செல்லாது.

இவர்களுக்கு வரம் கொடுத்து வாழ்விக்கவல்லனாய், [36]ஸர்வமேதயஜ்ஞத்தாலே 'தேவதேவன்' என்று பேர் பெற்றுத் திரிபுரம் எரிக்கும் சேவகமுடையனான ஸ்ருஷ்டி ஸம்ஹாராதிகாரிக்கு [37]வ்ருக-ஸுரகாதிவ்ருத்தாந்தங்களில் பிறந்த விசேஷங்களைக் கேட்டால், ஸைவத்திலும் ருசி பிறவாது.

---

*சோராது--ம

[35]3. 5. 2. (திண்கழல் – திடமான வீரக்கழல்களணிந்த, கால்களையுடைய அஸுரர்களின் செல்வத்திலும்).

[36]ஸர்வமேதம் – தன்னுடையதெல்லாவற்றையும், கடைசியில் தன்னையும் கொடுத்துச் செய்யும் யாகம்.

பூமி, ஆகாசம், அந்தரிக்ஷம் என்ற மூன்று இடங்களிலும் பொன், வெள்ளி, இரும்பு, என்ற மூன்று உலகங்களால் அஸுரர்களுக்காக மயனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதற்குத் திரிபுரம் என்று பெயர். அந்த அஸுரர்களின் ஹிம்ஸையைப் பொறுக்காத தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, அந்த பட்டணங்களையும் அவ்வஸுரர்களையும் சிவன் எரித்தார்.

[37]வ்ருகாஸுரன் - இந்த அஸுரன் தன் கொடிய தவத்தினால் பரமசிவனை ஸந்தோஷப்படுத்தி, 'நான் எவர் தலையில் கைவைக்கிறேனோ அவர் இறக்கவேண்டும்' என்று வரம் பெற்றான். அதைப் பரீக்ஷிப்பதற்காக சிவன் தலையிலேயே கையை வைக்கும் பொருட்டு அவரைத் தொடர்ந்தான். அதனால் பயந்து சிவன் ஓட, அப்போது விஷ்ணு ஒரு அழகிய சிறுவனாய் அவன் முன்தோன்றி இனிய வார்த்தைகளால் அவன் ஓடும் காரணத்தை விசாரித்தார். அவன் நடந்ததைச் சொல்ல, 'தக்ஷனுடைய சாபத்தால் பிசாசத் தன்மையை அடைந்த சிவனுக்கு இவ்வளவு சக்தி ஏது? நான்

சில ஸ்ருஷ்டி விசேஷங்களிலே ருத்ரனுக்கு ஜ்யேஷ்ட ப்ராதாவாயும் பிதாவாயும் பிறந்து, ஸர்வேஶ்வரனுக்கு ஔரஸபுத்ரனுமாய் ஸ்வரூபஹிதஶிஷ்யனுமாய்க் கொண்டு, க்ஷேத்ரஜ்ஞருடைய ஆநந்தங்களெல்லாவற்றிலும் மேலான ஆநந்தத்தையுடையனான ப்ரஹ்மா தான் [38]'பெருவிசும்பின்மீது போயிருக்கும் நெடுவெள்

நம்பவில்லை. உன் தலையிலேயே சற்றுக் கையை வைத்துப் பார்' என்று அச்சிறுவன் சொன்னான். மந்தபுத்தியான அவன் அவ்விதமே செய்ய, உடனே இறந்தான். (இது ஸ்ரீபாகவதம் தசம ஸ்கந்தம் 88-வது அத்யாயத்தில் இருக்கிறது.)

அந்தகாஸுரன் - ஒரு ஸமயம் பரமசிவனுக்கும் அந்தகனுக்கும் யுத்தம் நேரிட, சிவனுடைய ஆயுதங்களினால் அடியுண்ட அந்தகனுடைய சரீரத்திலிருந்து பெருகின ரத்தத்தின் திவலைகள் ஒவ்வொன்றும் அவனடைந்த வரபலத்தால் ஒவ்வொரு அந்தகனாகக் கிளம்பி அவர்கள் பரமசிவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்போது சிவன் வாஸுதேவனைச் சரணமடைய, அந்த பகவானான விஷ்ணு சுஷ்கரேவதியை (அட்டை என்னும் ஜந்துவை) ஸ்ருஷ்டித்தார். அவையும் அவ்வஸுரனின் ரத்தங்களையெல்லாம் பருகிவிட்டன. (இது மத்ஸ்ய புராணத்திலுள்ளது. இக்கதையை ஆளவந்தாருடைய ஸ்தோத்ரத்தின் 13-வது சுலோக வ்யாக்யானத்தில் ஸ்ரீதேசிகன் எடுத்து உதாஹரித்திருக்கிறார்.)

வ்யஷ்டி ஸம்ஹாராதிகாரி— மஹாப்ரளய காலத்தில் ப்ருதிவீ முதலான பஞ்ச பூதங்களிலிருந்து பிரகிருதி வரையில் லோகங்களுக்கும் ஏற்படும் ஸம்ஹாரத்திற்கு 'ஸமஷ்டி ஸம்ஹாரம்' என்றும், பஞ்ச பூதங்கள் வரையில் ஏற்படும் ஸம்ஹாரத்திற்கு 'வ்யஷ்டி ஸம்ஹாரம்' என்றும் பெயர். இந்த வ்யஷ்டி ஸம்ஹாரம் சிவனுடைய அதிகாரத்திலிருக்கிறபடியால், அவருக்கு வ்யஷ்டி ஸம்ஹாராதிகாரி என்று பெயர். அப்படியே நான்முகனுக்கு வ்யஷ்டிஸ்ருஷ்டி அதிகாரி என்று பெயர்.)

[38] தி. மொ. 11. 6. 6.

ளமெல்லாம் கணைக்காலளவாம்படி' வளர்ந்துவந்த ஜலௌகடிலர்களைக் கண்டு ஹாலயாகராஜனாய், தனக்குக் கண்களும் தநங்களுமான வேதங்களைப் பறி கொடுத்து, [39]சுருணை சோர்ந்த கணக்கனைப் போலே நீர்க்கடை நிலக்கடை யறியாதே விலாபம் பண்ண, அப்போது கேட்டருளினுனெரு பரமகாருணிகனுன வன் விரோதிநிராகரணம் பண்ணி வேதங்களையும் மீட் டுக்கொடுக்க, மீண்டும் 'ஸுகாயிவதி' என்று வீற்றிருந் தபடியையும் அநுஸந்தித்து, [40]"ப்ரஹ்மாத்யா: ஸகலா தேவா மநுஷ்யா: பஶவஸ்ததா" [41]"கர்மணாம் பரிணாமித்வாத் ஆவிரிஞ்சாதமங்களம்"

---

[39]சுருணை = கணக்கெழுதப்பட்ட ஓலைச்சுருள். நீர்க்கடை - நீர் தங்கும் குளம் முதலியவற்றின் எல்லை; நிலக்கடை - நிலங்க ளின் அளவு. [39]நீர்க்கிடை நிலக்கிடை-பா.

[40]ப்ரஹ்மாத்யா: ஸகலா தேவா மநுஷ்யா: பஶவஸ்ததா।
விஷ்ணுமாயாமஹாவர்த்த மோஹாந்ததமஸாவ்ருதா: ॥

(வி. பு. 104. 23.)

ப்ரஹ்மா முதல் ஸ்தம்பமென்னும் சிறு புழு வரையிலுள்ள (இவ்வுலகிலுள்ள எல்லாப்பிராணிகளும் புண்யபாபரூபகர்மங்களால் ஏற்பட்ட ஸம்ஸாரத்திற்கு அதீனமாய் இருப்பவர்கள்.)

[41]இதி மத்வா விரக்தஸ்ய வாஸுதேவ: பரா கதி: ॥

என்று உத்தரார்த்தம். (பாகவதம் 11. 19. 18 .

அவரவர்களின் கர்மங்களின் பலனாலேயே உண்டானதாகை யால் ப்ரஹ்மா வரையிலுள்ள ஸகல ஜீவர்களுடைய நிலைகளும் அமங்களமானது (துக்கரூபமானது) (என்று ஆராய்ந்து அறிந்து அவற்றில் ஆசையை விட்டவனுக்கு வாஸுதேவனே ஶ்ரேஷ்ட மான உபாயம்)

('விபஶ்சிந்நஶ்வரம் பஶ்யேத் அத்ருஷ்டமபி த்ருஷ்டவத்')

[என்று ஸ்ரீ பாகவதத்தில் பாடம்.]

[42]"சக்யா கணயிதும் லோகே ந வ்யதீதா: பிதாமஹா:," [43]"நினைப்பான் புகில் கடலெக்கலின் நுண் மணலில் பலர்" இத்யாதிகளையும் நிரூபித்தால், [44]"ந தந்ய: ப்ரஜாநாதைச்வர்யம்" இத்யாதிகளிற்படியே ஹிரண்யகர்ப்பவைபவத்தையும் த்ருணீகரித்து, [45]கூட்டரிய துயரறுசுடரடியே கூடலாமாகில், ஒரு கதம்பாதி ஸ்தாவரஜந்மத்தையே ஆகாங்க்ஷிக்கும்படியாம்.

---

[42]வைஷ்ணவ தர்மசாஸ்திரம்.

கங்காயாம் ஸிகதா தாரா யதா வர்ஷதி வாஸவே

என்று பூர்வார்த்தம்.

(கங்கையின் மணல் போலவும், இந்திரன் வர்ஷிக்கும்போது மழை தாரைகள் போலவும்) இவ்வுலகில் (இருந்து) கழிந்தவர்களான பிரஹ்மாக்கள் எண்ணமுடியாதவர்கள்.

[43]4. 1. 4. நிரூபிக்கப் புகுந்தால், அலைவாயில் எக்கலில் நுண்ணிய மணலிலும் காட்டில் அதிகரான (ப்ரஹ்மாதிகள் இவ்வுலகங்களை ஆண்டு கழிந்தவர்கள்.)

[44]ந தந்ய: ப்ரஜாநாதைச்வர்யம் பசுநாதம் வா ந காமயே।
அஹம் கதம்போ பூயாஸம் குந்தோ வா யமுநாதடே ॥

ப்ரஜாபதி, பசுபதி இவர்களின் ஐசுவர்யத்தை நான் ஆசைப்படவில்லை, யமுனைக்கரையில் (கண்ணன் ஏறி விளையாடும்) ஒரு கதம்ப மரமாகவாவது குந்த விருக்ஷமாகவாவது இருக்க விரும்புகிறேன்.

[45]4. 9. 9; 1. 1. 1. (சேருவதற்கு அறிதானதும், ஆச்ரயித்தவர்கள் துக்கத்தையெல்லாம் போக்கும் எழிலுள்ள திருவடிகளை அடையலாமாகில்)

*இப்படி பரமாத்மஸ்தாநத்தைக் கேட்டவர்களுக்கு 46"ஸந்த்யேவ நி47"தஸ்யாந்தராயோ ரயாஹ்யேதே," மைத்ரேய" என்கிறபடியே 48இமையோர் வாழ் தனிமுட்டைக் கோட்டைக்குட்பட்ட குறிச்சிகளெல்லாம் மூவேழு நரகங்களோடொக்க இவையும் ஈரேழு †நரகம் என்று எண்ணலாம்படியிருக்கும். 49"யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத:" என்னும்படியாய் நிர்துக்கமான 50தெரிவரிய அளவில்லா ஸ்வாத்மாநுபவமும் ப்ரதிபந்தகவிஶேஷத்தாலே பரமாத்மாநுபவத்தோடே கூடாதே சிற்றின்பமாய்,

---

*'இப்படி' இது இல்லை—ம. †நரகம் என்னலாம்படியிருக்கும்-க.

46ஸந்த்யேவ நிரயா ஹ்யேதே ஸ்தாநஸ்ய பரமாத்மந:
(பார. சா. 196.4).

மற்றத் தேவர்களுடைய இந்த ஸ்தானங்களெல்லாம் பரமாத்மாவின் ஸ்தானத்தோடு ஒப்பிட்டால் நரகங்கள் தான்.

47வாஸுதேவே மநோ யஸ்ய ஜபஹோமார்ச்சநாதிஷு ।
தஸ்யாந்தராயோ மைத்ரேய தேவேந்த்ரத்வாதிகம் பலம் ॥
(வி. பு. 2. 6. 43.)

ஏ மைத்ரேய! ஜபம், ஹோமம், அர்ச்சனை முதலிய காலங்களில் எவனுடைய மனது வாஸுதேவனிடமிருக்கிறதோ, அவனுக்கு தேவேந்திரனுகை முதலான பலமெல்லாம் விக்னம்தான்.

484-9-8 (ப்ரஹ்மாதிகளான தேவதைகள் வாழும் ஒப்பற்ற அண்டமாகிற கோட்டைக்குட்பட்ட). குறிச்சி—சிறிய ஊர்.

49கீதை 6. 22. எந்த போகத்தை அடைந்து, (அதிலிருந்து ஓய்ந்தபோதும்) அதைக் காட்டிலும் மேலான வேறு லாபத்தை எண்ணுகிறதில்லையோ.

504. 9. 10. இந்திரியங்களால் அறியவரிதாயும் அளவற்றதாயும் இருக்கிற.

[51]"இறுகல் இறப்பென்னும் ஞானிக்கும் ‡அப்பய னில்லையேல்" என்றும்; [52]"ஸர்வே ச்யவநதர்மாண:" என்றும் சொல்லுகிறபடி கழிப்பானுகையாலே [50]'ஒழிந்தேன்' என்று உபேக்ஷாவிஷயமாம். போக்த்ருநித்யத்வம் போலே போக்யநித்யத்வமும் போகநித்யத்வத்தைக் குறித்து ஸாதகமன்று. [53]"மன்னுறில்" என்னும் வ்யதிரேகோக்தியாலும் இவ்வர்த்தம் ஸித்தம்.

இப்படிப் ப்ரயோஜநாந்தரவிரக்தி பிறந்தால், [54]"உன்னலல்லால் யாவராலும் ஒன்றும் §குறை வேண்டேன்"

---

‡அப்பயனில்லையேல் என்னும்படி 'ஸர்வே ச்யவநதர்மாண:' என்று சொல்லும்படி—க.

§குறைவேண்டேன் என்றும், உன்னித்து மற்றோர் தெய்வம் தொழாளவனையல்லால் என்னும்படி (என்றும் சொல்லுகிறபடி) பரிமித பலப்ரதமான—க.

51 4. 1. 10. இறுகல்—சுருங்குதல், அதாவது ஆத்மமாத்ராநுபவத்தையே, இறப்பு - மோக்ஷம், என்னும் - என்று சொல்லுகிற ஞானிக்கும், அப்பயனில்லையேல் - அந்த பகவதுபாஸனமில்லையாகில், ஆத்மாநுஸந்தானம் பண்ணவொண்ணாது.)

[52]பார. சாந்தி. 3.50. 35 (ஐச்வர்யம், ஆத்மாநுபவம் இவற்றை விரும்புகிறவர்களெல்லாரும் பகவானிடமிருந்து புருஷார்த்தத்தைப் பெற்றதும் திரும்புகிறவர்களாகையால்) நச்வரதையே ஸ்வபாவமாக உடையவர்கள்.

அநுபவிக்கும் ஆத்மா நித்யமாயிருப்பதால், அவனுடைய ஸுகம் நித்யமாக இருக்கவேண்டும் என்று எப்படிச் சொல்லமுடியாதோ, அப்படியே அநுபவிக்கப்படும் வஸ்து நித்யமாயிருப்பதால் ஸுகம் நித்யமாயிருக்கும் என்று சொல்ல முடியாது.

[53]1. 2. 5. ஸ்திரமாக இருக்கப் பார்த்தால் (தன்னைப் பற்றினால், 'இன்னமும் அதுக்கு அவ்வருகே ஒரு அநுபவமுண்டு' என்று இருக்க வேண்டாதபடியான நிலை நின்ற புருஷார்த்தத்தை பற்றப் பார்க்கில், ஸர்வேச்வரனைப் பற்று.) [54]5. 8. 3.

என்னும்படி வஸிஷ்டதஷவஷமான [55]மற்றொரு தெய்வம் தொழாதே, [56]மற்றுமோர் தெய்வம் உளதென்றிருக்கும் ஸௌஷிதாவிஷவஜநத்தோடும் நெருங்காதே, [57]"யஷ்யம் யஷ்யம் வயம் வயம்" என்று வேறுபட்டு, [58]"கொள்ளக் குறைவில்லாத வள்ளல் மணிவண்ணன் பக்கலிலும் [59]கூறை சோறு என்றாற்போலே தனக்கு மற்றொரு ஷயொஜநாஷூத்தை அபேக்ஷியாதே, உஹாஷலாவமான உஷூரத்தில் உத்ஸவணா யத்திலே ஊற்றமுடையனும்.

தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தால் மிக்க
 தார்வேந்தர் தொழவையம் ஆண்டார் மாண்டார்
சந்திரனும் சூரியனும் வீயும் காலம்
 தாரகையின் வடம் அற்றுத் தனிவான் ஆகும்
இந்திரனும் ஏறுயர்த்த ஈசன் தானும்
 ஈரிரண்டு முகத்தானும் இல்லா வந்நாள்
நம் திருமால் நிலைகண்டார் நாகமெல்லாம்
 நரகென்று நற்பதமே நாடுவாரே. 7.

ஐதி வஷஉவஷவொவாநெ தஷதீயம் விஷக்திவவு ॥

---

[55]4. 6. 10. [56]தி. மொ. 8. 10. 3.

[57]சுஉ ஷஷுதி ஹெ ஷொகா யஷ்யம் யஷ்யம் வயம் [வயம் ।
சுயஷுகாஉவஷா யஷ்யம் நாஷாயணவஷா வயஷு ॥

ஏ உலகத்தீரே! இது முதல் நீங்கள் வேறு; நாங்கள் வேறு. நீங்கள் அர்த்தகாமங்களை விரும்பிச் செல்லுகிறீர்கள்; நாங்களோ நாராயணனை நாடிச் செல்லுகிறோம்.

[58] 3. 9. 5. [59]பெரி. தி. 5.1.4. (கூறை - வஸ்த்ரம்)

சதுர்த்தம் பீதிபர்வ ॥

துறவறமே துணிவார் துணுக்கற்ற இளம்துணிவோர்
உறவிலராதலில் நாமுயர்ந்தாருடன் ஒன்றிநின்றோம்
மறவழிமாற்றி எம்மையலைத் தீர்த்தவர் மன்னருளால்
கறவையுகந்தபிரான் கழல் சூடும் கருத்தினமே. 8.

இப்படி விவேக விசேஷத்தாலே துராசாராதி நிவ்ருத்தியும், [1]நிர்வேதவிசேஷத்தாலே நிஷித்த நிவ்ருத்தியும், விரக்திவிசேஷத்தாலே பந்தககாம்ய நிவ்ருத்தியும் பிறந்தாலும், பூர்வார்ஜிதமுமாய், புக்தபலமுமன்றிக்கே க்ருதப்ராயஶ்சித்தமுமன்றிக்கே [2]ப்ராரப்தகார்யமுமாய், அநாரப்தகார்யமுமாய்க் கிடக்கிற கர்மஸமூஹத்தைப் பார்த்தால், போகத்தாலேயாதல் ப்ராயஶ்சித்தத்தாலேயாதல் நிஶ்ஶேஷமாகக் கழிக்க அரிதாய் இருக்கிறபடியையும்; இவற்றின் பலமான அநந்த ஸ்தாவரஶரீரங்களைப் பரிக்ரஹித்து அபாயமான ஸம்ஸாரத்திலே அழுந்தவேண்டும்படி வரும் கர்ப்ப-ஜந்ம-ஜரா-மரணாதி-ஸ்வர்க-நரக-ஆவ்ருத்தி-ப்ரவாஹத்தையும்,

---

[1]நரகபயத்தால் பாபத்தைச் செய்யாதிருக்கவேண்டும் என்கிற எண்ணம் நிர்வேதம்; புண்யபலமான ஸ்வர்க்காதிகளின் தோஷத்தைக் கண்டு அவற்றில் ஆசையை விடுதல் வைராக்யம்.

2 ஒருவனால் செய்யப்பட்ட அளவற்ற பாபங்களில், பலத்தை கொடுக்க ஆரம்பித்திருப்பது ஆரப்தகார்யம்; அந்த பாப பலத்தை அநுபவித்து முடிந்ததும், தங்கள் பலத்தை முறையே கொடுக்கும் பொருட்டு அவ்வநுபகாலத்தின் முடிவை எதிர்பார்த்திருப்பவை அநாரப்த கார்யம்.

[3]உயர ஏறித் துல்யசீலராய்த் தோற்றினாரை ஹஸ்தாலே 'த்வம்ஸ' என்று தகரவிழவிடுவார், [4]ஸ்வவிஷயவ்ருத்திகளை மநுஷ்யமாம்ஸபக்ஷணத்திற்கு மதாமதம் பண்ணிவைப்பார், [5]ருத்ரவரமானாரை ஸவிநீதராக்கிக்கொ

3 இது இந்திரனைப் பற்றிய கதை. சந்திரவம்சத்து அரசனான யயாதி என்பவன் மஹாதபஸ்ஸைச் செய்து ஸ்வர்க்கம் சென்று அங்கு தேவேந்திரன் போலவே ஸகலஸுகங்களையும் அனுபவிக்க ஆரம்பித்தான். அதைக் கண்டு இந்திரன் 'தவத்தால் உனக்கு ஸமானமானவர் இருக்கிறாரா ?' என்று கேட்க, யயாதி 'என்னைப் போல் உலகில் எவரும் தவம் செய்ததில்லை' என்று தான் செய்த தவத்தைப் புகழ்ந்து கூறினான். 'தான் செய்த தவத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டால், தவம் குறைந்துவிடும்' என்பதைச் சொல்லி இந்திரன் யயாதியைக் கீழே தள்ளிவிட்டான். (பாரதம் ஆதிபர்வம் 82.)

4 ஸ்வவிஷய விருத்திகளை— தன் தேசத்தில் இருப்பவர்களை, மனுஷ்ய மாம்ஸத்தைத் தின்னும் பொருட்டு பூலோகத்திற்குப் போய் வரும்படி செய்பவர். இது பிரஹ்மாவைப்பற்றின உபாக்யானம்.

விதர்ப்பதேசாதிபனான ச்வேதன் என்பவன் ஆஹாராதிகளைத் தள்ளி கொடிய தவத்தைச்செய்து பிரஹ்மலோகம் சென்றான். அங்கு அவனுக்குக் கடும்பசியும் தாகமும் உண்டாயிற்று. 'அது ஏன்' என்று ப்ரஹ்மாவைக் கேட்க,, அதிதிபூஜை செய்யாமலும் சரீர ஸுகமொன்றையே கருதி நீ தவம் செய்தாயாதலால், பசி தாகமில்லாத என் உலகிலும் உனக்குப் பசி உண்டாயிருக்கிறது. அது நீங்குவதற்கு நீ தவம் செய்த குளத்தில் தினமும் காலையில் புஷ்டியான உன் பிணம் மிதக்கும்; அதை நீ தினம் தின்றுவருவாயாக' என்று ப்ரஹ்மா சொன்னார். பிறகு அவனுக்கு அகஸ்த்யரால் விமோசனம். (ராமாயணம் உத்தரகாண்டம் 77, 78).

5 வேலைக்காரர்கள் போல் தனக்கு பூஜை முதலான வேலைகளைச் செய்துகொண்டிருக்க வேண்டியவர்களை தான் கொடுத்த வரத்தாலேயே கர்வமடையும்படி செய்து, அவனுக்குத் துன்பம் விளைவிப்பார். இது ருத்ரனைப்பற்றிய உபாக்யானம்.

ண்டு ஆள்வாரான தேவதாந்தரங்களினுடைய ஆராதனயில் தோஷங்களையும்; [6]'நமன்தமர்பாசம் விட்டால் அலைப்பூணுண்ணும் அவ்வல்லல்களை'யும்; [7]'வெஞ்சொலாளரான நமன்தமர் செய்யும் வேதனைகளையும்; யீரஞனை தர்மபுத்ரன் கேட்டு மோஹித்து விழும்படியான நரகவர்ணனத்தின்படிகளையும்; ஸுதிக்ஷ்ணஸஹஸ்ர-ஸுநந்த-நரகயாதனைகளையும் [8]தாபத்ரயாத்யாயாதி

பலிசக்ரவர்த்தியின் புத்திரனான பாணாஸுரன் பரமசிவனைக் குறித்துக்கொடிய தவத்தைச் செய்து, அவரிடமிருந்து ஆயிரம் கைகளையும் அதிக பலத்தையும் பெற்றான். அந்த ருத்ரனையே தன் பட்டணக் காவலாளியாகவும் இருக்கச்செய்தான். பிறகு ஒரு ஸமயம் ருத்ரனை அடைந்து 'நீர் கொடுத்த ஆயிரம் கைகளும் சுமையாகவே இருக்கின்றன. இம்மூவுலகிலும் உம்மைத் தவிர ஸமமாக என்னுடன் சண்டை போடுவாரே இல்லை. என்னைக் கண்டு எல்லாரும் அஞ்சி ஓடுகிறார்கள்.' என்றான். (பிறகு ஸ்ரீ க்ருஷ்ணனால் அவனுக்குத் தோல்வியுண்டாயிற்று.) (ஸ்ரீமத்பாகவதம் தசமஸ்கந்தம்—62.) [6]3. 2. 10. நமன்தமர்—யமகிங்கரர்கள் பாசம் விட்டால்-பாசத்தை வீசினால், அலைப்பூணுண்ணும்-(ஆசை இங்கும், பாசம் அங்கும்) இழுப்பதால் படும், அவ்வல்லல்களையும் கோரமான கஷ்டங்களையும். [7]தி. மொ. 5. 8. 4. (வெஞ்சொலாளர்—க்ரூரமான வார்த்தைகளையுடைய)

[8]தாபத்ரயாத்யாயம்—விஷ்ணுபுராணம் ஆறாவது அம்சம் ஐந்தாவது அத்யாயம். இதில் ஒரு ஜீவனுக்கு வரும் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்கிற மூன்று விதமான தாபங்கள் விரிவாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆத்யாத்மிகமாவது—சரீரம் மனது இவற்றையொட்டி வரும் வியாதி, துன்பம் முதலியன; ஆதிபௌதிகமாவது— பூதங்களினால் ஏற்படுவது; மனிதன் பசு, பக்ஷி முதலிய மற்ற ஜீவர்களால் ஒருவனுக்கு நேரும் துன்பங்கள்; ஆதிதைவிகமாவது— தைவத்தினால் உண்டாவது; உஷ்ணம், குளிர், வெள்ளம், காற்று முதலியவற்றால் ஏற்படும் கஷ்டங்கள்.

களிலே பரக்கக் கேட்டு, [9]"அஹம் ஹீதொஸ்மி," [10]"தெளி தொறும் நன்றும் அஞ்சுவன் நரகம் நான் அடைதல்" என்னும் தீவ்ருவீதியாலே [11]"காற்றத்திடைப்பட்ட கலவர் மனம் போலேயும், [12]"ஆற்றங்கரை வாழ் மரம்" போலவும் [13]"இருபாடெரிகொள்ளியினுள் எறும்பு போலவும், [14]"பாம்போடு ஒரு கூரையிலே பயின்ருற் போலவும், [15]"வெள்ளித்திடைபட்ட நரியினம் போலவும், *ப்ரயோஜநாந்தரபாருதல், தஸ்ப்ரயாநருதல், உபாயபலாபாஸியாதல், மோக்ஷப்ரயாநருதல்

---

*ப்ரயோஜநாந்தரபாருதல்—க.

[9]அஹம் ஹீதொஸ்மி தேவேஶ ஸம்ஸாரேஸ்மிந்பயாவஹே । பாஹி மாம் புண்டரீகாக்ஷ ந ஜாநே ஶரணம் பரம் ॥ (ஜிதந்தே. 8)

தேவர்களுக்குத் தலைவனே! பயங்கரமான இந்த ஸம்ஸாரத்தில், நான் அஞ்சிக் கிடக்கிறேன்; செந்தாமரைக் கண்ணனே! என்னை ரக்ஷித்தருள்வாயாக; உன்னையொழிய வேறொரு புகலை அறிகிலேன்.

[10]8. 1. 9. (நான் உனககு ஶேஷபூதன் என்கிற) ஞானம் பிறக்கப் பிறக்க, ஸம்ஸாரமாகிற நரகத்தைக் கிட்டுகையை நான் மிகவும் அஞ்சுகிறேன்.

[11]தி. மொ. 11. 8. 2. காற்றத்திடைப்பட்ட—பெருங்காற்றிலே அகப்பட்ட, கலவர்—மரக்கலத்தினுள்ளே இருப்பவர்களுடைய மனம் போலவும். [12]தி. மொ. 11-8-1

[13]தி. மொ. 11. 8. 4. இருபாடு=இரண்டு பக்கத்திலும், எரி-நெருப்புப்பற்றி எரிந்துகொண்டிருக்கிற, கொள்ளியின்உள்-கொள்ளிக் கட்டையின் உள்ளே அகப்பட்ட எறும்பு போல.

[14]தி. மொ. 11-8-3 பாம்போடு, ஒரு கூரையிலே—ஒரு வீட்டிலே, பயின்ருற்போலே—வஸித்தாற் போலவும்.

[15]தி. மொ. 11-8. 5. மஹாப்ரவாஹத்தில் அகப்பட்ட நரிக் கூட்டம் போலவும். உள்ளம் துளங்கி=மனம் தளர்ந்து.

அன்றிக்கே ஸொகெக்ஷகவாஞனவன் *ஸவவுகஉு ஹாயஸ்ரிதுமுமாய் [16]இட்டபடை கற்படையாய், விஷுந விரூஉ ரஹிதமான நிவுதியஉுத்திலே [17]"ஶா நுஷுஂ ஹாவு," [18]"உஹ தா வுணுவணெுந," [19]"கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்" இத்யாதிகள்படியே †விலக்கற்ற விரைதலுடையனும்.

---

*ஸர்வப்ராயச்சித்தமுமாய்—ம.

†விலக்கத்தவிர்த்தலுடையனும்—ம.

[16]இட்டபடை கல்படை—கல்லினால் அஸ்திவாரம் போட்டு விட்டால், பிறகு வெகுகாலம் கழித்து கட்டடம் கட்டுவதானாலும் முன்விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்கலாம்; செய்தவரையில் வீண் இல்லை. அது போல.

[17]ஶா நுஷுஂ ஹாவு ஞொகெஉஸிநு உ௵கொ வா ஷயி
ரொஉவிவா ।
நாவகூாஉதி ஸஂஸாராஃ ஸ வரூ ஸுஹஹா ஹவெகஃ॥

இவ்வுலகில் மனுஷ்ய சரீரத்தை அடைந்து, ஊமை அல்லது செவிடாக இருந்தபோதிலும் கூட, ஸம்ஸாரத்தை எவன் தாண்டுவதில்லையோ (தாண்டவேண்டிய உபாயத்தைச் செய்யவில்லையோ அவன் ப்ரஹ்மஹத்தி செய்தவனாவானல்லவோ.

[18]உஹ தா வுணுவணெுந கீதெயஂ காய நளஸயா ।
ஹாவுஂ உஃவொஉயெஃ வாஶஂ கூா யாவஷஹிஉுதெ ॥
(வாஹ பு)

இந்த சரீரமென்னும் தெப்பமானது மிகுந்த புண்யமாகிற விலையினால் வாங்கப்பட்டிருக்கிறது. அது உடைவதற்கு முன்னமேயே ஸம்ஸாரமென்னும் துக்க ஸமுத்ரத்தைத் தாண்ட விரைவாயாக.

[19] 2. 10. 1. கிளர்— விருத்தியடைகிற, ஒளியையுடைய யௌவனம் கழிவதற்கு முன்பே.

வந்தனபோல் வருவனவும் அநந்த மாகி
மாளாத துயர்தரு வல்வினை நெருப்புக் (கு)
இந்தனமாய் எண்ணிறந்த காலம் எல்லாம்
இன்னமுமிப் பவக்குழிக்கே இழியா வண்ணம்
வெந்ததொரு குழவியைநற் குமரன் ஆக்கும்
வெறித்துளவ வித்தகனார் *விதியே கொண்டார்
பந்தனமாம் அவையனைத்தும் பாறுகைக்குப்
பழமறையின் †பதமொன்றே பயிலுவாரே.

இதி

ஸ்ரீ பரமபதஸோபாநே

பத்யம் ஸமாப்தம் ॥

---

*விதியே கொண்டு—ம.

†பரமநெறி, மர்மநெறி—ம.

வஞுஃ ஹுவாதநவவ ॥

கருமாலையில்வரும் கட்டங் கழிக்கும் கருத்துடையார்
ஒருமால் பெருகிய யோகின் முயன்று மதன்றியும் நம்
திருமாலடியிணை திண் சரணுகுமென வரித்தும்
சருமால் இனியவை தானே யெனத் தகவெண்ணு

[வரே. 10.

இப்படிப் பரிபூர்ணவிவேக-நிர்வேத-விரக்தி-பீதிகள் பிறந்தவனுடைய வாணுவாவாஅவவுாயிவிரெஷங்களுக்கெல்லாம் [1]"எருத்துக் கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் *மற்றும் ஒருத்தரும் மருந்தறியாதிருக்க மருத்துவனுய் நின்ற மாமணிவண்ணன்," [2]"ஹஜஷ்வ ஊாஂ" என்றும் [3]"ஊஜெகஂ ஶரணஂ வஜ" என்றும் வியித்த ஹெஷஜங்கள் இரண்டில், ஹக்தியொமஂ கஉயொமாதிகளை முன்னிட்டுக்கொண்டு மேலும் வணாமுஊதியஉங்களை அபேக்ஷித்து, ஆரம்பத்திலும் அஞராயாவஸரங்களிலும் ஹுவத்தியைக் [4]கை

---

[1]பெரி. தி. 5. 3. 6. (எருத்துக் கொடியுடையான் – வ்ருஷபத்வஜனன் ருத்ரன். மருத்துவன் - வைத்தியன்.)

*மற்றுமொருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்தறியாதிருக்க—க.

[2]கீதை 9. 33. என்னைக்குறித்து, பக்தி செய்; அதாவது பக்தியோகத்தை அனுஷ்டிப்பாயாக.

[3]கீதை 18. 16. (செய்யவரிதான மற்ற உபாயங்களையெல்லாம் விட்டு) என்னை ஒருவனைச் சரணமாகப்பற்று.

[4]கைதொடுமானம்—உதவி. (குயவன் மண்பாண்டங்களைச் செய்யும்போது அடிக்கடி தண்ணீரைக் கையால் தொட்டு வேலைசெய்வது போல்) பக்தியோகம்அநுஷ்டிப்பவர்களுக்கு ப்ரபத்தியை ஆரம்பத்திலும் இடையிலும் அநுஷ்டிக்க வேண்டியிருக்கிறது (அந்தராயாவஸரம் - விக்னங்கள் நேரும் ஸமயம்).

தொடுமானமாகக்கொண்டு ப்ரவ்ருத்தமாய், தைலதாரையைப் போலே [5]அவிச்சிந்நஸ்ம்ருதிஸந்தாநரூபமாய், 'த்யாந' 'உபாஸநாதி' சப்தங்களாலே சொல்லும்படியான [6]வெளிச்சிறப்பையுடைத்தாய், ஆஸநாதிவசீகரணாங்கமாய்க் கொண்டு ஸத்காரதீர்க்ககாலநைரந்தர்யங்களிலே அநுதிநம் அநுவர்த்திக்க வளர்ந்து வருவதாய், அஷ்டாங்கமாய் இருக்கும். இது [7]"நாநா சப்தாதி பேதாத்" என்கிறபடியே அநேகவிதமாயிருக்கும். இவற்றில் அநந்யப்ரயோஜநனுக்கு தேவதாந்தரஸம்பந்தமில்லாமையாலே யதாசக்தி விகல்பம். [8]"நாஹம் த்வத்ஸ்ரஜோ கோவிந்தாதந்யமாராதயாமி போ:" என்கிறபடியே அவனையல்லால் [9]'மற்றொரு தெய்வம் தொழாதே' [10]"ப்ரண

---

[5] அவிச்சின்ன - இடைவிடாத, ஸ்மிருதிஸந்தான - நினைவின் தொடர்ச்சி.

[6] வெளிச் சிறப்பு - ஞானத்தின் தெளிவு அல்லது ப்ரகாசம்.

[7] ஸாரீ. ஸூ. 3. 3. 56. சப்தம் முதலியவை வேறுவேறாக இருப்பதால், ப்ரஹ்மவித்யைகள் வேறு வேறு.

[8] வி. தர்மம் 2. 28. அம்பரீஷோபாக்யானம். ஸகாமம் ப்ரஹர வா ந வா மயி வஜ்ரம் ஸுராதிப என்று முன் பாதி (ஏ இந்திரா ! நீ வஜ்ரத்தினால் என்னை அடித்தாலும் ஸரி, அடிக்காவிட்டாலும் ஸரி.) நான் கோவிந்தனைத் தவிர வேறொருவரை ஆராதிப்பதில்லை.

[9] 4. 6. 10.

[10] "த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா: நஶ்யந்தி ரக்ஷாம்ஸி அபயாந்தி சாரய:। யத்கீர்த்தநாத் ஸோऽத்புதரூபகேஸரீ ஸதாஸ்து மாங்கல்யவிவ்ருத்தயே ஹரி:॥

வி. தர்மம் 43-28. (மாங்கல்யஸ்தவம்)

எவருடைய பெயரைச் சொன்னமாத்திரத்திலேயே அஸுரர்கள் ஓடிவிடுகிறார்களோ, தேவதைகளெல்லாம் வணங்குகிறார்களோ

ணமந்தி தேவதா:" என்னும்படியே அவர்கள் தொழ நிற்குமவன் ஸ்ரீநரஸிம்ஹன். ப்ரயோஜநாந்தரபரனுடைய ஸம்பந்தம் க்ஷணிகாநந்தாவஹமாகவும்; ஸ்ரீநரஸிம்ஹ ப்ரயோஜநனுடைய ஸம்பந்தம் நித்யாநந்தாவஹமாகவும். 11'ஆத்மகுணங்கள் இல்லாதவனுக்கு ஸம்ஸ்காரங்களெல்லாமுண்டானாலும் முக்தியில்லை' என்றும், 'ஆத்மகுணவத்தை உடையவன் ஸம்ஸ்காரங்களில் பெற்றதுகொண்டு முக்தனும்' என்றும் கௌதம ருஷிகள்சொன்ன குணங்களில் 12"மயி சாநந்யயோகேந

ராக்ஷஸர்கள் மறைகிறார்களோ, சத்ருக்கள் விலகிப்போகிறார்களோ, அப்பேர்ப்பட்ட ஆச்சர்யமான (ஸிம்மரூபியான ஹரி) நரஸிம்ஹ ரூபியான பகவான் என்னுடைய மங்களங்களின் அபிவிருத்தியின் பொருட்டு ஆகட்டும் (மங்களாபிவிருத்தியைச் செய்யட்டும்.)

10'ப்ரணமந்தி தேவா:' என்னும்படியே அவர்கள் தொழா நிற்குமிவன்—க.

11 ஆத்மகுணங்கள்— "தயா ஸர்வபூதேஷு க்ஷாந்தி ரநஸூயா ஶௌசமநாயாஸோ மங்களமகார்பண்யமஸ்ப்ருஹா இதி அஷ்டௌ ஆத்மகுணா:"

(கௌதம தர்மஸூத்ரம் முதல் ப்ரச்னம்)

ஸர்வபூததயை, பொறுமை, அஸூயையின்மை, சுத்தி, மனச் சோர்வின்மை, சுபமான எண்ணம் வார்த்தை செயல், தைன்ய மற்றமை, பேராசையில்லாமை என்ற இவை எட்டும் ஆத்ம குணங்கள்.

ஸம்ஸ்காரங்கள்— ப்ராஹ்மணஜாதியில் பிறக்கும் ஒருவனுக்கு இருக்கவேண்டிய கர்ப்பாதாநம், பும்ஸவனம், முதலான 48 ஸம்ஸ்காரங்கள்.

12கீதை 13. 10. ஸர்வேச்வரனை என்னிடத்தில் வேறொருவரோடு ஸம்பந்தப்படாமையினால் வ்யபிசாரமில்லாத (அதாவது ஸ்திரமான பக்தி.)

ஸக்ருத்ப்ரவ்ருத்திமாத்ரநிர்வாஹ்ய' என்கிற ஸர்வஸௌலப்யவரணீயதா ஹேதுகுணவிசேஷம் ச்ரேஷ்டதமம்.

இப்படி ஸர்வாதிகாரமான பக்தியோகத்தில் அயோக்யதையாலும் விளம்பாக்ஷமத்வாதிகளாலும் இழிகைக்கீடான விருத்தக்ஷமத்வஜ்ஞாநஸக்த்யாதிகளின்றிக்கே [13]"நின்னருளே புரிந்திருந்தேன்," [14]"துணியேன் இனி நின்னருளல்லது எனக்கு," [15]"உன் திருவருளன்றிக் காப்பரிதால்" என்றிருக்கும் அதிகாரிக்கு அநந்யஸாத்யமான சரணவரணம் [16]ஆநுகூல்யஸங்கல்பாத்யங்கபஞ்சகயுக்தமாய் [17]"அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே"

---

[13]பெரி. தி. 5. 4. 1. (உன் கிருபையையே விரும்பி எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன்.

[14]தி. மொ. 11. 8. 8. (உன்னுடைய க்ருபையல்லது மற்றொன்றை எனக்கு (தஞ்சமாக) நிச்சயிக்கமாட்டேன்),

[15]தி. வி. 62. உம் நிருபாதிகையான கிருபையாலன்றி ரக்ஷிக்கை சக்யமன்று.

[16]பகவானுக்கு அநுகூலமாக இருப்பேன் என்னும் ஸங்கல்பம், ப்ரதிகூலத்தைத் தவிர்தல், நாம் பிரார்த்தித்தால் இதற்குப் பின் நம்முடைய ப்ரயத்னத்தை அபேக்ஷியாமல் ஈச்வரன் நம்மை ரக்ஷிப்பான் என்கிற த்ருடமான நம்பிக்கை (மஹா விச்வாஸம்), நீ ரக்ஷகனாக இருக்கவேண்டும் என்று வேண்டுவது, தன் அசக்தியை நினைத்துக் கொள்வது என்ற ஐந்தும் ப்ரபத்திக்கு அங்கங்கள். ஆத்மாவை ஸமர்ப்பிப்பது என்பதே அங்கி.

[17]அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸபூர்வகம்।
ததேகோபாயதாயாச்ஞா ப்ரபத்திச்சரணாகதி:॥

(பாதமுனியின் லக்ஷணவாக்யம்)

(தன்னுடைய விருப்பம் வேறொன்றினால் ஸாதிக்க முடியாத போது, மஹாவிச்வாஸத்தோடு 'அவன் ஒருவனே உபாயமாக வேண்டும்' என்று யாசிப்பது ப்ரபத்தி; அதுதான் சரணாகதி என்பதும்.)

ஐந்த்ராதிகள்படியே ப்ராயஶ்சித்தவத்ஸக்ருத்பரந்யாஸ ரூபமாயிருக்கும். அஜ்ஞாகிஞ்சநனுடைய *பரந்யாஸத்திற்கு அவ்விஷயத்தில் கர்தவ்யஶேஷமில்லை; ஸர்வஶக்தியினுடைய ஸங்கல்பத்திற்கு அவாந்தரவ்யாபாராபேக்ஷாநியமமில்லை; இரண்டும் இப்படி ஸக்ருத்தாயிருக்கும். ஆசார்யனாலே தன்னை ந்யஸ்தபரனாக அறிந்த ஶிஷ்யன் தான் பரந்யாஸம்பண்ணான். இவனுக்குப் பஶ்சாத்தில் ஶங்காதிகள் வந்தாலும், ஆசார்யனுடைய பரந்யாஸம் ஸர்வாவிநாபூதம். அவன் தனக்காகப் பண்ணின பரந்யாஸம் தனக்குப் ப்ரீதமல்லாத போது பரந்யாஸம் பண்ணினால் பூர்வபரந்யாஸம் பலித்தேவிடும்; †பின்பிலது மிகுதியான ஸாக்ஷ்யத்தின் படியாம்.

உயர்ந்த [18]திடர்க்கு அடைத்து ஏற்றலாம்படி, தாழ்ச்சியுடைய விஷயத்தில் தானே ப்ரவஹிக்கும்படியான க்ருபாகுணத்தாலே ஸ்வதந்த்ரஶேஷி [19]தன் கூறுகவும், தன் பேறுகவும் மேலுள்ள நன்மைகளையெல்லாம் விளக்கும். இந்தப் ப்ரபத்தி [20]"தாவதார்த்தி:"

*பரந்யாஸத்திற்கும்—க. †பின்பிலிது—க.

18. திடர்=மேட்டு நிலம்.

19. தன் கூறு=தன் பாகம், தான் செய்யவேண்டிய கார்யம்; தன் பேறு=தன் ப்ரயோஜனம்.

20. தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததாऽஸுகம்।
யாவந்ந யாதி ஶரணம் த்வாமஶேஷாகநாஶநம்॥
(வி பு. 1. 9 73.)

(ஸகல பாபங்களையும் போக்கடிக்கும் உம்மை சரணமடையாதவரையில்தான் ஒருவனுக்கு இழந்த செல்வத்தை அடைய ஆசையும், புதிய ஐச்வர்யத்தில் ஆசையும், ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்காமையும், பகவதநுபவமின்மையும்; உம்மை சரணமடைந்தால் இவையெல்லாம் கிடைக்கும்.)

ஜத்வாதிகள்படியே ஸஹஜமாயும் ஸ்வதந்த்ரமாயும் நின்று ஸகலபலஸாதநமாகையாலும், ஸர்வேச்வரனுக்குக் [21]கைமுதல் அற்று ப்ராணஸ்தாவாதிவர்ஜ்ஞாநமுடையாரெல்லாருக்கும் அதிகரிக்கலாமாகையாலும் தன் ஸ்வரூபம் போலே தேசகாலாதிநியமமில்லாமையாலும், ஸர்வகாலமாக ஸக்ருத்கர்த்தவ்யமாகையாலும், ஸ்வஸாத்யமாகையாலும், [22] "உபாயஸ்வரூபாநாம் ப்ரவ்ருத்தோ க்ஷர்ஷிதோ பஸ" என்னும்படியான ப்ரபாவஸாமர்த்யத்தை உடைத்தாகையாலும் *ப்ரஹ்மாஸ்த்ரதுல்யையாகையாலும், [23]யஜ்ஞாதிஸாதநங்களைப் போலே நாசப்ரதிபந்தகமல்லாமையாலும் [24]சரணோபநிஷத்துக்களுக்கெல்லாம் ப்ரதாநமுஷணம் என்னும்படி மேலாய் நிற்கையாலும், இதின் ப்ரபாவம்

---

*ப்ரஹமாஸ்த்ரதுல்யதையாலும்—க.

[21]கைமுதல்=ஸாதனம்.

[22]உபாயஸ்வரூபாநாம் ப்ரவ்ருத்தோ க்ஷர்ஷிதோ பஸ।
பிரிஷ்டநிஷ்டேஷ்வரதே ஸோயமஹாதவே தவே॥

(ல. த. 17. 104.) இந்தப் பிரபத்தி என்னும் உபாயம் சில விதத்தில் சுலபமானதும் (மஹாவிச்வாஸம் செய்யவேண்டியிருப்பதால்) ஒருவிதத்தில் கஷ்டமானதென்றும் என் அபிப்ராயம். இதுதான் பிரயோஜநங்களால் அடிபடாத மனதையுடைய பெரியோர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

[23]யஜ்ஞாதேந்தே ந க்ஷரதி தவ: க்ஷரதி விஸயாத!
ஸூர்யவித்பவாவசநே ஸாதநம் வ வசீகீர்த்தநாத॥

[24]சரண்யோபநிஷத்துக்கள்—ஸர்வரக்ஷகனை ஸ்ரீ கிருஷ்ணனுல் அருளிச் செய்யப்பட்ட உபநிஷத்துக்கள், அதாவது ஸ்ரீ பகவத்கீதை.

[25]“ஸக்ருத்ப்ரபந்நா:” இத்யாதிகளாலே பரக்கப் பேசப் பட்டது.

மற்றுள்ள ஶாஸ்த்ரார்த்தங்கள் போலே [26]அதிகாரி க்ருத்யமான ப்ரபதநத்தில் சிலருடைய [27]அதிகாரி

---

25 ஸக்ருத்ப்ரபந்நா ஶாஸ்த்ரஜ்ஞா ஸாங்க்யயோகவிதஸ்ததா ।
நார்ஹந்தி ஶரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி ॥

(லக்ஷ்மீதந்த்ரம் 17—62) கர்மயோகத்தைச் செய்பவர்களும், ஞானயோகம், பக்தியோகம் இவற்றை அனுஷ்டிப்பவர்களும், சரணாகதி செய்தவனுடைய கோடியில் ஒரு பாகத்திற்கும் தகுதியுள்ளவர்களல்ல (சரணாகதன் பெருமை அதிகம் என்று கருத்து).

26 அதிகாரிகிருத்யம்—ஒரு பலத்தை விரும்பி அதன் ஸாதனத்தை அநுஷ்டிப்பவன் அதிகாரி; அவனனுஷ்டிப்பதே அதிகாரிகிருத்யம். உதாஹரணமாக, ஸ்வர்க்கத்தைவிரும்பி யாகத்தைச் செய்பவன் அதிகாரி; அவனுடைய யாகாநுஷ்டானமே அதிகாரிகிருத்யம்.

27 அதிகாரிவிசேஷணம்—யாகத்தைப் போல் ஒரு அதிகாரியானவன் செய்து ஸம்பாதிக்கவேண்டியிராமல், அவனிடம் ஏற்கனவே ஸித்தமாய் விசேஷணயாக இருப்பது; உதாஹரணமாக யாகத்தை அநுஷ்டிக்கும் ப்ராஹ்மணனிடம் இருக்கும் ப்ராஹ்மண்யம் என்னும் தன்மை. இது இவனிடம் பிறவிமுதலே இருக்கிறபடியால், இதை ஒருவன் தான் புதிதாகச் செய்துகொள்ளவேண்டியதில்லை.

சிலர் ப்ரபத்தியை ஒரு அதிகாரி செய்யவேண்டிய கார்யம் இல்லை என்றும், ஏற்கனவே அவனிடம் இருக்கும் அதிகாரி விசேஷணம் என்றும் சொல்லுவதற்கு, ஸ்வர்க்கத்திற்கு யாகம் ஸாதநமாயிருப்பதுபோல, மோக்ஷத்திற்குப் பிரபத்தி பிரதான ஸாதனமில்லை, அப்பிரதானோபாயம் என்று கருத்து.

அப்பிரதானோபாயமான ப்ரபத்தி ஸாத்யோபாயம் (=ஒருவன் அனுஷ்டிக்கவேண்டியதான உபாயம்); ஒருவன் அனுஷ்டிக்க வேண்டாமல் ஏற்கனவே ஸித்தமாயிருக்கும் உபாயமான ஈச்ரவன் ஸித்தோபாயம்.

விஶேஷணத்வாதி3 வ்யவஸ்த2யா ஸித்3தோ4பாயப்ராயோ ந்யாஸவரம். [28]ஶ்ருதியில் ந்யாஸப்3ரஹ்மஶப்3த3ஸாமாநாதி4கரண்யம் ச ந்யாஸவரம். 'ப43வத3நந்யார்ஹஶேஷபூ4தனுக்கு ப43வதி3தரமில்லாத விஷயத்தில் பக்தியும் ப்ரபத்தியும் கைங்கர்யமும் ஸ்வரூபவிருத்தம்' என்னலாயிருக்க, பக்தியோகத்தை விசேஷித்து ஸ்வரூபவிருத்தம் என்றவர்களுக்கு அதி4காரிவிஶேஷஸ்ஸர்வவிஷயத்திலே தாத்பர்யம். தே3ஶகாலாதி4காராதி3பே4த3த்தாலே ஶாஸ்த்ரார்த்த2விகல்பமும் ப்ராயஶ்சித்தாதி3கள் எல்லாவற்றிலும் ப்ரஸித்34ம்.

இப்படி யதா2தி4காரம் ஸர்வப்ராயஶ்சித்தமாக விதித்த பக்திப்ரபத்திகளில் ஒரு வழியிலே இழிந்தவனுக்கு அப்போதே உத்தரபூர்வாக4ாஶ்லேஷவிநாஶங்கள் உண்டாம். உத்தராகா4ஶ்லேஷம் ப்ராமாதி3கவிஷயம். விவேகாதி3ஸம்பத்தியுடையாருக்கு பு3த்3தி4

---

[28]ந்யாஸ இதி ப்3ரஹ்மா (தை. உப. 49.) ந்யாஸவித்யை என்னும் சரணாகதியே பரமதர்மம் என்று ஸர்வோத்க்ருஷ்டனை ப்ரஹ்மா எண்ணுகிறார்.

ந்யாஸ இத்யாஹுர்மநீஷிணோ ப்3ரஹ்மாணம் தை. உப.

அந்தர்யாமிபர்யந்தமான ப்ரஹ்மா ந்யாஸவித்யையால் அடையத் தக்கவனாகையால், வித்வான்கள் ப்ரஹ்மாவையே 'ந்யாஸம்' என்று சொல்லுகிறார்கள். (கார்யத்தில் காரணோபசாரம்.)

பூர்வாகம்—ப்ரபத்திசெய்வதற்கு முன் செய்த பாபங்கள்;
உத்தராகம்—அதற்குப் பின் செய்யப்பட்டவை
அஶ்லேஷம்—ஒட்டாமை. ப்ராமாதிகம்—புத்திபூர்வமாகச் செய்யாதது.

ஸத்வோத்தராணாம் ஜ்ஞாநத்தில் புகாது; ஸத்விவேக ருக்கு மின்னொளி போலே தோற்றிப் ப்ராயஶ்சித்தாங்கமாய் மறையும். ராமாதிகாரிந்முடையாருக்கு ஶிக்ஷா விஶேஷங்களாலே *பிரிதலுண்டாம். ஸம்ஸ்லேஷ விநாஶம் ப்ராரப்தவ்ருத்திரிக்தவிஷயம். ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்திநிஷ்ணனை †செய்த வேள்வியனுக்குப் ப்ராரப்தகார்யமான ஸம்ஸாரத்திலும் ஶ்ருதியின் அளவுக்கீடாக தேஹாந்தராதிஹேதுவான அம்சம் கழியும். 29"யஸ்ய ப்ரஸாதே ஸததம்" 30"ப்ரஸந்நமநஸஸ் தஸ்மிந்" இத்யாதிகளின்படியே இவனளவில் ஸமஸ்தரானவர்களெல்லாரும் ஸுப்ரஸந்நராவார்கள். 'ஸம்வதுரிக்ருஹீதனுக்கு யமவஶ்யதாதிகள் இல்லை' என்னு

---

*பிரித்தலுண்டாம்—க. †செய்தவேள்வியனனவனுக்கு—க.

‡5. 7. 5. செய்யப்பட்ட தங்கள் கடமையையுடையவர்கள்; அதாவது க்ருதக்ருத்யர்கள்.

29யஸ்ய ப்ரஸாதே ஸததம் ப்ரஸீதேயுரிமா: ப்ரஜா: ॥
ஸ ராமோ வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே ॥

எவருடைய அனுக்ரஹமிருக்கும்போது இந்த ஸகலப் பிரஜைகளும் ஸந்தோஷத்தை அடையுமோ, அப்பேர்ப்பட்ட ராமன் (தன்னால் அநுக்ரஹிக்கப்படுமவருள் ஒருவரான வாநரராஜனின் அநுக்ரஹத்தை எதிர்பார்த்து நிற்கிறார்.)

30ப்ரஸந்நமநஸஸ் தஸ்மிந் ப்ரஸந்நாய மஹாத்மநி ।
ப்ரஸந்நே தேவதேவேஶே கேஶவே ஸத்த்வதர்ஶநே ॥

தேவதேவனும் பக்தர்களிடம் பிரியமுள்ளவனுமான கேசவன் அவனிடத்தில் ப்ரஸந்நமாயிருக்கும்போது, தெளிந்த மனதுடைய அவனிடத்தில் ஸகல சராசரங்களும் ப்ரஸந்நமாக ஆயின.

மிடம் 31“பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்,” 32“தேவம் ஶார்ங்கதரம் விஷ்ணும்”, 33“நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை,” 34“நமன் கூறு செய்துகொண்டிறந்த குற்றமெண்ண வல்லனே” 35“நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்

31ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாஶஹஸ்தம்
வததி யம: கில தஸ்ய கர்ணமூலே ।
பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்
ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥

கையில் பாசத்தை ஏந்திய தன் தூதனைப் பார்த்து யமன் அவன் காதோடு (ரஹஸ்யமாகச்) சொல்லுகிறான், ‘பகவானை ஆச்ரயித்தவர்கள் பக்கம் செல்லாதே; நான் மற்ற மனிதர்களுக்கு ஸ்வாமியேயொழிய, வைஷ்ணவர்களுக்கு அல்ல’ என்று.

32தேவம் ஶார்ங்கதரம் விஷ்ணும் யே ப்ரபந்நா: பராயணம் ।
ந தேஷாம் யமஸாலோக்யம் ந ச தே நரகௌகஸ: ॥

சார்ங்கவில்லைத் தரித்தவரும், எல்லோருக்கும் சிறந்த பயனும் தேவனுமான விஷ்ணுவை எவர் சரணமடைந்திருக்கிறார்களோ அவர்களுக்கு யமனிருக்கும் உலகத்தில் இருப்புமில்லை, நரகவாஸமும் கிடையாது.

33 5. 2. 1. நலியும் = துன்புறுத்தும், நரகமும், நைந்த = நிலை கெட்டது; யமனுக்கும் இப்பூவுலகில் ஒரு வேலையுமில்லை.

34 தி. ச. வி. 116. நமன் = யமன், கூறுசெய்துகொண்டு = பெருமாளோடு கூடின என்னைப் பிரித்து, இறந்த குற்றம் = கழிந்த பாபத்தை, எண்ண வல்லனே = எண்ண சக்தியுடையவனோ?

35 திருமாலை 1. நமன் தமர் தலைகள்மீதே = யமனுடையவும் யம கிங்கரர்களுடையவும் தலைகள் மீது, நாவலிட்டு = ‘நாவல்’ என்று ஜயித்தார் சொல்லும் சப்தத்தைக் கூறிக்கொண்டு, உழிதருகின்றோம் = ஸஞ்சரிக்கிறோம்.

மீதே,” 36“நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி” இத்யாதிகளாலே அறியலாம். ஆகையால் இப்படி நிஸ்ஸம்சயனான இவன் 37“ஆள்கின்றான் ஆழியான் ஆரால் குறைவுடையம்,” 38“எத்தினால் இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே,” 39“திருமால் தலைக்கொண்ட நங்கட்கெங்கே வரும் தீவினையே” இத்யாதிகளின்படியே நிரபேக்ஷனாய், நிர்ப்பரனாய், ‡நிர்ப்பயனும். மங்கும் அவஸ்தையில்லாதபோது மடலூரும்

---

‡நிர்ப்பயனும். அங்கும் அவ்வவஸ்தையில்லாதபோது—க.

நிர்ப்பயனாய் நிஸ்ஸம்சயனுமாம்—ம.

மங்கும் அவஸ்தையில்லாதபோது=பகவானைவிட்டுப் பிரிவினால் உண்டான தளர்ச்சி அதிகமாய், அதனால் மூர்ச்சித்துக் கிடக்கும் நிலைமையில்லாதபோது, மடலூருமவஸ்தையாய்=வழியல்லாவழியாலாவது அடைய விரும்பி மடல் எடுத்து, பகவானை நிர்ப்பந்தப்படுத்திப் பெறும் நிலைமையாய்; இப்படி ஸ்ரீ வைகுண்டத்தைக் காண்பதற்கு நெஞ்சு ஒரே மாதிரியாக எண்ணிக்கொண்டே இருக்கும்.

36 திருமாலை 12. நரகமே=(யமனும் முத்கலனும் பகவந்நாமத்தைப்பற்றிப் பேச, அப்போது நரகத்திலுள்ளவர்கள் அதைக் கேட்க அத்தாலே) அந்த நரகமே, சுவர்க்கமாகும்=போக பூமியாக நினைக்கத்தக்க, நாமங்களுடைய=திருநாமங்களையுடைய, நம்பி=பரிபூர்ணனே.

37 10. 4. 3. ஆழியான்=திருவாழியைக் கையில் கொண்ட ஸர்வேச்வரன், ஆள்கின்றான்=விரோதிகளைப் போக்கி ரக்ஷிக்கிறான். ஆரால் குறைவுடையம்=ஒருவராலும் ஒரு குறையையுடையோமல்லோம்.

38 தி. ச. வி. 115. ஏழை நெஞ்சமே=அறிவற்ற நெஞ்சே! (ஸர்வேச்வரன் தன் மேன்மை பாராதே தாழநின்று உபகரிக்குமவனாயிருக்க) எத்தினால்=எதனாலே, இடர்க்கடல்=துக்க ஸாகரத்திலே, கிடத்தி=கிடக்கிறாய்.

39 தி. வி. 88. திருமால்=சிறந்த ஸம்பத்துப் போன்ற பகவானிடத்தில் மோஹமென்னும் பக்தியின், தலைக்கொண்ட=மேலெல்லையிலிருக்கிற, நங்கட்கு=எங்களுக்கு, தீவினை எங்கே வரும்=(பழி முதலிய) பாபங்கள் எங்கே வரும்.

அவஸ்தையாய், [40]மாக வைகுந்தம் காண்பதற்கு மனம் ஏகம் எண்ணியிருக்கும்.

முன் செய்த வினைத்திரளில் முளைத்த தன்றி
 மற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றில்
தன் செய்ய திருவருளால் இசைவு பார்த்துத்
 தழல் சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்
பின் செய்யும் வினையில்நினை வொன்று தொன்றும்
 பிழைபொறுத்து வேறுளது விரகால் மாற்றும்
என்செய்ய தாமரைக்கட் பெருமான் எண்ணம்
 எண்ணுதார் எட்டிரண்டும் எண்ணு தாரே. 11.

𑌇𑌤𑌿
𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌮𑌪𑌦𑌸𑍋𑌪𑌾𑌨𑍇
𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌨𑌪𑌰𑍍𑌵 ॥

---

[40] 9.3.7.

உறையிட்டவாளென ஊனுளுறைகின்ற யோகிகளை*
†நறுமட்டொழிவற்ற நற்றுளவேந்திய நாயகனுர்
நிறைமட்டிலாத நெடும்பயன்காட்ட நினைத்துடலச்
சிறைவெட்டி வழிப்படுத்தும் வகை செப்புவமே. 12.

இப்படி முன்பு பண்ணின ஸங்கங்களுக்கெல்லாம் தத்க்ஷயிகாரணமாக ஸர்வதோஷஸாயத்தம் பண்ணி, மேல் ஸங்கங்களில் முயலாதபடி [1]‘உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும் உள்ளிக் கெடுத்து’ [2]‘குன்றமெடுத்த பிரானடியாரொடும் ஒன்றிநின்று, [3]‘நாட்டாரோடு இயல்வொழிந்து,’ ஸ்ரீ ஸுலபமான பரிபூர்ணுநுபவம் பெருமையாலே, வாய்க் கட்டுண்டு திருப்பாற்கடலிலே முழுகினவனைப் போலே, தன் ஸ்வவைஷ்யையைக் கண்டு [4]‘இரக்கமனத்

---

*யோகிதனை—வ. †நறுமட்டெழிலுற்ற—வ.

[1] 1. 2. 8. உள்ளம் உரை செயல்=மனது, வாக்கு, காயம் ஆகிய, உள்ள=(நம்மிடமே) யிருக்கும், இம் மூன்றையும், உள்ளி=(இவற்றின்பிரயோஜனத்தை)ஆராய்ந்து, கெடுத்து= (மற்ற விஷயங்களில் செல்வதைத்) தவிர்த்து.

[2] 7. 4. 11. கோவர்த்தன பர்வதத்தைத்தூக்கி உபகாரம் செய்த கிருஷ்ணனுடைய அடியாரோடு, ஒன்றி நின்று=ஒன்ருய்க் கலந்து நின்று.

[3] 10. 6. 2. நாட்டாரோடு=(அந்நபாநாதிகளை விரும்பி ஓடும்) ஸாமான்ய ஜநங்களோடு,இயல்வு=ஸஹவாஸத்தை,ஒழிந்து= விட்டு.

[4] 2. 4. 3. இரக்கமனத்தோடு= (துக்கத்தினுல்) தளர்ந்த நெஞ்சோடு, எரியணை=அக்நிக்கு ஸமீபத்தில் இருக்கும் அரக்கும், மெழுகும், ஒத்து=போல் இருந்து; அவைபோல் உருகி என்றபடி.

தோடு எரியணை அரக்குமெழுகுமொத்து'க் [5]'கரியநாழிகை ஊழியில் பெரியதாய், [6]'கங்குலும் பகலும் கண்துயில் அறியாதே' [7]'என் சொல்லி உய்வன் இங்கு அவனை விட்டு' என்னும்படி ஸம்ஸாரத்தில் *அடிதரியாதே, [8]'மருளொழி' [9]'மங்கவொட்டு உன் மாமாயை' [10]'மாயம் செய்யேல்' என்று வளைத்து, பகவத்வாக்யோச்சாரணமே பகவதநுஸந்தாநமாம்படி [11]'அவாவற்று வீடுபெறும்' அதிகாரிக்கு [12]'வைத்தநாள் வரை எல்லை குறுகி' ஜ்யோதிஶ்ஶாஸ்த்ரங்களில் சொல்லும் †ஆயுரவஸாநசிஹ்நங்களாலும் அதிஸந்தோஷத்தையுண்டாக்கி [13]'ஒன்பதுவாசல் தானுடைக் குரம்பை

* அடிதெரியாதே—க. (தரியாதே=ஸம்ஸாரதுக்கம் பொறுக்கமாட்டாமையால் அடிதரிக்கவில்லை.)

† ஆயுரவஸாநங்களாலும்—க.

[5] தி. மொ. 8. 5. 6. கரிய=கொடிய (அல்லது கறுத்த ராத்ரியின்), நாழிகையானது, ஊழியில்=கல்பகாலங்களைக் காட்டிலும் பெரியதாய்.

[6] 7. 2. 1. இரவும் பகலும் (ஒரு ஸமயத்திலாவது) கண்கள் துயிலவேண்டுமென்று அறியாள்.

[7] 9. 9. 10. இவ்வுலகில் (ஹிம்ஸிக்கும் பொருள்களுக்கு நடுவே இருந்து) அவனையொழிய, எத்தைச் சொல்லி உஜ்ஜீவிப்பேன்.?

[8] 10. 6. 1. அஜ்ஞாநத்தை விடு.

[9] 10. 7. 10. உன் மாமாயை-உன்னுடைய ஆச்சர்யமான இந்த ப்ரகிருதியை (சரீரத்தை), மங்கவொட்டு - நசிக்கும்படி செய்.

[10] 10. 10. 2.

[11] 10, 10. 11. (ஆசைகள் தீர்ந்து மோக்ஷத்தைப் பெறும்.)

[12] 3. 3. 10. வைத்த - ஈச்வரன் நியமித்துவைத்த, நாள்வரை-ஆயுஸ்ஸினுடைய முடிவான, எல்லை குறுகி - எல்லை அணுகி.

[13] தி. மொ. 1. 6. 9. நவத்வாரங்களையுடையதான இந்த சரீரத்தை விட்டுப்பிரியும் காலத்தில். (குரம்பை - சிறுகுடில், சரீரம்)

பிரியும்போது' உத்தராயணம், தக்ஷிணாயநம், பூர்வ பக்ஷம், அபரபக்ஷம், பகல், இரவு, ஸுக்ருதஸுக்ருத தேஶவிஶேஷ-நிவ்ருத்திவிஶேஷங்கள் என்கிற வாசியறச் [14]'சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம், மரண மானல்' [15]'இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி வேண்டாதபடி' [14]'வைகுந்தம் கொடுக்கும்பிரான், இவனுக்கு அடியிலே க்லேஶவிநாஶவ்யவதேஶவிஷ யங்களாய்க்கொண்டு, மாற நினைப்பிட்டுக் கிடந்த உத்தர-வஹ்வடு-வர்ணாவாவங்களை மாற்றி, [16]"ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்க்ருதம்" இத்யாதி களின்படியே [17]"நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்

---

[14] 9. 10. 5. தனதாள் அடைந்தார்க்கெல்லாம் - தன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினார்க்கெல்லாம், சரணமாகும் - ரக்ஷகனாகும்; மரணமானல் - அவர்கள் இறந்ததுமே, வைகுந்தம் கொடுக்கும் பிரான் - பரமபதத்தைக் கொடுக்கும் உபகாரகன்.

[15] 10. 6. 1. இருள் தரும் - இருக்க இருக்க அஞ்ஞானத்தையே தருகிற, மாஞாலத்துள் - பெரியதான ஸம்ஸாரத்தில், இனியும் ஓர் பிறவி வேண்டாதபடி.

[16] 'விஸ்ருஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்'

என்று உத்தரார்த்தம்,

(மனு 6. 79) தனக்குப் பிரியமானவர்களிடத்தில் தன் புண்யத்தையும், தன்னை த்வேஷித்தவர்களிடத்தில் தன்பாபத்தையும் விட்டு விட்டு, பக்தியோகத்தின் பலனாக, நித்யமான பரப்ரஹ்மத்தை அடைகிறான்.

[17] பெரி. 5. 4. 3. இவ்வுலகிலுள்ள பாபங்களெல்லாம் (சும்மெனாதே - 'சும்' என்ற சப்தத்தைக்கூடச் செய்யாமல்) மூச்சு விடாதே முன்பிருந்தவிடத்தைக் கைவிட்டு 'தொடர்கிறார்களோ' என்று பயந்து ஓடி, தூறுகள் பாய்ந்தனவே - புதரிலேபோய் விழுந்து ஒளிந்தன.

(தூறு - பகவத்கிருபை போகாத இடம்; இங்கு ஸம்ஸாரிகள்)

மெனுதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" என்னும்படி அநுகூல ப்ரதிகூலருடைய *ஆநு கூ-லூ-ஹாதிக-ூல்யங்களுக்குப் ஹலமாகக் கொடுத்து, [18]"சாமிடத்து என்னைக் குறிக்கொள் கண்டாய்," [18]"அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்." †என்றவன் கர்மவிசேஷத்தாலே [19]"யம் யோகிநః ஹ்ராணவியோகாலெ யத்நேந விதெ வினிவெஶயந்தி"

---

*ஆநுகூல்யப் பிராதிகூல்யங்களுக்கும் பலம் கொடுத்து—க.

†அவன் கர்ம விசேஷத்தாலே—க. என்னும் இவன்—வ.

(என்ற ப்ரபந்நன், செய்த ப்ரபத்தி என்னும் உபாயத்தின் பெருமையாலே.)

[18]பெரி. தி: 4. 10. 2; 4. 10. 1. மரணம் அடையும் ஸமயத்தில் (உன்னை நினைக்கமுடியாதவனான) என்னை நீ திருவுள்ளம்பற்றி அருளவேணும். அப்போதைக்கு - சக்தியில்லாமலிருக்கும் மரணதசையில் ரக்ஷிப்பதற்காக, இப்போதே - (சரீரம் இந்திரியம் முதலியவை இளைப்பற்றுத் தெளிந்திருக்கிற) இப்போதே, சொல்லிவைத்தேன்.

[19]பார. சா. 46. 139: 'ஸ தம் ஸாக்ஷாத் ஹ்ருஷீகேஶோ ணః ஹ்ராணாநு ஜஹௌ ஹ்ராப்தஸலோ ஹி பீஷ்மஃ' என்று உத்தரார்த்தம்.

உயிரைவிடும் காலத்தில் யோகிகளெல்லாம் மிகுந்த ப்ரயத்னத்தால் எந்த பரமாத்மாவை மனதில் தியானம் செய்கிறார்களோ, (தம் எதிரில் இருந்த அவரைக் கண்களால் பார்த்துக்கொண்டே பீஷ்மர் உயிரைவிட்டார். பெறும் பேற்றைப் பெற்றவரல்லவோ பீஷ்மர்.)

என்னுமவஸ்தை இல்லையாய், [20]'காஷ்டபாஷாணஸந்நிபனாய்க் கிடக்கிலும் [20]'அஹம் ஸ்மராமி'' என்கிறபடியே தன் நினைவை இவனுக்கு நினைவாக்கி, [21]'கேவலம் மதீயயைவ தயயாऽதிப்ரபுத்த:' என்கிறபடியே அயத்நமாக ஸ்வவிஷயத்தில்வெளிச்சிறப்பாலே [22]அப்ரச்யுத பூர்வஸம்ஸ்கார மநோரதனாம்படி பண்ணி ப்ரஹ்மருத்ராதிகளுக்குப் போலே யமகிங்கர நிரபேக்ஷமாகத் தானே உத்க்ரமண நிமித்தமாக நின்று,

[23]வாகாதீந்த்ரியங்கள் பத்தையும் மநஸ்ஸிலும், இவற்றோடே கூடின மநஸ்ஸைப் பிராணவாயுவிலும், இந்திரியங்கள் பதினொன்றோடும் கூடின ப்ராணனை ஜீவாத்

---

[20]ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாணஸந்நிபம் ।
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ॥

(என்னிடம் ப்ரபத்தி செய்தவனை) என் பக்தன் மரண காலத்தில் கட்டையும் கல்லும் போல் இருந்தாலும், நான் அவனை நினைத்து உயர்ந்த பதமான பரமபதத்திற்கு அழைத்துச் செல்லுவேன்.

[21]சரணாகதிகத்யம். வேறொன்றை எதிர்பாராமல் என்னுடைய தயையினாலேயே மிகவும் தெளிவான ஞானத்தையுடையவனாய். (வெளிச்சிறப்பு - தெளிவான ஞானம்.)

[22]சரணாகதிகத்யம் 'பகவானே பரமப்ராப்யம்' என்ற சாஸ்த்திரத்தினால் உண்டான ஸம்ஸ்காரத்தாலே ஏற்பட்ட மனோரதம் நீங்காதவனாகச் செய்து.

[22]அப்ரச்யுத பூர்வஸம்ஸ்காரமனோரதனாம்படி ப்ரஹ்மருத்ர—க உத்க்ரமணம் - வெளிப்புறப்படுதல்.

[23]வாக்கு, கை, கால், பாயு, உபஸ்தம் என்று கர்மேந்திரியங்கள் ஐந்து. (பாயு மலமூத்ரங்களை விடுவதற்கும், உபஸ்தம் ஆநந்தாநுபவத்திற்கும் ஆனது); காது, த்வக், கண், மூக்கு, நாக்கு என்று ஞானேந்திரியங்கள் ஐந்து.

மாவிலும், இப்படிச் *சேர்ந்த திரளை இச்சரீரைக தேசமான ஸூக்ஷ்மபஞ்ச பூதங்களிலும், இவை எல்லாவற்றையும் கூட ஹ்ருதயஸ்தனான தன் பக்கலிலே சேர்த்து, இவனை இளைப்பாற்றி;

இப்படிப் பொதுவான உத்க்ராந்திக்ரமம் நடந்தால் முமுக்ஷுவான இவனை †லோகாந்தரங்களுக்கு வழிகளான ஹ்ருதய நாடீ நூற்றிலும் ப்ரவேசிப்பியாதே, 'ஸுஷும்நை' என்றும், 'ப்ரஹ்ம நாடீ' என்றும், 'மூர்த்தந்ய நாடீ' என்றும் பேர்பெற்ற ஹ்ருதயமூர்த்தந்ய நாடியில் அக்ரப்ரத்யோதமான அக்ரம் [24]வெளிச் செறிக்கப் பண்ணி, அதிலே ப்ராணேந்த்ரியஸம்யுக்த ஸூக்ஷ்ம சரீரத்தோடே கூடப் ப்ரவேசிப்பித்து, [25]"பத்மகோச-ஸ்தந-ப்ரதீகாச ஸந்நிவேச விசிஷ்டமாய்க்கொண்டு $அவலம்பிக்கிற ஹ்ருத்புண்டரீகமத்யத்திலே [26]ஸூக்ஷ்ம ஸுஷிரத்தினின்றும் மேலேகொண்டேறி, [27]ஏகாதச

*சேர்ந்த—ம. †லோகாந்தரங்களுக்கும் வழிகளான—க $லம்பிக்கிற—வ

[25] பத்மகோசம் - தாமரை மொட்டு; ("பத்மகோச ப்ரதீகாசம் ஹ்ருதயம் சாப்யதோமுகம்"; ஸ்தனம் - "ய ஏஷ ஸ்தந இவாவலம்பதே—தைத்திரீய உபநிஷத் 1. 6.

[26]ஸூக்ஷ்மஸுஷிரம் -மிகவும் சிறியத்வாரம்.

[27]ஏகாதசத்வாரமான - பதினொருத்வாரங்களையுடையதான இரண்டு கண், இரண்டு காது, இரண்டு மூக்கு, வாய், குதம், சிச்நம், நாபீ, ப்ரஹ்மரந்த்ரம் என்று பதினொன்று என்பர். ஆனால் கீழே 'ஹ்ருத்புண்டரீக மத்தியத்திலே ஸூக்ஷ்ம ஸுஷிரத்தினின்றும் மேலே கொண்டேறி' என்று வாக்யமிருப்பதால், நாபியைச் சேர்க்காமல், இந்த த்வாரத்தைச்சேர்த்துப் பதினொன்று என்று ஸ்ரீ ஸ்வாமியின் நிர்வாஹம்.

ஆரமான 'ப்ரஹ்மநாடீ' என்று பேர் பெற்ற ஸ்தூல ஶரீரத்தில் 'ப்ரஹ்மரந்த்ரம்' என்கிற தலைவாசலைத் திறந்துகொண்டு புறப்பட்டு, நாடிகளோடே சங்கிலித் துவக்குப் போலே *பிணைத்துவைத்த ஸூக்ஷ்ம ஸூர்ய கிரணங்களை ஸ்வரூபமாக்கி வைகுந்தம் புக வழிப்படுத்தும்.

முன்கருவி ஈரைந்தும் மனத்தில் கூட்டி
  முக்கியமாம் மருத்திலவை சேர்த்ததெல்லாம்
நன்குணரும் உயிரில்சேர்த் தைம்பூ தத்தை
  நண்ணுவித்துத் தான்தன்பால் வைக்கும் நாதன்
ஒன்பதுடன் வாசலிரண் டுடைத்தாய் உள்ளே
  ஒருகோடி துயர்விளைக்கும் உடம்பாய் ஒன்றும்
வன்சிறையின் தலைவாசல் திறந்து நம்மை
  வானேறும் வழிப்படுத்த மனமுற் றானே. 13.

இதி

ஸ்ரீ வ ர த வ த ஸா வா கே ந

ஷஷ்டம் ப்ரகரணம் ॥

---

*பிணைத்துவைத்து ஸூக்ஷ்ம—க.

தெருளார் பிரமபுரத்திறை *சேர்ந்திடர் தீர்ந்தவர்தாம்
†இருளார் பிரமபுரச் சிறைதீர்ந்தபின் வந்தெதிர்கொண்
அருளாலமரர் நடத்த இம்மாயை கடந்ததற் பின் [டு
சுருளார் பவநரகச் சுழலாற்றின் ‡ சூழ்ச்சியிலே. 14.

இப்படிப் புண்யபாபங்களாகிற பொன்னும் இரும்புமான விலங்குகளைக் §கழித்து, ஸூக்ஷ்மசரீரமாகிற சிறையினின்றும் ஸஹார்த்தப்ரஸாதஜ்ஞனை ஹார்த்தன் நயிப்பிக்கப் புறப்பட்டவனை பண்டு இறைகொண்ட தேவர்கள் பரவசராய், அதிப்ரீதராய் ப்ரணதிபரராய், காணிக்கையிட்டுக் காணமுற்பட; 'அர்ச்சிஸ்' என்றும் 'அக்நி' என்றும் பெயரையுடைய ஆதிவாஹிகன் வந்தெதிர்கொண்டு தன் வைபவமெல்லாவற்றையும் ஸமர்ப்பித்து, [1]சூழ்விசும்பணிமுகிலில் சொன்ன ஸத்காரத்தோடே தனக்கடைத்த எல்லை நடத்தும்.

அநந்தரம் பகலும் சுக்லபக்ஷமும் உத்தராயணமும் ஸம்வத்ஸரமும் அடைவே எதிர்கொண்டு வழி நடத்துவார்கள். காலவாசி ஶப்தங்கள் இங்கு காலாபிமாநி தேவதைகளைச் சொல்லுகின்றன. ஶாட்யாயந ஸம்ஹிதையில் [2]"அர்ச்சிஷோஹஸ் ஜ்யோத்ஸ்நீம் ஶுக்லபக்ஷம்" என்று பகலுக்கும் சுக்லபக்ஷத்திற்கும் நடுவே 'ஜ்யோத்ஸ்நீம்' என்று ஒன்றைச் சொன்னது ஶ்ருதிவிரு

*சேர்ந்திட வந்தவர்--வ †அருளால்பிரம—க ‡சுழற்சியிலே-க.
§கழற்றி—ம. கழித்து ஸ்தூல சரீரங்களாகிற—க.

[1] 10. 9. இத்திருவாய்மொழியில் முக்தனுக்குச் செய்யப்படும் உபசாரங்கள் சொல்லப்படுகின்றன. [2] ஶாட்யாயநஸம்ஹிதை.

மான ஸூத்ரத்திற்கு அநுகுணமாக ஶாஸ்த்ரவசநஸாஜமாகக் கொள்ளலாம். ஶாகாவிஶேஷோக்தவ்யுத்க்ரமாதிகளுக்கும் அநேகஶாகாநுஸரணமாக நிர்வாஹம் கண்டு கொள்வது.

ஸம்வத்ஸரதேவதைக்கு அநந்தரம் வாயுதேவதை வந்து எதிர்கொண்டு வழிநடத்தும். இந்த வாயு தன்னை தேவர்களுக்கு இருப்பிடமாகையாலே ஶாஸ்த்ரங்கள் தேவலோகஶப்தத்தாலும் வாயுலோகஶப்தத்தாலும் சொல்லும். வாயுவுக்கு அநந்தரம் ரதசக்ரரந்த்ரம்போலே இருப்பதொரு வழியாலே மேலேபோய் ஆதித்யனைக் கிட்டும். [3]"தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு" என்றும், [4]"மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் அன்னதோர் இல்லியினூடு போய்" என்றும், [5]"சண்டமண்டலத்தினூடு சென்று" என்றும் [6]"இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றிவைத்து" என்றும்

---

[3] சிறியதிருமடல்-7. தேரார் -தேரையுடையனுய், நிறைகதிரோன் மண்டலத்தை = பூர்ணகிரணங்களையுடையனை ஸூர்யனுடைய மண்டலத்தை, கீண்டு புக்கு=பிளந்து (கொண்டுபோய் பரமபதத்தைப்) பிரவேசித்து.

[4] பெரியதிருமடல்—16. மன்னும் - நித்யமான, கடும்கதிரோன் மண்டலத்தின் நல் நடுவுள் - (அணையவொன்ணுதபடி) கொடிதானகிரணங்களுடைய ஸூர்யமண்டலத்தின் மத்தியில், அன்னது ஓர் - அப்படிப்பட்ட ஒரு, இல்லியின் ஊடு-சிறுவழியின் நடுவே சென்று.

[5] தி. ச. வி. 67. சண்ட - கடிதான, மண்டலத்தின் - ஆதித்ய மண்டலத்தின், ஊடு சென்று - நடுவே போய்.

[6] பெரி. தி. 4. 9. 3. இருள் அகற்றும் - இருட்டைப் போக்கிக் கொண்டு, எறிகதிரோன் - வீசுகிற கிரணங்களையுடையனை ஆதித்யனுடைய, மண்டலத்தூடே - மண்டலத்தின் வழியாக ஏற்றிவைத்து.

7“ஆதித்யோ த்வாரமுச்யதே” என்றும், 8“யோ பித்வா ஸூர்யமண்டலம்” என்றும், 9“ஸ ஏஷ மண்டலம் பித்வா” என்றும் சொல்லுகிற ஸூர்யமண்டலபேதாதிகள் ப்ராக்ருதப்ரளயாதிகளில் அண்டாதிபதி முதலானோர் முக்தராம்போது ஸம்ப்ரவ்ருத்தங்களாகையாலே, இவை இங்குள்ளார்க்கு ஆகக் கடவன. ‘ஸூர்யத்வாரத்தாலே போவார்கள்’ என்றது ஶாஸ்த்ரங்களிலே 10“ஆடம்பரத்தினுடைய ஶப்தம்போலே” என்று விஶேஷிதமாயிற்று.

அவ்வழியாலே ஆதித்யன் நடத்தப் போய், சந்திரனைக் கிட்டும். பஞ்சாக்நிப்ரகரணத்தில் சொன்ன ஸோமப்ராப்தி ஸ்வர்க்கத்தில் ஶரீரவிஶேஷப்ராப்திக்காகச் சொல்லிற்று. தக்ஷிணாயநம்ருதனை முமுக்ஷுவுக்கு ந்யாஸவித்யையில் சொன்ன ஸோமஸாயுஜ்யம் உத்தராயணம்ருதனுடைய ஸூர்யஸாயுஜ்யம் போலே விஶ்ரமவிஶேஷார்த்தம். இங்கு ஆதிவாஹிகரில் ஒருவனான சந்த்ரனுடைய ப்ராப்தியைச் சொல்லுகிறது.

சந்த்ரன் வழிநடத்த துந்துபிஶப்தம்போலே இருப்பதொரு வழியாலே மேலே போமளவில், வித்யுதபிமாநிதேவதை வந்து எதிர்கொண்டு வழிநடத்தும்.

7பார. சா. 354. 13.

தேஷாம் வை க்ஷேமமத்வாநம் கச்சதாம் த்விஜஸத்தம: ।
ஸர்வலோகே தமோஹந்தா ஆதித்யோ த்வாரமுச்யதே ॥

க்ஷேமமான மார்க்கத்தில் செல்லுகிற அவர்களுக்கு ஸகல லோகத்திலும் இருட்டைப் போக்கிக்கொண்டு ப்ரகாசிக்கிற ஸூர்யன் த்வாரமாக (வழியாக)ச் சொல்லப்படுகிறான்.

8யாஜ்ஞ. 4. 167. 9

10ஆடம்பரம் - (மத்தளம் போன்ற) ஒருவகை வாத்யம்.

வைத்யுதன் தன்னையே *'அமாநவன்' என்றும், அவன்தானே ப்ரஹ்மத்தை ப்ராபிக்கும் என்றும் ஶ்ருதிகள் சொல்லுகையாலே, வித்யுத்தோடுண்டான துவக்கையும் அதனுடைய ஸம்பந்தத்தையும் இடமாகக் கொண்டுவந்த வருணனும், அவன் பின்னே அடையுண்ட இந்திரனும் ப்ரஜாபதியும், அமாநவன் நடத்துகிற வழியில் தந்தாமெல்லையளவே ஸஹகாரிகளாய்க்கொண்டு வழி நடத்துவார்கள்.

[11]'அமாநவனுடைய கமயித்ருத்வம் ப்ரயாணஸஹம்' என்கிற பாஷ்யம் [12]'வருணாதிகள் அநுக்ராஹகா:' என்கையாலே அநுக்ராஹகாந்வயமாத்ரத்திலே தாத்பர்யம். [13]ஒரு ஶ்ருதியிலே 'அமாநவன்' என்றும், வேறொரு ஶ்ருதியில் 'மாநஸன்' என்றும் சொல்லப்பட்டவர்களில் 'முற்பட அமாநவனும் பிற்பட மாநஸனும் வழிநடத்துவார்கள்' என்றும் சிலர் சொல்லுவார்கள். க்ரமநியாமகம் அப்ரமாணமாகையாலே, 'விகல்பமாதல், ஸமுச்சய

---

* அமாநவன் என்றும், மானஸன் என்றும்—வ.

[11] ததஶ்ச அமாநவஸ்ய கமயித்ருத்வம் ப்ரயாணஸஹிதத்வம் கம்யதே (ஸ்ரீபாஷ்யம் 4. 3. 3. வருணாதிகரணம்.)

[12] வருணாதயஸ்த்வநுக்ராஹகா இதி வைத்யுதாதிவாஹிகஸ்யைவாநந்வயோ விருத்த ஏவ (ஸ்ரீபாஷ்யம் 4. 3. 4. ஆதிவாஹிகாதிகரணம்).

[13] தத்புருஷோऽமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி—

அமாநவன் என்னும் புருஷன் இவர்களைப் பிரஹ்மத்தினிடம் சேர்ப்பிக்கிறான். (சாந்தோக்யம்.)

தாந் வைத்யுதாத் புருஷோ மாநஸ ஏத்ய ப்ரஹ்மலோகாந் கமயதி (ப்ருஹதாரண்யகே 8. 2. 15.)

மானஸனான புருஷன் வந்து வைத்யுதன் பக்கலினின்றும் ப்ரஹ்மலோகமேறக் கொண்டுபோம்.

மாதல்' என்று சிலர் கொள்ளப் பார்ப்பார்கள். விகல்ப ஷோஷாதிகளைப் பார்த்து 'ஒருவருக்கு இரண்டு பேர்' என்று சிலர் சொல்லுவார்கள். இங்கே ஶாஸ்த்ராதிகளையும் [14]"அர்சிரஹஸ்ஸுக்லபக்ஷ," [15]"[illegible]," [16]"அர்சிராதிகவக்ஷாத்" இத்யாதிகளான ப்ரமாணங்களையும் அநுஸந்திப்பது. 'மாநவனான புருஷன் வந்து வைத்யுதன் பக்கலினின்றும் ப்ரஹ்மலோகமேறக் கொண்டுபோம்' என்று ஶ்ருதி சொன்னது [17]"வைத்யுதேநைவ ததஸ்தச்ச்ருதே:" என்கிற ஸூத்ர ப்ரமாணமாக ஸ்தாநவ்யவஸ்தாதி

---

[14] அர்ச்சி: = அக்னி, அஹ: - பகல், சுக்லபக்ஷம்.

[15] [illegible]

(இந்த சுலோகம் தத்வமுக்தாகலாபத்தில் ஜீவஸரம் 60-வது சுலோக வ்யாக்யானத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது)

[16] அர்சிராதிகவக்ஷாத் [illegible] (தத்வஸாரம் 102)

[17] ஶா. ஸூ. 4. 3. 5. தத: - வித்யுத்தேவதைக்கு மேல், வைத்யுதேநைவ - (அமாநவனென்னும்) வைத்யுதனாலேயே (உபாஸகர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்; தச்ச்ருதே: - அப்படியே சுருதி சொல்லுகிறபடியால்)

களாலே நிர்வஹிக்கலாம். இதனால் அக்கரையில் அமானவனைச் சொன்ன ஸம்ஹிதைக்கும் விரோதமில்லை.

இவ்வர்ச்சிராதி தேவதைகளெல்லாம், 'கர்ம விசேஷங்களாலே வசம் பெற்ற ப்ரஜாபத்யாதிதேவதைகள்' என்றும், 'அமானவனை நித்யஸூரிகளிலே *ஒருவனாக இசைந்து, கீழுள்ளாரைக் கர்மவஶ்யர்' என்றும், 'இவர்களெல்லாரும் அமானவனைப் போலே பகவதாஜ்ஞாதீனராய் ஸூர்யாதிமண்டலங்களுக்கு அபிமானிதேவதைகளான சில நித்யஸூரிகள்' என்றும் மதபேதங்கள் நடக்கும். இவ்வர்ச்சிராதிகதி அண்டந்தோறும் உண்டாயிருக்கும்.

முமுக்ஷுவுக்கு [18]ப்ரஹ்மகாய நிஷேவணாதிகள் சொல்லுமிடங்கள் ஸத்வாரகந்யாயத்தாலே விசேஷ விஷயம். வஸுக்ஷ்ட்ஸோகாதி ப்ராப்திகதனம் சொல்லுமிடங்களுக்கும், [19]சாணூர சிசுபாலாயோத்யாதிகளுக்கும் சொன்னதற்கும் இதுவே நிர்வாஹம்.

---

*ஒருவனாக இசைத்து—க.

[18]ப்ரஹ்ம-காய-நிஷேவணாதிகள்— ப்ரஹ்மலோகம் சென்று ப்ரஹ்மாவின் சரீரத்தில் புகுந்து, அவர் அநுபவிக்கும் ஸுகங்களையெல்லாம் அவரோடொக்க அநுபவித்தல் முதலானவை. அந்த ஸுகத்தை அநுபவித்துப் பிறகு மோக்ஷத்தையடைய விரும்புவோருக்கு இந்த மார்க்கம். மதுவித்யையை அநுஷ்டிப்பவர்களும் அதேமாதிரி அந்த உபாஸநத்தின் மஹிமையினால் அஷ்டவஸுக்களில் ஒருவனாகி அவர்கள் போகத்தையெல்லாம் அநுபவித்து பிறகு அங்கேயிருந்தே மோக்ஷத்தைப் பெறுவார்கள்.

[19]சிசுபாலனுக்கு அங்கேயே ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருவடிகளில் லயித்து முக்தி உண்டாயிற்று; அயோத்யாவாஸிகளுக்கு ஸாந்தாநிகலோகம் போய் அங்கிருந்து மோக்ஷம். சிசுபாலனுக்கு அவ்விதம் கிடைத்ததும் அயோத்யாவாஸிகளுக்குக் கிடைத்ததும் விசேஷவிஷயமேயல்லது, பொதுவானதல்ல.

'நிவ்ருத்தியோகவான் பஞ்சபூதங்களையும் அதிக்ரமிக்கும்' என்று மநு சொன்னது, 'ஶிஶுமாரமும் முதலாகத் தொடங்கி அண்டாந்தர்வர்த்திலோகங்களையும் [20]அண்டகடாஹத்தையும், தசகுணிதோத்தரங்களான *ஆவரணஸப்தகங்களையும், இவையெல்லாம் உள்ளாம்படி பரந்த தமஸ்-தத்வத்தையும் ஜயிக்கும்' என்று ஶ்ருதிகள் சொன்ன தசாவஸ்தாநங்களுக்கும் உபலக்ஷணம்.

'இவ்வழி புநராவ்ருத்தியாகப் போனவர்கள் ஆவர்த்தியார்கள்' என்கிறது [21]ஸர்வலோகாநுஸஞ்சரண ஶ்ருதிவசத்தாலே 'ஸம்ஸரியார்கள்' என்றதாமத்தனை. [22]வைதிகன்புத்ராதிகள் இவ்வர்ச்சிராதிகதியாலே ஸஶ

---

* ஆவரணங்களையும் இவையெல்லாம் உள்ளாம்படியான பரந்த-க

[20] அண்டகடாஹம் = ப்ரஹ்மாண்டத்தினுடைய மேல் ஓடு. தசகுணிதோத்தரங்களான = ஒன்றைவிட ஒன்று பத்துமடங்கு அதிகமாக இருக்கிற. ஆவரண ஸப்தகங்கள் = ஆடை போல் ஒன்றின்மேல் ஒன்ருக சுற்றியிருக்கும் எழு ஆவரணங்கள். அண்டத்தைச் சுற்றி அதைப்போல் பதின் மடங்கு விஸ்தாரமுள்ள ஜலமும், அதைச்சுற்றி அதைப்போல் பதின் மடங்கான அக்னியும், அதைச்சுற்றி ஆகாசமும், அதைச் சுற்றி அஹங்காரமும், அதைச்சுற்றி பதின்மடங்கு அதிகமான மஹத்தத்வமும், அதைச்சுற்றி ப்ரதானமும் ஆவரணங்களாக இருக்கின்றன.

[21] ஸ இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந்।
தனக்கு இஷ்டமான ரூபத்துடன் வேண்டிய போகங்களை அநுபவித்துக்கொண்டு ஸகல லோகங்களிலும் பகவானுடன் ஸஞ்சரிக்கிருன்.

[22] ஸ்ரீ வைகுண்டநாதனை பகவான், பூமியில் அவதரித்திருக்கும் நரநாராயணர்களான அர்ஜுனன் கிருஷ்ணன் இருவரையும் தன் நாட்டிற்கு வரவழைத்துப் பார்க்க விரும்பி, ஒரு

விஶேஷஷாவித்த பெற்றவர்களல்லாமையாலே அவர்களை மீட்டது விரூஜமன்று.

இவ்வழியாலே [23]திரிகுணஸாகாஞாரத்தைக் கடந்தவன் *ஹமவஸ்க்ருவையெபோலே ஸர்வகாலத்திலும் ஏகரூபமாகப்பிரவஹிக்கிற 'விரஜை' என்கிற ஸூதநதியைக்கிட்டும். [24]"வெகண்டூஹீர்ந விரஜாம் ஸூதா நாம் உஹா நதீம்" என்கையாலும், [25]"மக்ஷாZயெர விரஜாம் விசுஷுதி தநூம் ஸக்ஷாம்" என்று சுவியஜுர் ஸஜூஹிக்கையாலும், விரஜையைச் சிலர் திரிகுண-ஸூஜஸக்வங்களுக்கு எல்லை யெனப் பார்ப்பார்கள். வெகண்டூ

உபாயம் செய்தார். த்வாரவதியிலுள்ள ஒரு பிராமணனின் குழந்தைகளையெலலாம் அவை பிறந்தவுடனேயே தன் லோகத்திற்கு எடுத்துக்கொண்டு வரும்படி செய்துவிட்டார். அந்தப்பிராமணன் கிருஷ்ணனிடம் முறையிட, பக்கத்திலிருந்த அர்ஜுனன் தான் இனிப் பிறக்கும் குழந்தையை ரக்ஷித்துத் தருவதாகவும், தவரில் அக்னியில் விழுந்து இறப்பதாகவும் பிரதிக்ஞை செய்தான். ஆனால் பத்தாவது குழந்தை பிறந்ததும் மறைந்துவிட்டது. ஸகல லோகங்களிலும் தேடியும் அதைக் காணுதவாறே அர்ஜுனன் உயிரைவிட எத்தனிக்க, ஸ்ரீ கிருஷ்ணன் அவனையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீ வைகுண்டம் சென்று, தன் அபரரூபமான பரவாஸுதேவனை வணங்கி, அவரால் பூஜிக்கப்பட்டவராய், வைதிகனுடைய பிள்ளைகளையும் பெற்று, அந்தப் பிராமணனிடம் சேர்த்தார்.

(ஸ்ரீ பாகவதம் தசமஸ்கந்தம். 89.)

*பகவத்க்ருபையாலே—க.

23 த்ரிகுணம் = ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற மூன்று குணங்களை உடைய பிரகிருதி என்னும், மருகாந்தாரம் = பாலைவனம்.

24 வைகுண்டத்தின் எல்லையில் ப்ரவஹிக்கிற விரஜை என்னும் மஹாநதியை.

25 சுவி-வ-ரூாஸரஸுக்வக்ஷஷஸூஜாஸாம்ஸஂவதுர வாயூம் லாக்ஷரவநு விசுஷுவாநு வெநும் ஹுஜாநாம் வதிழ

ஸூக்ஷ்மம் *பொதுவாகையாலும், 'ப்ரஹ்மலோகத்தில் ஆறு ஹ்ரதாதிகளுக்கு அநந்தரம் விரஜையைக் †கிட்டும்' என்று ஶ்ருதி சொல்லுகையாலும், திவ்யஜந வசத்திற்கு எல்லை என்றும் சிலர் சொல்லுவார்கள். 'விரஜையை மநஸ்ஸாலே கடக்கும்' என்றது 'தன் ஸங்கல்பத்தாலே கடக்கும்' என்றபடி. 'ஸதன் மநஸ்ஸாலே ஸர்வகாமங்களையும் கண்டு அநுபவிக்கும்' ¶என்பதற்கும் இதுவே நிர்வாஹம்.

விழியல்லால் வேலில்லை விண்ணின் மாதர்
மேனியல்லால் வில்லில்லை மீன வர்க்கு
மொழியல்லால் அமுதில்லை என்று முன்னாள்
முத்திவழி முனிந்தடைந்த மோகம் தீர்ந்தோம்
கழியல்லால் கடலில்லை என்பார் போலக்
காரியமே காரணமென் றுரைப்பார் காட்டும்
வழியல்லா வழியெல்லாம் கடந்தோம் மற்றும்
வானேறும் வழிகண்டோம் மகிழ்ந்திட் டோமே. [15.

இதி
ஸ்ரீ பரமபதஸோபாநே
ஸப்தமம் அர்சிராதிபர்வ ॥

தஸ்மாத்யோ விரஜாம் விஶ்வஸ்ய வ தத்ஸாக்ஷாத்
ததோத்தாநவ.

ஸ்வஸ்யாச்சர்யாதிதயா ஸாஸ்ஸ்க்ருதிநோ முக்தி
விஶேஷா: ஸது ॥ [தில்

(தத்வமுக்தாகலாபம்-ஜீவஸரம்-60-வது சுலோக வியாக்யானத்

தஸ்மாயோ விரஜாம்—க. தஸ்மாத்தோ விரஜாம்—ம.

*பொதுவாகையாலே ப்ரஹ்மலோகத்தில் அரம் என்கிற ஹ்ரதாதிகளுக்கு—க. †கிட்டும் என்றும் சுருதி—க.

¶என்பதற்கு இதுவே—க.

வன்பற்றுடன் மயல் பூண்டு மற்றோர் கதியாலினநாள்
என் பெற்றது பெறுந்தானமும் எத்தனை போதுளதாம்
துன்பற்ற தன் துணிவால் துயர்தீர்க்கும் துழாய்
[முடியான்
இன்புற்ற *நல்வழியால் ஏற்றும் நற்பதம் எண்ணுவ
[மே. 16.

இப்படி அநாதிகாலம் அநர்வித்தவார்ஷாயுஸஜத்தாலே அடிக்கடியும் அநந்தவைசித்ர்யையான ஸம்ஸாரபத்ததியிலே ஓடின விடாயெல்லாம் தீர அத்யந்தஹ்லாதையான அர்ச்சிராதிபத்ததியில் [1]'அமரரோடு உயர்வில்' சென்று, விஜ்வர-ஜ்வரஸார-ஸாரஸி-ஶீதலமான விரஜாப்ரவாஹத்தை அவகாஹித்து அழுக்கற்று, பவித்ரபாணியான அமாநவனுடைய கரஸ்பர்சத்தாலே வாஸநாவிசேஷம் கழிந்தவன்
திவ்யதேசப்ராப்தியாலே ஸர்வேச்வரனோடு ஸலோகனாய், அப்ராக்ருத-அப்ரமேய-விலக்ஷண-விக்ரஹயோகத்தாலே ஸரூபனாய்;
கீழ்ச் சொன்ன யோக்யதைகளில்லாதார்க்கு [2]"ந தத்ர ஶக்தா கந்தும்" இத்யாதிகளின்படியே கிட்டவரிதாய்,

---

*நல்வழியால் நற்பதம்—பா.

[1]1. 3. 11. ஆதிவாஹிகர்களோடு பரமபதத்தில் ('விரஜையிலே') போய்.

[2]ந தத்ர ஶக்தா கந்தும் வை பாபா விஷயாத்மகா: ।
டம்ப-லோப-மஹாக்ரோத-த்ரோஹ-மோஹைரவ்ருதா: ॥ பார. வந. 262-39)

('ந தத்ர விப்ர' என்றும் பாடம்)

வதிவ்ருதாயஉடிநிர தரான பரமைகாந்திகளுக்குப் ஷரா வுமாய், அயர்வறும் அமரர்களுக்கு சுநவரதஉஶடி நீயமாய், [3]சுகாலுகாலுமாய், [4]சுதுகடிா நுஜீவதுமாய், சுநுநிரவெக்ஷஷகாஶமாய், [5]வாஉயொகிவாஜூநவா வஸிஷ்டுமான நிதுநிரவஉநிர திஶயஹொஹுதாஜி ஷகஷடித்தையுடையதாய், [6]ஶஹ ஸ க்வ மயமாய், [7]"கொழுஞ்சோதி உயரம்" என்றும், [8]"சேணுயர் வானம்" என்றும், [9]"தெளிவிசும்பு" என்றும் சொல்லப்பட்ட [10]"நலமந்தமில்லதோர் நாட்டுக்"குள்ளே சென்று;

(டம்பம், ஆசை, பெருங்கோபம், அஜ்ஞானம், த்ரோஹம் என்கிற குணங்கள் நிரம்பினவர்களும், விஷயஸுகங்களிலேயே படிந்த மனத்தையுடையவர்களும்) அறிவீனர்களுமான புருஷர்கள் அங்கு (அந்த விஷ்ணுவின் லோகத்திற்குச்) செல்லமாட்டார்கள். (அவர்களுக்கு அங்கு போகமுடியாது.)

[3]காலத்தால் அழிவில்லாததாய்.

[4]சுதுகடிா நுஜீவதும் தஸ ஷா நம் விஷெணாஉடிஹா தூநஃ ।
ஷூயெவ ஷஹயா ராஜநு உஷெக்ஷஷம் ஜெவஉா நவெ॥

[5]சரணகதிகத்யம் (பரமயோகிகளுடைய வாக்கும் மனஸுக்கும் கூட எட்டாத)

[6]ரஜஸ்ஸும் தமஸ்ஸும் சேராத விலக்ஷணமான ஸத்வம் - சுத்தஸத்வம்.

[7]4. 9. 8. அளவற்ற தேஜோரூபமாயும் (சுத்தஸத்வமாயும் ப்ரகிருதிக்கும்) மேலிருப்பதுமான பரமபதம்.

[8]5. 3. 9. மிகவும் உயர்ந்ததான பரமபதம்.

[9]7. 10. 9. (ஸ்வரூப ப்ரகாசம் பிறக்கும்படி) தெளிவையுடைத்தான பரமாகாசம் என்னும் பரமபதம்.

[10]2. 8. 4. நன்மைக்கு (அல்லது ஆநந்தத்திற்கு) முடிவில்லாததான ஒப்பற்ற நாட்டுக்குள்ளே.

அங்கே ‘அரம்’ என்றும் ‘ண்யம்’ என்றும் பேருடைய அம்ருதமயஸரஸ்ஸுக்களையும், திவ்யாதிவ்யரத்நமணி மண்டப-ஸரித்-தடாகாதிவிஶேஷங்கள் எல்லாவற்றையும் [11]உபநிஷத்துக்களிலும் பகவச்சாஸ்த்ர-ஸம்ஹிதைகளிலும் ஸ்ரீ வைகுண்டகத்யாதிகளிலும் பண்டு பரக்க அநுஸந்தித்தபடியே ஸப்ரகாரமாக ஸாக்ஷாத்கரித்து,

அந்தமில்பேரின்பத்தில் ஆநந்தவெள்ளம் சூழ்ந்தாற்போலே இருக்கிற ‘ஐரம்மதீயம்’ என்கிற அம்ருத ஸரஸ்ஸைக் கிட்டும்.

அநந்தரம் ஸர்வஶரீரியினுடைய அர்ச்சாவதாரம் போலே ஸுலபமாய் ஸூரிஸேவ்யமான ‘ஸோம ஸவநம்’ என்கிற அஶ்வத்தத்தை அணுகும்.

இவனை ‘அபராஜிதை’யான திவ்யநகரியினின்றும் ஸ்ரீ வைகுண்டநாதன் எதிர்கொள்ள வரவிட்ட ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் நூறு நூறாக ஒரு திரளாய், திவ்யங்களான [12]மால்யாஞ்ஜந-சூர்ண-வாஸ-

[11]சாந்தோக்யம், கௌஷீதகி முதலான உபநிஷத்துக்கள்.
சா. 8 5. 3. ‘...............அரஶ்ச ஹ வை ண்யஶ்சார்ணவௌ ப்ரஹ்மலோகே த்ருதீயஸ்யாமிதோ திவி; ததைரம்மதீயம் ஸர:; ததஶ்வத்த: ஸோமஸவந:; ததபராஜிதா பூ: ப்ரஹ்மண:; ப்ரபுவிமிதம் ஹிரண்மயம் ॥’
கௌஷீத 1. 22. தஸ்ய ஶநோ ஹ்ரத:, ஊர்ம்யாக்ருதயா யஷ்டிஹா: ।

[12]மாலை, மை, வாஸனைப்பொடி, பீதாம்பரங்கள், ஆபரணங்கள், இவற்றைக் கையில் கொண்டவர்களாய்.

வாஸஃஹ்ரஹ்ரதிகளை ஏந்திக்கொண்டு [13]“காளங்கள் வலம்புரி கலந்து *‘எங்கும் இசைக்க’ வந்து, [13]“ஆண்மின்கள் வானகம் ஆழியான்தமர்” என்று உஜ்ஜாஸாவஸநம்பண்ணி, ஸாவஹூஹளஉகூாரனை ராஜமஹிஷீ பரிஜநங்கள் எதிர்கொண்டு உபசரிக்குமாப்போலே, ஸ்ரீ வைகுண்டநாதனை ஸேவிப்பார்க்கு நிகராக [14]“உடுத்துக் களைந்த” ஐதூாதிகளின்படியே வஹூவஹ்ரகாரமான ஸ்ரஹாயுஜ்ஞாரத்தாலே அலங்கரிப்பார்கள்.

சுநஞாரம் திவ்ய வ்ருக்ஷ-ஸாயுஜ்ய ஸம்ஸ்தாந-சுவராஜித சூயதநங்களை †அணுகினவளவிலே, ஸவஹுமஙுய் ஸர்வரஸஙுய்ச் [15]சிறந்த வான்சுடரான ஸ்ரீ வைகுண்டநாதனுடைய திவ்யமங-ரஸ-தேஜஸ்ஸுக்கள் வந்து ப்ரவேசிக்க, பாரிஜாதபரிமளமும் அம்ருதமும் ஆதித்யனும் உருகி ஒன்றினாற்போலே ‡உல்லஸிதவிக்ரஹ ஹமஙணஙுய்க் கொண்டு;
சூஷொஉ-ஹ்ரஷொஉ-ஸம்ஷொஉயொகங்களைக்காட்டில் சுதிஸயிதவைஹவமாய், [16]“யாஉயொயெ்தூவராஜிதெதி

---

*எங்கும் இசைக்க வந்தனர்—க. எங்கும் இசைத்தனர்—வ.

‡உல்லஸிதவிக்ரஹ குணமாய்க் கொண்டு—க.

[13] 10. 9. 6. காளங்கள்=ஊதுகொம்புகளும், வலம்புரி=வலம்புரியான சங்கங்களும், எங்கும் கலந்து=மாறிமாறி எங்குமொக்க, இசைக்க=சப்திக்கும்படியாக; ஆழியான்தமர்=ஸர்வேச்வரனுக்கு அடியார்களான நீங்கள், வானகம்=இவ்வுலகையே, ஆண்மின்கள்=ஆளுவீர்களாக.

†அணுகினவளவே—க. [14] திருப்பல். 9.

[15] 5. 10. 1. சிறந்த=தகுதியாய், வான்=அளவற்றதான, சுடர்=தேஜஸ்ஸையுடையவன்.

[16] ஸ்ரீ குண. கோ. 23.

விதிதா" என்கிறபடியுள்ள ஸ்ரீ வைகுண்ட நகரத்தை அணுகி, [17]"குடியடியார் இவர் கோவிந்தன் தனக்கு என்று முடியுடைவானவர் முறைமுறை எதிர்கொள்ள கொடியணிநெடுமதிள் கோபுரம்" குறுகி,

[18]'இந்திரன்' என்றும் 'ப்ரஜாபதி' என்றும் பேருடைய 'வாசலில் வானவ'ரைச் சென்று கிட்ட, §அவர்களும் இடைய நின்று [18]"வைகுந்தன்தமர் எமர் எமதிடம் புகுது" என்ன ஆஶ்ரிதருக்கு நித்யாநாவ்ருதமான ஸ்ரீவைகுண்ட நகர த்வார கவாடத்தைக் கடந்து புக்கு; ¶இரண்டு சிறகும் மணிபர்வதங்களை நிரைத்தாற்போலே இருக்கிற மாளிகைப் பெருந்திருவீதியின் நடுவே செல்லும்.

அப்போது [19]"விதிவகை புகுந்தனர் என்று நல்வேதியர் பதியினில் பாங்கினில் பாதங்கள்" கழுவ; [19]"நிதியும் நற்சுண்ணமும் *நிறைகுடவிளக்கமும் மதிமுகமடந்தையர் ஏந்தி" எதிர்கொள்ள, ஹிரண்மய

§அவர்களும் வைகுந்தன் தமர்—ம. இடைய நின்று=விலகி வழிவிட்டு. ¶இரண்டருகும்—ம. *நிறைகுடவிளக்கம்—க.

[17]10 9. 8. 'இவர் கோவிந்தனுக்கு ஸபரிகரமாக தாஸபூதர்கள்' என்று (கைங்கர்யம் செய்ய) முடி சூடியிருக்கும் நித்யஸூரிகள் முறைப்படி எதிர்கொள்ள, கொடிகளாலே அலங்கரிக்கப்பட்டதும் உயர்ந்த மதிளையுடையதுமான கோபுரத்தைக் குறுகி.

[18]10 9 9. ஸ்ரீ வைகுண்டநாதனைச் சேர்ந்தார் எங்களுக்கு ஸ்வாமிகள்; (ஆகையால் நீங்கள்) எங்கள் பகவத்கைங்கர்ய ரூபமான) பதத்தை ஏற்றுக் கொள்ளவேணும்.

[19]10. 9. 10. விதிவகை=நம் பாக்யத்தாலேயே, இங்கே புகுந்தனர் என்று, நல்வேதியர்=உபநிஷத்துக்களால் கூறப்படுகிற நித்யஸூரிகள், பதியினில்=தங்கள் மாளிகைகளிலே, பாங்கினில்=முறைப்படி, பாதங்கள் கழுவ=திருவடிகளை விளக்க, மதிமுகமடந்தையர்=(இவர்களைக்கண்ட ஸந்தோஷத்தி

மான திவ்யவிமாநத்தைக் கிட்டினவளவிலே †ப்ரஹ்மயஶஸ் வந்து பிரவேசிக்க, [20]'நிகரில் புகழா'னுக்கு நிகர் என்னலாம்படியாய் [21]ப்ரஜாவதியினுடைய ஸபை' என்ற வாக்யத்திலும், [22]"ஸர்வஸ்வாயாஸ்ரண' என்கிற ஶ்லோகத்திலும், நித்யத்திலும் சொல்லுகிற ஆநந்தமயமான திருமாமணிமண்டபத்தைச் சேர்ந்து;

னுல்) பரிபூர்ண சந்திரனைப் போன்ற முகத்தையுடைய பெரிய பிராட்டியும், ஸ்ரீ பூமிப் பிராட்டியும், நப்பின்னைப் பிராட்டியும், தங்களுடைய திவ்யபரிசாரிகைகளோடே கூட, நிதியும்-(தங்களுக்குப்) பரமதநமான ஸ்ரீ சடகோபனையும், நற்சுண்ணமும்=திருச்சுண்ணப்பிரஸாதத்தையும், நிறைகுட விளக்கமும்=பூர்ணகும்பங்கள், மங்கள தீபங்கள், முதலியவற்றையும், (கைகளில்) ஏந்திக்கொண்டு.

†ப்ரஹ்மயசஸ்ஸுக்கள்—க.

[20]6. 10. 1. [21]ப்ரஜாவதேஸ்ஸபாம் ஸா. 8. 14 1.

[22]ஸர்வஸ்வாயாஸ்ரண நாயகௌஷ்ட--
வக்ஷேஷி ஸம்ஶ்ரீ ஸஹஸ்ரவகாஶு ।
ஸூர்யானாந்தய ஸஹஸ்ர--
ஸ்ருணாதி நாந தவாவஸா நி ॥

(ஸ்ரீரங்கராஜஸ்தவம் 1-38) ஸகலஜீவர்களுக்கும் பொதுவான பெருமாளுடைய திருவோலக்கத்தாலும் நிரம்பாத இடத்தை உடையதும், 'ஆயிரக்கால் மண்டபம்' முதலான திருநாமங்களையுடையதும், ஆனந்தமயமானதுமான ஆஸ்தானத்தை நானும் அடைவேனாகவும்.

அங்கே 23குமுதாதிகளான திவ்யபார்ஷதேஶ்வரர்களும், 24சண்டாதிகளான திவ்யத்வாரபாலர்களும் ஸபஹு-மாநாவலோகநம் பண்ண, அநீகேஶ்வர நியுக்தரான ஸ்வஸ்தாநநிவேதகர் அருளப்பாடிட, அடிக்கடியும் தொழுவதெழுவதாய்க் கொண்டு திருமாமணி மண்டபத்தின் முகப்பிலே சென்றேறி;

அங்கே சிறகுடைய மஹாமேருவைப் போலே சிறந்த திருமேனியுடையனாய் 25த்ரயீமயனாய் 26'திருமகள் சேர் மார்ப'னுக்குத் திருக்கண்ணாடி போலே ஸந்நிஹிதனாய் நிற்கிற 27'காலார்ந்தகதிக் கருட'னைக் கண்டு கழல் பணிந்து;

28"பிணங்கி அமரர் பிதற்றும் குணம்" என்கிறபடியே ஒரோரு ஸ்வாமிகுணத்தைப்பற்றி வாதி-ப்ரதிவாதி

23குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமனன், சங்குகர்ணன் ஸர்வநேத்ரன், ஸுமுகன், ஸுப்ரதிஷ்டன், என்று எட்டு கணாதிபதிகள். பார்ஷதேச்வரர்=பரிஷத்திலுள்ளவர்களுக்குத் தலைவர்கள்.

24சண்டன், ப்ரசண்டன், பத்ரன், ஸுபத்ரன், ஜயன், விஜயன், தாதா, விதாதா என்று ஒரு வாயிலுக்கு இருவராக எட்டுத் துவாரபாலகர்கள். (அநீகேஶ்வரர்—விஷ்வக்ஸேனர்; ஸேனைமுதலியார்)

25த்ரயீமயன் - ஸகலவேதஸ்வரூபனான கருடன்

26 7. 2. 9. 27பெரு. தி. 1. 8. கால்=காற்றுப் போல், ஆர்ந்த=பொருந்தின, (அதிகமான) கதி=வேகத்தையுடைய, கருடனைக் கண்டு

28 1. 6. 4. நித்யஸூரிகள் (தாம்தாம் சொல்லும் குணத்திற்கே பெருமையைக் கூறி, அப்படி) மாறுபட்டுப் பிதற்றும் குணம். அழகோலக்கம்=அழகுபொருந்திய (ஓலக்கம்) கோஷ்டி.

களைப்போலே வாசிவகுப்பதும், அதிஸ்நேஹத்தாலே ஸுஸ்தாநே ஹயஸஜ்ஜையுடையாரைப்போலே ஸம்ஜ்ஞம் பண்ணுவதுமாய்க் கொண்டு ரஸிக்கிற நித்யஸூரிகள் நிரையாக இருக்கின்ற அழகோலக்கத்தின் நடுவே சென்று;

[29]'அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ' †என்கிற ஆசை நிறைந்து, திவ்யவரிஜநவரிவ்ருத-ஸூர்ய-ஸூஹரணாழ்வார்கள் ஸ்வாஸாயாரணவுக்ஷணவிஸிஷ்டவிக்ரஹங்களோடே யதாஸ்தாநம் ஸேவித்து நிற்கிற நிலைகளைக் கண்டு, ஸவரிவிய கௌக்ஷயமநோரயாயிரஞ்ஞயக் கொண்டு கிட்டச் சென்று;

[30]வயக்ஷவரிஸரத்திலே முன்பு தங்களைக் கொண்டு எம்பெருமான் நடத்தின க்ருஷி ஃலித்தது என்று வஞணஙநோரயரான வஞவஙாவாயர்களைக் கண்டு; [31]'அறியாதன அறிவித்து' [32]'என்னைத் தீமனம் கெடுத்த' [33]'நும்கால்கள் என் தலைமேல் கெழுமீர்' என்று க்ருதஜ்ஞதை தோற்றப் பணிந்து;

---

[29] 2. 3. 10. †என்று ஆசை நிறைந்து—க.

[30]பர்யங்கபரிஸரம்=ஸிம்மாஸனத்தின் பக்கம்.

[31] 2. 3. 2 [32] 2. 7. 8. (உன்னையும் உகந்து க்ஷுத்ரவிஷயங்களையும் உகக்கும்) என் பொல்லாத நெஞ்சைத் தவிர்த்தாய்.

[33] 9. 7. 1. (எனக்காக வழிநடந்த) உங்களுடைய திருவடிகளை என் தலைமேல், கெழுமீர்=கொண்டுவந்து சேர்க்கவேண்டும்.

உபயவிபூதி=நித்யவிபூதி, லீலாவிபூதி என்ற இரண்டு.

உபயவிபூதியும் [34]'தனிக்கோல் செல்ல' [35]'வானிள வரசு' மன்னி வீற்றிருக்கிற 'ஸுவிதளஜஸ்'ஸான திவ்யஸிம்ஹாஸநரத்நதிவ்யபர்யங்கத்தை அணுகி;

விபூத்யபிமானிகளான சதுஷ்பாதங்களும் §பர்யங்கவித்யையில் [36]'பூத-பவிஷ்யத்-பாதங்கள்' என்றாற்போலவும், பகவச்சாஸ்த்ரங்களில் †'தர்மாதர்மாதிகள்' என்றார்போலவும், பரக்கவும் சுருங்கவும் பலவகையாகச் சொல்லுகிற பாதம் முதலான அவயவங்களுமெல்லாம் அவ்வவ்வபிமாநிதேவதாவிஶேஷங்களாய் இருக்கும்படியைத் தெளியக்காணும்.

இப்படி ஸர்வதத்வங்களையும் போகார்ஹமாக ஸந்நத்தமாக்கினாற்போலே அத்புதமான திவ்யஸிம்ஹாஸநத்தின் மேலே ஆயிரம்கோடிபாலஸூர்யர்கள் *உதித்தாற்போலே இருப்பதொரு திவ்யபத்மத்தில் எட்டுத் திக்கிலும் எட்டு தளங்களிலே அடைவே

---

*சேர்ந்தாற் போலே--வ.

[34]4. 1. 5. [35]பெரி. தி. 3. 6. 3. பரமபதத்திற்கு இளவரசாய் உள்ளவன். §பர்யங்கவித்யையில் சொன்ன பூத-பவிஷத்-க.

[36]தஸ்ய பூதம் ச பவிஷ்யச்ச பூர்வௌ பாதௌ।
ஶ்ரீஶ்ச இரா சாபரௌ॥

(கௌஷீதகி. 1. 43.) (இறந்தகாலம், எதிர்காலம், ஐசுவர்யம் 'இரை' என்னும் அம்ருதம், இவற்றின் அபிமானிதேவதைகள் நாலு பாதங்களாக இருக்கிறார்கள். †தர்மா தர்மாதிகள் - தர்மம், ஞானம், வைராக்யம், ஐசுவர்யம் என்ற நான்கும் கால்களாகவும், அதர்மம், அஜ்ஞானம், அவைராக்யம் அநைச்வர்யம் என்ற நான்கும் பலகைகளாகவும் கூறப்பட்டிருக்கின்றன.

[37]விமலாதிகள் எண்மரும், கர்ணிகையின் பூர்வபாகத்திலே அநுக்ரஹையும் *சந்த்ரகலைகளே வடிவு கொண்டு சந்த்ரிகையை வகுத்தெடுத்தாற் போலே சாமரஹஸ்தைகளாய்க்கொண்டு ஸேவித்திருக்கும்படியைக் கண்டு, [38]“சாமரவ்யக்ரஹஸ்தம் மாம் ஏவம் குர்விதி †வக்ஷ்யதி” என்ற மநோரதஸித்தி கைபுகுரும் என்று காணும்.

அப்பத்மத்தின் நடுவிலே கநககிரிஸஹஸ்ரங்களைச் சேர்த்தால் வரும் ஔந்நத்யத்திற்கும் போராது என்னும்படி அதிதுங்கவிஸ்தாரையான திவ்யகர்ணிகையின்மேலே ப்ரஹ்மாண்டங்கள்தோறுமுள்ள திருப்பாற்கடல்களையெல்லாம் அடுக்கி விரித்தாற்போலே நிரவத்ய-விஸ்தார-உந்நதமான திவ்யயோகபர்யங்கவிசேஷத்தினுடைய [39]‘நிர்மோகம்’ என்று சொல்லலாம்படி நித்யஸஜ்ஜனாய், ஸர்வாதாரன் தனையும் நித்யமாகத் தரிக்கும்படி [40]ப்ரக்ருஷ்டவிஜ்ஞாந §பலனாய்,

---

*சந்த்ரகலைகள் வடிவு—க.

†வக்ஷ்யதி என்றும் மநோரதஸித்தி கைபுகுமென்று—க. கை புகுந்ததென்று—ம.

[37]விமலாதிகள்: விமலை, உத்கர்ஷிணீ, ஜ்ஞாநா, க்ரியை, யோகை, ப்ரஹ்வீ, ஸத்யை, ஈசாநை ஆக எண்மர் எட்டு இதழ்களிலும், தாமரைக்காயின் முன்பாகத்தில் அநுக்ரஹையும் சாமரக் கையுடன் இருக்கிறார்கள்.

[38]கதா மாம் ஹரிராஜ்ஞயா வாசா ஸ்ரியா காந்தோ ஜகத்பதி:’ என்று பூர்வார்த்தம். (2-ஜிதந்தே. 27) சாமரத்தை வீசும் என்னைப் பார்த்து ‘இப்படிச் செய்’ என்று எப்போது ஸ்ரிய:பதியான பகவான் நியமிப்பாரோ?

[39]நிர்மோகம்=உறை; அல்லது பாம்பின் சட்டை.

§பலவானாய்—க. [40]ஸ்தோத்ர ரத்னம். 39.

[41]"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்," [42]"நிவாஸஶய்யாஸந" என்கிறபடியே அவஸரோசித ஶரீரங்களைக் கொண்டு அஶேஷஶேஷவ்ருத்திகளைப்பண்ணுகையாலே 'ஶேஷன்' என்றும், [43]த்ரிவிதபரிச்சேதரஹிதனையும் தன்மடியில் ஏகதேஶத்தில் வைக்கும்படியான வைபவத்தையுடையனாகையாலே 'அநந்தன்' என்றும் திருநாமத்தையுடையவனாய், ஸர்வகந்த வஸ்துவுக்கும் வாஸனையுண்டாம்படியான திவ்யவிக்ரஹத்தையுடையனாய், [44]'வேரிமாறாத பூமேலிருப்பா'ளுடனே ஸாக்ஷாத் ஸஹசாரணனவன் மூவுல

---

[41] 1 அ.53 (பகவான்) செல்லும்போது குடையாகவும், எழுந்தருளியிருக்கும்போது ஸிம்மாஸனமாகவும் ஆதிசேஷன் இருக்கிறார்.

[42] நிவாஸஶய்யாஸநபாதுகாம்ஶுகோபதாநவர்ஷாதபவாரணாதிபி: । ஶரீரபேதைஸ்தவ ஶேஷதாம் கதை: யதோசிதம் ஶேஷ இதீரிதே ஜநை: ॥

(ஸ்தோத்ர ரத்னம் 40)

[43] த்ரிவிதபரிச்சேதரஹிதனாய்=காலம், தேசம், வஸ்து என்ற மூன்றினும் அளவுபடாதவன். பரமாத்மா நித்யனாதலால், ஒரு காலத்தில் இல்லை என்று காலத்தினால் அளவுபடுத்தமுடியாது; ஸர்வவ்யாபியாதலால், ஒரு இடத்தில் இல்லை என்னமுடியாது; ஸர்வ வஸ்துரூபமாயும் இருப்பதால் இந்த வஸ்து பரமாத்மா இல்லை என்று (அல்லது இது பரமாத்மாவைக் காட்டிலும் மேற்பட்டது என்று) சொல்லமுடியாது. அதாவது வஸ்து பரிச்சேதம் இல்லை.

[44] 4. 5. 11. வேரிமாறாத - வாஸனை மாறாத; பூமேல் - தாமரையில், இருப்பாள் - நித்யவாஸம் பண்ணுகிற லக்ஷ்மி.

கும் தொழ வீற்றிருக்கும்படி ஸாக்ஷாத்க்ருதனாய், அம்ருதப்ரவாஹம் சுழியாறுபட்டாற்போலே அவதாதஶீதளமான போகவேஷ்டனத்தையுடையனாய், ஶரதப்ரஸம்ஹதியை போலவும் ஸ்படிகோத்துங்க ஶ்ருங்கஸஹஸ்ரங்களை நிறைத்தாற் போலவும் பரந்து உயர்ந்த ஃபணா ஸஹஸ்ரத்தின் மணிகிரணஜ்வாலாதபத்தாலே 'ஸாஞ்ஜணீகம்' என்னும் பேரையுடைத்தான பரமபத மெல்லாம் உஜ்ஜ்வலிதமாம்படி பண்ணக் கடவனான திருவநந்தாழ்வானைக் கண்டு;

அவனோடொக்க [45]ஒருமிடறாய் அநேகாஸ்யமான போகஸாம்யத்தை ஆசைப்பட்டு, அவனுடைய அம்ருதவர்ஷிகளான இரண்டாயிரம் திருக்கண்களுக்கும் தான் ஏகலக்ஷ்யமாய், அவன் மேலே அமர்ந்திருக்கிற [46]'மேலாத்தேவர்கள் மேவித் தொழும் மாலாரை'க் கண்டு, தானும் அநந்யத்ருஷ்டியாய் அத்ருப்தஸாரஸ்யமும் பெறும்.

பண்டையிரு வினையாற்றில் படிந்து பாரம்
காணாதே ஒழுகியநாம் பாக்கியத்தால்
வண்டமரும் மலர்மாது மின்னாய் மன்ன
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்

---

[45] திருவனந்தாழ்வானுடைய போகம் (-சரீரம்) ஒரு கழுத்தை உடையதும் (ஒரு மிடறாய்) பல முகங்களையுடையதுமாயிருக்கும்; இந்த முக்தன் ஆசைப்படும் போகமும் (அநுபவமும்) அதுபோலவே ஒரு மிடறாய் - ஆதிசேஷனோடு ஏக கண்டமாய், அநேகமுகமாய் - பலவிதங்களா இருக்கும் என்றபடி.

[46] 5. 1. 8. ஸர்வவிதத்திலும் உயர்ந்தவர்களான நித்யஸூரிகள் பொருந்தி அடிமை செய்யும், மாலாரை - ஸர்வாதிகனான ஸர்வேச்வரனை.

கொண்டல்அருள் மழைபொழிய வந்த தொப்பாம்
குளிர்ந்துதெளிந் தமுதாய விரசை ஆற்றைக்
கண்டணுகிக் கருத்தாலே கடந்து மீளாக்
கரைகண்டோர் கதியெல்லாம் கதித்திட் டோமே.
[17.

𑌇𑌤𑌿
𑌶𑍍𑌰𑍀𑌵𑌰𑌵𑌰𑌮𑍁𑌨𑌿𑌦𑌾𑌸𑍇𑌨
𑌅𑌷𑍍𑌟𑌮𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌦𑍇𑌶𑌵𑍈𑌭𑌵𑌮𑍍 ॥

பூவளரும் திருமாது புணர்ந்த நம் புண்ணியனார்
தாவளமான தனித்திவம் சேர்ந்து தமருடனே
நாவளரும் பெருநான் மறையோதிய கீதமெல்லாம்
பாவளரும் தமிழ்ப்பல்லாண்டிசையுடன் பாடுவமே. 18.

இப்படி அதிமநோஹரமான அநந்தஹோமமண்டபத்திலே ரஜதகிரியின்மேலே ஶாதகும்பகிரி *இருந்தாற்போலே [1]'எழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்து' [2]'விண்ணோர் தலைவனாய் †குமாரயுவாவாய் [3]"சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு" என்னும்படி ஆதித்யஸஹஸ்ரஸங்காஶம் போலே அநவதிகதேஜஸ்ஸையுடையனாய், [4]"விஶ்வாப்யாயநகாந்த்யா பூர்ணேந்த்வயுததுல்யயா" என்னும்படி அநவதிகலாவண்யத்தையுடையனாய்;

ஸர்வசேஷியான தன்னுடைய க்ருபையும் க்ஷமையும் வண்மையும் வடிவுகொண்டாற்போலே இருக்கிற நாச்சி

---

*சாய்ந்தாற்போலே—க. [1] 4. 5. 1. [2] 1. 5. 6

†ஸுகுமாரயுவாவாய்—க.

குமாரயுவா - கௌமாரம் யௌவனம் இரண்டுமில்லாமல், இரண்டுக்கும் நடுவே 'இளகிப் பதித்திருக்கும் நிலை.'

[3] 5. 5. 10. சோதிவெள்ளத்தின் உள்ளே = தேஜோராசியின் மத்தியில், எழுவதான, ஓர் உரு - ஒப்பற்ற விக்ரஹம்.

[4] ஸாத்வதஸம்ஹிதை 2. 70. ஆயிரக்கணக்கான பூர்ணசந்திரனுக்கு ஒப்பான காந்தியினால் ஜகத்தை (போஷித்து) ஸந்தோஷப்படுத்திக்கொண்டு.

மார்களில் [5]ஸ்வாபிமத - நித்ய - நிரவத்ய - அநுரூப ஸ்வரூபாதிகளை உடையளாய், [6]ஸ்வவைஶ்வரூப்யத்தாலே ஸதாநுபவம் பண்ணாநின்றாலும் இன்று அநுபவிக்கத் தொடங்கினாற் போலே ஆஶ்சர்ய ப்ரவாஹாவஹையாய், [7]"ஶாந்தாநந்த" இத்யாதிகளின்படியே ஸர்வ

---

[5]சரணாகதிகத்யம். ஸ்வாபிமத - தனக்கு விருப்பமானதும், நித்ய - நித்யமானதும், நிரவத்ய - ஒருவித தோஷமற்றதும், அநுரூப - தனக்கேற்றதுமான, ஸ்வரூபம் விக்ரஹம் முதலியவற்றை உடைய (பிராட்டி).

[6]ஸ்வவைஶ்வரூப்யேண ஸதாநுபூதயாப்யபூர்வவத் விஸ்மயமாததாநயா (ஸ்தோத்ர ரத்னம் 38)
ஸ்வவைச்வரூப்யத்தாலே - தன்னுடைய உலகத்திற்கெல்லாம் அந்தர்யாமியாயிருக்கும் ரூபத்தாலே.

[7]சதுச்லோகி. 4.

ஶாந்தாநந்த மஹாவிபூதி பரமம் யத் ப்ரஹ்ம ரூபம் ஹரே:
மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத்ப்ரியதரம்
ரூபம் யதத்யத்புதம் ।
யாந்யந்யாநி யதாஸுகம் விஹரதோ
ரூபாணி ஸர்வாணி தா-
ந்யாஹு: ஸ்வைரநுரூபரூபவிபவை:
காடோபகூடாநி தே ॥

ஒருவித விகாரங்களில்லாததும், சுத்தம் அசுத்தம் என்ற இரண்டு விதமான பெரியவிபூதிகளையுடையதும், ஸர்வோத்க்ருஷ்டமானதும், பெரியதும், பிறருக்கு பெருமையைச் செய்வதுமான யாதொரு ஸ்வரூபம் பகவானுடையது இருக்கிறதோ, அந்த ஸ்வரூபத்தைக்காட்டிலும் (தன் ஸௌந்தர்யாதிகளால்) அவருக்கே அதிகப்ரீதியைத் தருவதும், மிகவும் ஆச்சர்யமானதும், ஆச்ரிதர்களுக்குப் பெருமையை அளிப்பதுமான யாதொரு

ப்ரகாரஸம்ஶ்லேஷத்தை உடையளாய், 'திருமார் வத்து மாலை நங்கை'யாய், 9'அமுதில் வரும் பெண்ணமு'தாய், 10'வேரி மாருத பூமேலிருந்து வினைதீர்க்கு'மவளாய், தன் கடாக்ஷ லேசத்தாலே ஐஶ்வர்யஸ்வர்காதி வைபவத்தையும் கொடுக்குமவளாய், 11"தேவதேவ திவ்யமஹிஷீ" என்னும்படியான மேன்மையும், 12"காருண்யாஸ்ராநதமுகீ" என்னும்படியான நீர்மையும் உடையளான பெரியபிராட்டியார் 'தாக்ஷிண்யஸீமா' என்று

திவ்யமங்கள விக்ரஹமுண்டோ, ஸ்வேச்சையாலே அவதரித்து விளையாடுகிற இன்னும் வேறு வேறு எந்த விக்ரஹங்களுண்டோ, அவைகளெல்லாம், ஹே லக்ஷ்மீ, உன்னுடையதான, அவற்றிற்கேற்றரூபம்முதலிய ஸம்பத்துக்களோடு பிரிவின்றிச் சேர்ந்தேயிருக்கின்றன என்று (ச்ருதிஸ்மிருதிகள்) கூறுகின்றன.

8 10. 10. 2. திருமார்வத்து - திருமார்புக்கு, மாலை - மாலைபோல் அலங்காரமாய், நங்கை - (பெருமாளுக்கும் பெருமையைக் கொடுக்கக்கூடிய) குணம் நிரம்பினவளாய்.

9 தி. மொ. 6. 1. 2. அமுதில் - தேவதைகள் பெற்ற அம்ருதத்தில் நின்றும், வரும் - (ஸாரபூதமாய்) வரும், பெண் அமுது - பெரிய பிராட்டியார் என்னும் அம்ருதம்.

10 4. 5. 11. வேரிமாருத - வாஸனை மாறாத, பூமேலிருந்து, வினை தீர்க்குமவளாய் - நம் பாபங்களையெல்லாம் போக்குமவளாய்.

11 சரணாகதிகத்யம். தேவர்க்கெல்லாம் தேவனான பெருமாளுடைய பத்நீகளில் ப்ரதானமானவள்.

12 லக்ஷ்மீஸஹஸ்ரநாமம். கருணை - தயையினால் (உண்டான) ஆஸ்ர - கண்ணீர் நிரம்பியதும், ஆநத - (ஆச்ரிதர் பக்கல் அன்பினால்) வணங்கியதுமான, முகீ - முகத்தை உடையவள். தாக்ஷிண்யஸீமா - தாக்ஷிண்யத்தின் உயர்ந்த நிலை; (தெற்கு திக்கின் எல்லை என்று மற்றொரு அர்த்தம்).

தோற்றும்படி தக்ஷிணவக்ஷஸ்ஸ்தலத்திலே நீலமேகத்தை அணைந்த நீலமின்போலே ஸேவித்திருந்து, தன்னுடைய ஶேஷித்வ-ஸ்வாம்ய-ஸௌந்தர்யாதிஸம்பந்தித்வங்களைப் பூரித்துக்கொண்டு, ஸர்வஜநங்களை ஸம்ஸாரோத்தாரணஶேஷவ்ருத்திகளிலும் ஆஜ்ஞாபிக்க, [13]"ஏவம்பூத பூமிநீளாநாயக" என்கிறபடியே பெரியபிராட்டியாருடைய ஸ்வபாவம் என்னலாம்படி ஸமாநதமஹாநவிஷயையாய், [14]'பச்சைமாமலை போல் மேனிக்'கும் படிமாவான நிறத்தை உடையளான [15]'பார் என்னும் மடந்தை'யும்;

[16]'அல்லிமலர்மகள் போகமயக்குகள்' அத்யல்பம் என்னும்படி நித்யாநுபவம் நின்றவிடம் தெரியாதே [17]'நீளா துங்கஸ்தநகிரிதடீஸுப்தம்' என்னப்பண்ணுமவளாய், நீளாதத்வஸ்வரூபையான ஸ்ரீநீளைப்பிராட்டியும்;

அடியார் இடத்திலே ஸேவித்திருக்கும்படி தாங்களும் இடத்திலே ஸேவித்திருக்க;

---

13 சரணாகதிகத்யம். (லக்ஷ்மீபோலவே) இப்படியிருக்கிற, பூமி, நீளை இருவருக்கும் நாயகனே ?

14 திருமாலை 2. (படிமா - உபமானம் ஒப்பு).

15 2 8 7. பார் என்னும் மடந்தை - ஸ்ரீ பூமிப் பிராட்டி.

16 3. 10. 8. அல்லிமலர் மகள் - தாமரைப்பூவில் வஸிக்கும் பெரிய பிராட்டியாரோடு, போக - சேர்த்தியாலே (பிறந்த) மயக்குகள்: (ஆச்சர்யமான) மயக்கங்கள், (அல்லது) ஆநந்தங்கள்.

17 திருப்பாவைத் தனியன் (பட்டர் அருளிச் செய்தது). நீளையினுடைய உன்னதமான ஸ்தனங்களாகிற மலைத் தாழ்வரையில் (சாய்ந்து) உறங்கும் (கிருஷ்ணனை).

அடியார் இடத்திலே-அடியார்கள் தங்களுக்கேற்ற ஸ்தானத்திலே; தாங்களும், இடத்திலே - இடது பக்கத்திலே.

[18]"ஸேவ்ய: ஶ்ரீபூ⁴மிநீளாபி⁴:", [19]"உடனமர் காதல்மக ளிர் திருமகள் மண்மகள் ஆயர்மடமகள் என்றிவர் மூவர்" இத்யாதிகளில் சொன்ன சேர்த்தியிலே அடிமை செய்யுமவர்களுக்கு [20]'ரஸம்' என்றும் 'ஆநந்தம்' என்றும் சொல்லும்படியான ‡நிரதிஶயபோ⁴க்³யதையுடையனான நிருபாதி⁴கஶேஷியை நிருபாதி⁴கஜ்ஞாநவிகாஸத்தாலே [21]"அவாவறச் சூழ்ந்தாய்" என்னும்படி அநுபவித்து;

---

‡நிரதிசய போக்யத்தையுடையனான—க.

நிருபாதிக - ஒரு காரணத்தைப் பற்றவிராமல், ஸ்வபாவமாகவே (சேஷி) - ஸ்வாமியாக இருப்பவர்.

[18]ஸப்தஶதே இதி ஶாண்டி³ல்யஸ்ம்ருதௌ (ப்³ரஹ்மரக்ஷாயாம்)
தே³வோ வைகுண்ட²நாத²ஸ்து அநந்தாஸநஸம்ஸ்தி²த: ।
ஸேவ்ய: ஶ்ரீபூ⁴மிநீளாபி⁴: த்⁴யாதவ்யோ ப்³ரஹ்மவாதி³பி⁴: ॥

ஸ்ரீ வைகுண்டநாதனான வாஸுதேவனை திருவனந்தாழ்வான் பேரில் எழுந்தருளியிருப்பவனாகவும், ஸ்ரீ, பூமி, நீளை என்ற மூன்று பிராட்டிமார்களாலும் ஸேவிக்கப்படுகிறவனாகவும் த்யானம் (செய்ய வேண்டும்.)

[19]1. 9. 4. உடனமர் - (பிரிவை ஸஹிக்கமாட்டாமையால்) கூடவே, அமரவேண்டும்படியான, காதல் - காதலையுடைய, மகளிர் - தேவிகள்; திருமகள் - பெரியபிராட்டியார், மண்மகள் — ஸ்ரீ பூமிப் பிராட்டி, ஆயர்மடமகள் - கோப குலத்தில் பிறந்தவளும் ஆத்மகுணங்கள் நிரம்பினவளுமான நப்பின்னைப்பிராட்டி என்ற இவர் மூவர்.

[20]'ரஸோ வை ஸ:'; 'ஆநந்தோ ப்³ரஹ்ம'— தை. உப.

[21]10. 10. 10. அவாவற - (எல்லாவற்றையும் காட்டிலும் பெரிதான) என் ஆசையெல்லாம் தீரும்படி, சூழ்ந்தாய் - வந்து (என்னுடன்) கலந்தாய்.

[22]"ததோபி தஸ்ய ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம்" என்றும், [23]"நால்தோளமுது" என்றும் பேசப்பட்டு, [24]'குன்ருடு கொழுமுகில் போல் குவளைகள் போல் குரைகடல்போல் நின்ருடுகணமயில்போல் நிறமுடைய' [25]'பொன்னின் வண்ணம் மணியின்வண்ணம் புரையும் திருமேனி'யில் அவயவஸௌந்தர்யத்திலும் ஆபரணச் சேர்த்தியழகிலும் ஆழங்கால்பட்டு, [illegible]ரான முமுக்ஷுக்கள் பண்ணும் ரஞ்ஜகவ்யாபாரங்களைக் கொண்டு [26]"விபந்யவ:" என்கிற ச்ருதியின்

---

[22]சதுச்சுலோகி—4. ததோபி - (ஆநந்தமயமான) பகவத்ஸ்வரூபத்தைக் காட்டிலும் கூட, தத்ப்ரியதரம் - (அழகிய அமைப்பிஞல்) அவருக்கு அதிகப் பிரியமானதும், அத்யத்புதம் - ஆச்சர்யத்தைத் தருவதுமான, யத்ரூபம்-யாதொரு (பரமபதத்திலுள்ள, திவ்யமங்கள விக்ரஹமுண்டோ.

[23]5. 8. 7. நால்தோள் நான்கு தோள்களைப் பெற்றிருக்கும், அமுது - அம்ருதம். (அம்ருதம்போல் போக்யமானவன்).

[24]பெரி. தி. 4. 8. 9. குன்ருடு - மலையின் உச்சியிலே நின்று அசைகிற, கோழுமுகில் போல் - அதிக நீரை முகந்துகொண்டு ப்ரகாசிக்கிற மேகம்போலவும், குவளைகள்போல்-அப்போதலர்ந்த நீலோத்பலங்கள் போலவும், குரை - சப்திக்கிற, கடல் போலவும், நின்று ஆடு - (ஸந்தோஷத்தாலே) நின்று ஆடிக்கொண்டிருக்கிற, கணமயில்போல் - மயில் திரள்போலவும், நிறமுடைய-நிறத்தை (அல்லது அழகையுடைய பெருமாள்).

[25]பொன்னின் வண்ணம் புரையும் திருமேனி—க.

தி. மொ. 4 9. 8. பொன்னின் வண்ணம் - ஸ்வர்ணத்தின் வர்ணத்தையுடைத்தாயிருக்கும்; மணியின் வண்ணம் - நீலரத்னத்தின் வர்ணத்தையுடைத்தாயிருக்கும்; புரையும் - இவற்ருேடெல்லாம் பொருந்தின (அல்லது ஒப்பான, திருமேனி) ஆழங்கால் பட்டு - அழுந்தி; ஈடுபட்டு என்று அர்த்தம்.

[26]விபந்யவ: - விவிதமான ஸ்தோத்ரங்களைப் பண்ணுநிற்பர்கள்.

படியே விவிதஸ்தோத்ரங்களைப் பண்ணத் தொடங்கி; திவ்யாஜகவஜ்ரக்ஷியாகிற ராத்ரியோடே ஸவித்ருவ்ருந்த ஸாஹித்யத்தாலே சேர்ந்தது என்னலாம்படி [27]கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீள்முடியைப்பார்த்து, [28]"முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ" என்பது;

[29]வதநாரவிந்த-மகரந்தரஸ-ஆஸ்வாதத்திற்காக வண்டொழுங்கு படிந்தாற்போலே அசைகிற திருக்குழல்கற்றைகளைப் பார்த்து, [30]"கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளின் உள்கொண்ட நீலநன்னூல் தழைகொல்? அன்று, மாயன் குழல்" என்பது;

---

[27]பெரி. தி. 4.1.1. கதிர் ஆயிரம்-ஆயிரம் கிரணங்களையுடைய, இரவி அநேக ஸூர்யன்கள், கலந்து, எரித்தாலொத்த - சேர்ந்து ப்ரகாசித்தாற் போலே இருக்கும், (அல்லது அவர்களை உருக்கி வார்த்தப்ரகாரமோ என்னும்படி), நீள் முடி - (ஸர்வஜகதீச்வரனாயிருக்கும் பெருமையைக் காட்டும்படி) நீண்ட கிரீடம்.

[28]3. 1. 1. உனது முகச்சோதி - உன்னுடைய முகத்தின் ஒளியானது, முடிச்சோதியாய் - கிரீடத்தின் தேஜஸ்ஸாக மலர்ந்ததுவோ-மேலே கிளம்பிற்றோ?

[29]வதநாரவிந்த - முகமாகிற தாமரையின், மகரந்தரஸ-தேனை, ஆஸ்வாதத்திற்காக - புஜிக்கும்பொருட்டு.
திருக்குழல் கற்றைகள் - அழகிய சுருண்ட தலைமயிர்.

[30]7. 7. 9. கொள்கின்ற - (ப்ரளயகாலத்தில் லோகத்தையெல்லாம் வ்யாபிக்கிற, கோள் - தன்மையையுடைய, இருளை சுகிர்ந்திட்ட - பன்னி (அஸாரமான அம்சமெல்லாம் போம்படி அதைக் கழித்து), கொழும் சுருளின் - அழகியசுருளின், உள்கொண்ட - உள்ளேயிருக்கும், நீல - வயிரமாய் நீலமான நிறத்தையுடைத்தாய், நல் - நன்றாயிருந்துள்ள, நூல் தழை கோல் - நூல் திரளோ? அன்று; மாயன் குழல் - ஆச்சர்யபூதனான பகவானு

அத்திருக்குழல்சேர்த்தியாலே ஒரு ஹாஸம் இருளோடே சேர்ந்த அஷ்டமீ-சந்த்ரனை அநுகரிக்கிற திருநெற்றியை அநுபவித்து, [31]"நாள் மன்னு வெண்திங்கள் கொல்? நயந்தார்கட்கு நச்சிலை கொல்?" என்பது;

அத்திருநெற்றியில் [32]அழகுக்குக் கீற்றெடுக்கலாம்படியிருக்கிற திருப்புருவங்களை அநுபவித்து, [33]"இன்னு

டைய திருக்குழல். (பருத்தியை பன்னி எடுத்து, பட்டை போட்டு, பட்டையின் மேல்புறத்திலிருக்கும் பஞ்சு அழுக்கும் அஸாரமுமாயிருக்கலாமாதலால், பட்டையின் உட்புறத்திலிருந்து நூல்வரும்படி நூற்றால், அந்த நூல் எவ்வளவு வெளுப்பாகவும் மெல்லியதாயும் இருக்குமோ, அதுபோல் இருட்டைப் பஞ்சுஸ்தானத்தில் வைத்து அதிலிருந்து நூற்ற நூல் மாதிரி இருக்கலாமோ என்றால் ஸர்வேச்வரனுடைய திருக்குழல்களின் அழகுக்கு அதுவும் நேர் நில்லாது. நேருக்கு நேர் த்ருஷ்டாந்தமாக ஒரு வஸ்து இல்லாததுமட்டுமல்ல. இவ்வளவு சிக்ஷித்தாலும் ஒன்றும் உபமானமாகப் போதாது என்கிறார்.)

31 7. 7. 7. நாள்-(பூர்வபக்ஷத்து அஷ்டமியான) நாளில், மன்னு-ஸ்திரமாக இருந்து, வெண் - (களங்கம் தெரியாதாகையால்) வெளுத்திருக்கும், திங்கள் கொல் - சந்திரனோ? (அல்லது) நயந்தார்கட்கு - தன்னை ஆசைப்பட்டார்க்கு, நச்சிலை கொல் - விஷப்பூண்டாயிருப்பதோ? (விரும்பவேண்டாதிருக்கிறதோ)

32 அழகுக்குக்கீற்றெடுத்தல்-பொன்னின் மாற்றறிவதற்காக உறைப்பது போல் உறைத்துப் பார்த்தல்.

33 7. 7. 4. இன்=இனியதான, உயிர்க்கு - ப்ராணனை (அபஹரிக்கைக்காக), ஏழையர்மேல் - (பரமபுருஷனைக் காண ஆசைப்படும்) பெண்கள் மேலே, வளையும் - (தானே) வளைந்து (துன்புறுத்தும்), இணை நீலவிற் கோல் - நீலமான இரண்டு வில்லோ? (அங்ஙனன்றியே), மன்னிய - (சரீரத்தோடு) கூடியவனாய், சீர் - (அழகு முதலான) குணங்களையுடையனான, மதனன் - மன்மதனுடைய, கருப்புச் சிலை கோல் - கரும்புவில்தானோ.

யிர்க்கு ஏழையர் மேல் வளையும் இணை நீலவிற்கொல்? மன்னிய சீர்மதனன் கருப்புச் சிலை கொல் ?" என்பது; 34"ஈஶ்வரோஹம்" என்று இருப்பாரைத் தோற்பித்து 35"நமஸ்தே" என்று திருவடிகளிலே விழப்பண்ணும் 36"கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்களைக் கண்டு, 37"ஏழையர் ஆவி யுண்ணும் இணைக் கூற்றங்கொலோ? அறியேன்; ஆழியங் கண்ணபிரான் திருக்கண்கள்கொலோ" என்பது;

38ஶ்ருதிஸுரபிநிஶ்வாஸமான திவ்யநாஸாவம்ஶத்தைப் பார்த்து, 39"மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ? கொழுந்தோ?" என்பது;

34கீதை - 16. 14. அஹம் - நான், ஈஶ்வர: - ஸ்வதந்த்ரன்.

35ஜிதந்தே 1. 1. (ஏ புண்டரீகாக்ஷ) நமஸ்தே - (உன் கண்ணழகுக்குத் தோற்று) உன்னை நமஸ்கரிக்கிறேன்.

36அமல 8. கரியவாகி - கறுத்து, புடைபரந்து - பரவி விசாலமாய் மிளிர்ந்து - சலித்து, செவ்வரி ஓடி - செவ்வரிபடர்ந்து, நீண்ட - (காதளவும்) நீண்ட, அ - அப்படிப்பட்ட, பெரியவாய - பெரியனவான, கண்கள்.

37 7: 7. 1. ஏழையர் - (சபலைகளான) பெண்களுடைய, ஆவி - ப்ராணனை, உண்ணும் - அபஹரிக்கும், இணை - ஒன்றுக்கொன்று சேர்த்தியான) இரண்டு, கூற்றம்கோலோ - ம்ருத்யுவோ, அறியேன் - (அங்ஙனன்றியே), ஆழி - கடல்போல் ச்ரமஹாமானதும், அம் - அழகியதுமான (வடிவையுடைய), கண்ணபிரான் - உபகாரகனான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய, திருக்கண்கள் கோலோ - கண்கள் தானோ? அறியேன்.

38சுருதி-வேதங்கள், ஸுரபி - கமழும், நி:ஶ்வாஸமான - மூச்சுக் காற்றையுடைய, நாஸாவம்ஶம் - அழகிய மூக்கை.
(யஸ்ய நிஶ்வஸிதம் வேதா:)

39 7. 7. 2. மாடு - (கடல்போன்ற கண்களுக்கு) ஸமீபத்திலே, உயர் - (அதையே ஊற்றாகக் கொண்டு) ஓங்கி வளர்ந்த, கற்பகத்தின் வல்லியோ - கற்பகத்தின் கொடியோ; கோழுந்தோ - (எப்போதும் பசுமை மாறாமையாலே) கொழுந்தோ ?

நாச்சிமாருக்கு [40]லீலாமணிதர்பணங்கள்போலேயிருக்கிற திவ்யகபோலங்களைப் பார்த்து, 'வர்ணிக்கைக்கு நிலமன்று' என்று, [41]"கண்கள் சிவந்து பெரியவாய், வாயும் சிவந்து கனிந்து, உள்ளே வெண்பல் இலகு சுடர் இலகுவிலகுமகரகுண்டலத்தன்" என்று சுற்றடிக் கொள்வது;

[42]'செம்பவளத்திரள்'போலே இருக்கிற திவ்யாதரபல்லவத்தைப் பார்த்து, [43]"வாலியதோர் கனிகொல்? வினையாட்டியேன் வல்வினைகொல்? கோலம் திரள் பவளக்

---

40 லீலா - விளையாட்டுக்கான, மணிதர்ப்பணங்கள் - ரத்னமயமான கண்ணாடிகள்.

41 8. 8. 1. கண்கள் சிவந்து பெரியவாய் - விசாலமாய், (அப்படியே) வாயும் சிவந்த - திருவதரங்களும் சிவந்து, கனிந்து - பழுத்து, உள்ளே - உட்புறத்தில், வெண் - வெளுத்த, பல் - பற்களினுடைய, இலகு - விளங்குகிற, சுடர் - ஒளியையும், இலகு - அத்யுஜ்ஜ்வலமாய், விலகு, - அசைந்துகொண்டிருக்கிற, மகரகுண்டலத்தன் - மகர குண்டலங்களையுடையவன்.
சுற்றடிக்கோள்வது - கன்னங்களை நேரில் வர்ணிக்கமுடியாததால், அதைவிட்டு, கண், உதடுகள், பல், காது முதலான சுற்றினுமுள்ளவற்றை வர்ணிப்பது.

42 3. 5. 4. செம்பவள - சிவந்த பவளத்தின், திரள் - ஸமூஹம் போலே.

43 7, 7. 3. வாலியது - ஸ்திரமாய் (அதாவது பிஞ்சாகி பழுத்து அழுகிப்போதல் முதலான நிலைகளில்லாமல் எப்போதும் ஏகரூபமாய் பக்வமாய்), ஓர் - ஒப்பற்ற - கனிகோல் - பழமோ? வினையாட்டியேன் - (இதை இப்போதே அனுபவிக்கப்பெறாத) பாபத்தையுடையளான என்னுடைய, வல்வினைகோல் - கழிக்க அரிய பாபமோ? கோலம்திரள் - அழகு திரண்டிருந்துள்ள, பவள - பவளத்தினுடைய, கொழுந்துண்டம்- இளமை பொருந்திய துண்டமோ?

கொழுந்துண்டம் கொலோ?" [44]"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?" என்பது;

[45]ஸ்மிதாநநனைக் கொண்டு தோற்றின [46]"தூமுறுவல் தொண்டைவாய்ப் பிரானுடைய தூமுறுவலைப் பார்த்து, [47]"என்றும் நின்றே திகழும் செய்ய வீன் சுடர் வெண் மின்னுக்கொல்? அன்றி என்னுவி அடும் அணிமுத்தம் கோலோ?" என்பது;

காந்திக்கு ஹிந்தோளங்கள் போலே இருக்கிற திவ்ய கர்ணபாசங்களைப் பார்த்து, [48]"மகரம் தழைக்கும் தளிர் கொல்?" என்பது;

---

[44]நா. தி. 7. 1. திரு - அழகிய, பவளம் - பவளம்போன்று, சேம் - சிவந்த, வாய்தான் - திருவதரமானது, கருப்பூரம் - பச்சைக் கற்பூரம்போல், நாறுமோ - பரிமளிக்குமோ? கமலப்பூ - செந்தாமரை மலர்போலே, நாறுமோ - பரிமளிக்குமோ? (அல்லது) தித்தித்திருக்குமோ - இனிதாயிருக்குமோ.

[45]புன்சிரிப்பு தவழும் முகத்தினனை
(தாஸாஶாவிலஸத்ஸௌரேஃ ஸ்மிதாநநவாம் ஸ்ரஜஃ)

[46]5. 3. 8. தூ - வெண்மையான, முறுவல் - தந்த பங்க்தியையும், தொண்டைவாய் - தொண்டைக் கனிபோல் சிவந்த அதரத்தையுமுடையனான, பிரான் - பரமோபகாரகனான (பெருமாள்)

[47]7. 7. 5. என்றும் - எப்போதும், நின்றே - ஒரேமாதிரியாக நின்று, திகழும் - ப்ரகாசிப்பதாய், செய்யசுடர் - சிவப்பான சுடரை, ஈன் - வெளிவிட்டுக்கொண்டிருக்கிற, வேண்மின்னுக் கொல் - வெளுப்பான மின்னலோ? அன்றி - அன்றிக்கே, என்னுவி - என் உயிரை, அடும் - ஹிம்ஸிக்கும், அணி - அழகான, முத்தம்கோலோ - (முத்துப்போன்ற) பற்கள் தானோ? கர்ணபாசங்கள் - அழகிய காதுகள்.

[48]7. 7. 6. மகரம் - மகரகுண்டலம், தழைக்கும் - தளிர்க்கிற, தளிர்கோல் - தளிர்தானோ?

[49]'சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதிபரந்த' ஸம்பூர்ண சந்த்ரனும் 'நேரொவ்வா'ன் என்னும்படியான திருமுகத்தில் அழகைத் திரள அநுபவித்து, [50]"கோளிழைத்தாமரையும் கொடியும் பவளமும் வில்லும் கோளிழைத்தண்முத்தமும் தளிரும் குளிர்வான் பிறையும் கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டம் கொல் ?" என்பது;

[51]"குருஷ்வ மாமநுசரம்" என்றிருப்பாரைக்கூவிக்கொள்ளும்போது, [52]'ஸ்நிக்தகம்பீரமதுர' நாதமாய், நாச்சிமாருடைய வளைத்தழும்போடு வாசியில்லாத ஸௌகுமார்யத்

---

49 பெரி. தி. 1. 4. 3. ஒளிவட்டம் - ஒளியையுடைய மண்டலம், சுற்றும் சூழ்ந்து - பரிபூர்ணமாக ஆகி, சோதிபரந்த - களங்கமில்லாததால் தேஜஸ்ஸாலே வ்யாப்தமாய் இருக்கிற.

50 7. 7. 8. கோள் - தன் ஒளியை, இழை - தனக்கு ஆபரணமாக உடைய, தாமரையும், கொடியும் - கற்பகக் கொடியும், பவளமும் வில்லும், கோள் - தன் அழகை, இழை - ஆபாணமாக உடைய, தண்முத்தமும் - குளிர்ந்த முத்தமும், தளிரும், குளிர்- சீதளமாய், வான்- சிறந்த, பிறையும் - பிறைச் சந்திரனும், இவற்றையெல்லாம் உடையதாய்), கோள் இழையாவுடைய - தன் ஒளியே தனக்கு ஆபரணமாகவுடைய, கொழும் - பூர்ணமான சோதிவட்டம்கொல் - ஜ்யோதிர்மண்டலமோ ? (இங்கு 'தாமரை' என்று திருக்கண்களும், 'கொடி' என்று மூக்கும், 'பவளம்' என்று அதரமும், 'வில்' என்று புருவங்களும், 'முத்தம்' என்று பற்களும், 'தளிர்' என்று காதுகளும், 'வான்பிறை' என்று திருநெற்றியும் கூறப்படுகின்றன.)

51 ரா. அ. 31. 22. என்னைத்தொடர்ந்து செல்லும் தாஸனுகச் செய்து கொள்ளும்.

52 வைகுண்டகத்யம். ஸ்நிக்த - அன்பும், கம்பீர - பெருமையும், மதுர - இனிமையும் உடைய, நாதமாய் - சப்தத்தை உடைய.

தை உடைத்தாய், திருமேனி ஒளியாலே பசுத்த ஸ்ரீ பாஞ்சஜந்யம்போலே இருக்கிற திருக்கழுத்தைப் பார்த்து, [53]"முற்றும்உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக் கொண்டது" என்பது;

ஸகலபுருஷார்த்தங்களையும் வழங்குமவள்ளலென்றிக்கே, ஏதேனும் ஒரு கிஞ்சித்காரம் பண்ணினாருக்கு [54]'ஸர்வஸ்வபூத'மான காடபரிஷ்வங்கத்தைக் கொடுக்கக் கடவவான திருத்தோள்களைப் பார்த்து, [55]"கற்பகக் காவன நற்பலதோள்'கள் என்பது;

[illegible]மநோஹரமாய், மௌக்திக - ஸ்ரீவத்ஸ - கௌஸ்துப - வநமாலாவிராஜிதமாய், [56]'அலர்மேல்மங்கை இறையும் அகலகில்லேன்' என்று உறையும்படி [illegible]மான திருமார்பை அநுபவித்து, [57]"ஆரமார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டது!" என்பது;

---

[53]அமல. 6. முற்றும்-(அண்டத்திற்கு உள்ளும் புறம்புமுள்ள) எல்லாவற்றையும், உண்ட - அமுது செய்த, கண்டம் கண்டீர் - திருக்கழுத்தன்றோ, அடியேனை உய்யக்கொண்டது-அடியேனை ஸம்ஸாரத்தில் அகப்படாதபடி செய்தது.

[54]ஸர்வஸ்வபூதமான - ஸர்வஸொத்தாயிருக்கும்படியான (ஆலிங்கனம்)

ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத: (ரா. யு. 1. 13),

[55]6. 6. 6. கற்பகக்கா அன - கற்பகச் சோலைபோலேயாய், நல்-அதிலும் நல்லதாய், பல - பலவான, தோள்கள்.

[56]6. 10. 10. அலர்மேல் மங்கை - தாமரைப்பூவின் மேல் நித்ய வாஸம்பண்ணும், லக்ஷ்மி, இறையும் - க்ஷணம்கூட, அகலகில்லேன் - (உம்மைவிட்டுப்) பிரிந்திருக்க ஸஹிக்கமாட்டேன், (என்று சொல்லிக்கொண்டு எழுந்தருளியிருக்கும்.)

[57]அமல. 6. ஆரமார்பதன்றோ - முக்தாஹாரத்தை உடைத்தான மார்பன்றோ, அடியேனை ஆட்கொண்டது - என்னை அடிமை கொண்டது.

ப்ரளயாபத்துக்கள் வந்தால் ப்ரபஞ்சத்தையெல்லாம் உள்ளே வைத்து ரக்ஷிக்கும்படியான திருவுதரத்தைப் பார்த்து, [58]"காரேழ் கடலேழ் மலையேழ் உலகுண்டும் ஆராவயிற்றான்" என்பது;

[59]'மரதகக் குன்ற'மொத்த திருமேனியிலே மாணிக்க வொளி சூழ்ந்தாற்போலே பொருந்தின [60]'பொன்னொத்த ஆடையை'ப் பார்த்து, [61]"படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய் நின் பைம்பொன் கடிச் சோதி கலந்ததுவோ?" என்பது;

[62]ஜநநபதவீஜங்காலரை முன் ஓடிவந்து விலக்கக் கடவனவான ஸ்ரீஜங்காகாண்டங்களைக் கண்டு, [63]கந்தர்ப்ப

58 10. 8. 2. கார் ஏழ் - (புஷ்கலாவர்த்தகாதிகளான) ஏழு மேகங்களையும், கடல் ஏழ் - ஏழு ஸமுத்ரங்களையும், மலை ஏழ் - ஏழு குலபர்வதங்களையும் உடைத்தான, உலகு உண்டும் - லோகத்தையெல்லாம் அமுது செய்தும், ஆராவயிற்றான் - நிறையாத வயிற்றையுடையவனை.

59 2. 5. 4. 60பெரு. தி. 6. 5. பொன்னொத்த ஆடை - பீதாம்பரம்

61 3. 1. 1. பை - பரந்த, பொன் - அழகையுடைய, நின் - உன், கடி - திருவரையின், சோதி - சோதியானது, படி - ஸ்வாபாவிகமான, சோதி - ஒளியையுடைய, ஆடையோடும் - திருப்பீதாம்பரத்தோடே, பல்கலனாய் - பல திவ்யாபரணங்களுமாய், கலந்ததுவோ - கலந்ததோ?

62ஜநநபதவீ-ஸம்ஸாரத்தில், ஜங்காலரான-ஸஞ்சரிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களான. ஜங்காகாண்டம் - அழகியகணுக்கால்கள்.

63கந்தர்ப்பகாஹளை - மன்மதனுடைய எக்காளம் என்னும் ஊதும் வாத்யம்; களாசீ-காளாஞ்சி என்னும் அடிசிறுத்து, வாயகன்றதான பாத்திரம்; தூணீரம் - அம்புறாத் தூணி; மாத்ருகை - மாதிரி.

காஹஜ . கஹாவி_தஙுணீஈஊாத்ருஷிகெ என்னலாம்படி [64]"கணைக்காலிருந்தவா" என்பது;

வேதங்களுக்கெல்லாம் [65]மேல்சாத்தாய், ஸர்வாத்மாக்களுக்கும் [66]"ஸாமாந்யதைவதமான [67]பொதுநின்ற பொன்னங்கழல்களைப் *பார்த்து, [68]"ஒருகாலில் சங்கு, ஒருகாலில் சக்கரம்," [69]"பத்துவிரலும் மணிவண்ணன் பாதங்கள் ஒத்திட்டிருந்தவா" என்பது;

திருவடிகளுக்கும் ஆதாரபத்மத்திற்கும் உண்டான சேர்த்தியைப் பார்த்து, [70]"அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?" என்பது;

---

*பார்த்து ஒரு காலில் சக்கரம் பத்துவிரலும்—க.

[64]பெரி. தி. 1. 2. 3. கணைக்காலிருந்தவா - கணைக்காலின் அழகு இருந்தபடியென்?

[65]மேல்சாத்து - மேலே அணியும் ஆபரணம் அல்லது வஸ்த்ரம்.

[66]ஸாமாந்யதைவதம் - பொதுவான தைவம். (ஜிதந்தே 1. தேவாநாம் தாநவாநாம் ச ஸாமாந்யமதிதைவதம்

[67]3 அ. 88. பொதுநின்ற - (எல்லோருக்கும் ஆச்ரயிக்க) பொதுவாயிருக்கிற, பொன் அம் கழல் - பொன்போல் அழகிய திருவடிகளை.

[68]பெரி. தி. 1. 7. 6. ஒரு காலில் - ஒரு காலில், சங்கு, - சங்கு வடிவமானதும், ஒரு காலில் - மற்றொரு காலில், சக்கரம் - சக்கரவடிவமானதுமான (ரேகைகளையுடைய)

[69]பெரி. தி. 1. 2. 2. மணிவண்ணன் - நீலரத்னம்போன்ற வடிவை உடையவனுடைய, பாதங்கள் - திருவடிகளில், பத்துவிரலும் - பத்துவிரல்களும், ஒத்திட்டிருந்தவா - அநுரூபமாய் இருக்கின்ற அழகு.

ஆதாரபத்மம் - திருவடிகளுக்கு அடியில் ஆதாரமாகவிருக்கும் தாமரைப் பூ.

[70]3. 1. 1. அடிச்சோதி - திருவடிகளின் தேஜஸ்ஸானது, நீ நின்ற தாமரையாய் — நீ நின்ற ஆஸநபத்மமாய், அலர்ந்ததுவோ - மலர்ந்ததோ?

இப்படி வாஸ்வாஹாணங்களான திவ்யாவயவங்களைப் பேசத்தொடங்கி, [71]"கருமாணிக்கமலைமேல் மணித்தடம் தாமரைக் காடுகள் போல் திருமார்வு வாய் கண் கை உந்தி கால் உடையாடைகள் செய்ய பிரான்" என்பது;

'நீலஜீமுத ஸமானமான திருமேனியிலே நிலைமின்கள்போலே விளங்குகிற ஜாஜ்வல்யமாந நிஷேவதாதூக்களாகிற திவ்யாபரணங்களைப் பார்த்து,

[72]"அந்தாமத்து அன்புசெய்து என்னுவிசேர் அம்மானுக்கு அந்தாம வாள் முடி சங்கு ஆழி நூல் ஆரமுள" என்பது;

அஞ்ஜநகிரியை அணைந்த வநஜாஜிதஸூர்கள் போலே வாஸ்வ - வாஹாமத்தை யுடையரான திருக்கையில்

---

[71] 8. 9. 1. கருமாணிக்கமலைமேல் - கறுத்த நிறத்தையுடைய, மாணிக்கமலை மேல், மணி - அழகியதாய், தடம் - பெருத்த தாமரைக்காடுகள்போல திருமார்வு, வாய், கண், கை, உந்தி - திருநாபி, கால், உடை ஆடைகள் - திருப்பீதாம்பரங்கள் இவற்றினுடைய, செய்ய - சிவப்பையுடையனுய்க் கொண்டு, பிரான் - உபகாரகனுயிருப்பவன்.

நிலைமின்=ஸ்திரமாயிருக்கும் மின்னல்கள்.

[72] 2. 5. 1. அம்தாமத்து - அழகிய ஸ்தானமான பரமபதத்தில் (செய்யும்) அன்பு செய்து - அன்பை (என்னிடம்) செய்து, என் ஆவி சேர் - என் ஆத்மாவிலே வந்து சேர்ந்தவனுன, அம்மானுக்கு - ஸ்வாமிக்கு, அம் - அழகிய தாமம் - மாலையை உடைத்தான, வாள் முடி - ஒளி பொருந்திய கிரீடம், சங்கு ஆழி - சங்கு, சக்கரம், நூல் - யஜ்ஞோபவீதம், ஆரம்-ஹாரம் (இவை) உள - இருக்கின்றன.

அஞ்ஜனகிரி - மைமலை.

திருக்கையில் ஆழ்வார்கள் - திருக்கைகளில் இருக்கும் சங்கம் சக்கரம் என்னும் ஆயுதாழ்வார்கள்.

ஆழ்வார்களைப் பார்த்து; [73]'சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பு'வது;

பரந்த திருப்பாற்கடலிலே ஸௌந்தர்ய-லாவண்யாதிகள் போலே திவ்யாத்மஸ்வரூபத்திலே வாத்ஸல்ய-ஸௌசீல்யங்களுக்கு வகுத்த ஸ்தாநவிசேஷங்களைப் பார்த்து, [74]"உயர்வற உயர்நலமுடையவன்," [75]"வல்வினையேனை ஈர்கின்ற *குணங்களையுடையா"ன் என்பதாய்;

†அந்த ஸீலாதிகுணங்களாலும் ஸீதளங்களான [76]'தூதுசெய் கண்'களாலும் ஸ்ரீக்ருஷ்ணனைக் கொண்டு, ஸ்ரீஸம்கோவன் நிற்கிற வாஉவீம்த்தளவும் சென்று, [77]"வானுயரின்பம் மன்னி வீற்றிருந்தாய்! அருளு நின் தாள்களை எனக்கே" என்ன,

---

*குணங்களையுடையாய்—வ. †அநந்தஸீலாதிகுண—க.

[73] 7. 2. 1. சங்கு சக்கரங்கள் என்று கைகூப்புவன் என்பது—க

[74] 1. 1. 1. உயர்வு - (மற்றவஸ்துக்களினுடைய) உயர்த்திகள் எல்லாம், அற - இல்லையென்று சொல்லலாம்படி, உயர் - உயர்ந்த, நலம் - ஆநந்தத்தை உடையவன்.

[75] 8. 1. 8. வல்வினையேனை - (உம்முடன் சேரமுடியாமல்செய்கிற) ப்ரபல பாபத்தையுடையவனான என்னை, ஈர்கின்ற - பிளந்து பீடிக்கிற, குணங்களையுடையான் - (ஸௌலப்யம், ஸௌந்தர்யம் முதலான) குணங்களையுடையவன்.

[76] 9. 9. 9. தூதுசெய் கண்கள் - தூதன் வேலையைச் செய்கிற கண்கள் (பேச்சாலே தன் அபிப்பிராயத்தை ஸ்பஷ்டமாய்த் தெரிவிப்பதைக் கண்களாலேயே அப்படித் தெரிவித்தல்.)

